REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஜனவரி 4 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN

தினகரன்

1932 - 2022

வரு. 91 இல. 000 | Wednesday 04, January, 2023 | 16 பக்கங்கள் | 50/-




## தினகரன் தரம் – 5 புலமைப்பரிசில் இலவச மாதிரி வினாத்தாள்

**தரம் – 5 புலமைப்பரிசில் மாதிரி வினாக்கள் அடங்கிய இலவச வழிகாட்டி தினகரனில் நாளைமறுதினம் முதல் மீண்டும் வாரம் தோறும் வெளியாகின்றது. எதிர்வரும் வெள்ளிக்கிழமை உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்!**

## தேர்தலை இடைநிறுத்தக்கோரி உயர் நீதிமன்றில் மனு தாக்கல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



உள்ளூராட்சி தேர்தலை நடத்துவது தொடர்பான நடவடிக்கைகளை இடைநிறுத்த தேர்தல் ஆணைக்குழுவுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி ஓய்வு பெற்ற இராணுவ கேர்ணலான டபிள்யு எம். ஆர். விஜேசுந்தர உச்ச நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில் அவர் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர், பிரதமர், நிதியமைச்சின் செயலாளர், சட்டமா அதிபர் உள்ளிட்ட தரப்பினரை பிரதிவாதிகளாக குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலை நடத்துவதற்கு 06

## மகநெகும பணிப்பாளர் மீதான தாக்குதல் சம்பவம்

### பாரபட்சமற்ற விசாரணைக்கு உத்தரவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பேலியகொடையிலுள்ள மகநெகும அலுவலகத்தின் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபை மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைத் தாக்குதல் திட்டமிட்ட குழுவினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

மேற்படி சம்பவங்கள் தொடர்பில் பாரபட்சமற்ற விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸார் மற்றும் குற்றத்தடுப்பு 06

## அரசின் புதிய வரிக்கொள்கையினால் பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளன

### ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தி தீர்வுகாண சியம்பலாபிட்டிய முயற்சி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய வரிக் கொள்கை தொடர்பில் எழுந்துள்ள சிக்கல்கள் சம்பந்தமாக நாளை வியாழக்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெளிவுபடுத்தவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

மேற்படி வரிக் கொள்கை தொடர்பில் தொழிற்றுறை 06

## நட்டத்தில் இயங்குகையில் போனஸ் கொடுத்த விவகாரம்:

# நிதியமைச்சின் அறிவிப்பை மீறிய இரு நிறுவனங்கள்

### ஸ்ரீலங்கன் விமான சேவை, CPC குறித்து ஜனாதிபதி விளக்கம் கோரல்



**இலட்சக்கணக்கான ரூபாவை பெருமளவு ஊழியர்கள் போனஸாக பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நட்டத்தில் இயங்கும் கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளின் ஊழியர்களுக்கு போனஸ் வழங்கவேண்டாம் என நிதியமைச்சு அறிவித்திருந்த போதும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் ஆகியன போனஸ் வழங்கியுள்ளமை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த நிறுவனங்களின் தலைவர்களிடம் விளக்கம் கோரியுள்ளார். அரசாங்கத்தின் சுற்றறிக்கைக்கு முரணாக போனஸ் வழங்கப்பட்டுள்ளதாக கிடைத்துள்ள அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஜனாதிபதி மேற்படி இரண்டு நிறுவனங்களினதும் தலைவர்களிடம் விளக்கம் கோரியுள்ளார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இரண்டு மாத சம்பளத்தை அதன் ஊழியர்களுக்கு வழங்கியுள்ளதுடன் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் அதன் அனைத்து ஊழியர்களுக்கும் ஒரு இலட்சம் 06



கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுங்கத் தீர்வையற்ற இலக்ட்ரோனிக் கடைத்தொகுதியொன்றை நேற்று(03) துறைமுக, கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா திறந்துவைத்த போது பிடிக்கப்பட்ட படம்.

வடக்கில் சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்தி

**குடிநீர் பிரச்சினையை தீர்க்க 50 நனோ நீர் சுத்திகரிப்பு தொழிற்சாலைகள்** 03



### பாடசாலைகளில் 2ஆம் வகுப்பு முதல் 11 வரை

## மாணவர்களை இணைத்துக்கொள்வதில் புதிய நடைமுறை அறிமுகமாகிறது



**01– 05 வரை வகுப்பில் 40;**
**06 – 11 வரை 45 மட்டுமே**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாடசாலைகளில் இரண்டாம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்பு வரையில் மாணவர்களை இணைத்துக்கொள்வதற்காக 06

### இலங்கை ஊடக நிறுவன தலைவர்

## குமார் நடேசனுக்கு இந்திய உயர்விருது



சமூக சேவையாளரும் ஊடகத்துறை சார் பிரதிநிதியும் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட்டின் நிர்வாக இயக்குநருமான குமார் நடேசனுக்கு இந்தியாவின் அதி உயர் விருதான பிரவாசி பாரதீய சம்மான் விருது வழங்கப்படவுள்ளது.

பிரவாசி பாரதீய சம்மான் 06

### மின்சார பட்டியல் முறையாக கிடைக்கவில்லை:

## பட்டியல் முறையாக கிடைத்ததும் நிலுவையுடன் செலுத்த தயார்

### அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தமது உத்தியோகபூர்வ இல்லத்திற்கான மின்சார கட்டணத்தை செலுத்த தாமதமானதற்கு, தமக்கு மின் கட்டண பட்டியல் முறையாக கிடைக்காமையே காரணம் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். முறையாக மின் கட்டண பட்டியல் 06

## இந்தியாவில் கைதான ISIS தீவிரவாதிகளுடன் தொடர்பு

### காத்தான்குடியில் சந்தேகநபர் ஒருவர் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இந்தியாவில் கைது செய்யப்பட்ட ஐ.எஸ். ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்தவர்களுடன் தொடர்பிலிருந்த காத்தான்குடியைச் சேர்ந்த 30 வயதுடைய சந்தேகநபரை திங்கட்கிழமை (02) இரவு பயங்கரவாத தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளதாக பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். 06

## மதுபானங்களின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் அதிகரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மதுபானங்களின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க சாராயம் போத்தலொன்றிற்காக இதுவரை அறவிடப்பட்ட வரி நூற்றுக்கு 20 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. சாராயம் போத்தலொன்றிற்கு இதுவரை அறவிடப்பட்டுவந்த 1050 ரூபா வரி 1256 ரூபாவாகவும் 1121 ரூபாவாகவிருந்த வரி 1344 ரூபாவாகவும் 06

## டீசல் விலை குறைந்தாலும் பஸ் கட்டணம் குறையாது

### மாற்றமில்லை என்கிறது தே.போ.ஆணைக்குழு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

டீசல் விலை 15 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ள போதும் பஸ் கட்டணங்களில் மாற்றம் இடம்பெறமாட்டாது என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பஸ் கட்டணத்தை குறைப்பதென்றால் டீசலின் விலை 100க்கு நான்கு வீதத்தாலாயினும் குறைவடைய வேண்டும் என்றும் தற்போதைய டீசல் குறைப்பு 06

## டீசல், மண்ணெண்ணெய் விலைகள் குறைப்பு

### திங்கள் நள்ளிரவு முதல் அமுல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வெள்ளை டீசல் மற்றும் மண்ணெண்ணெய்யின் விலைகள் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் குறைவடைந்துள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க வெள்ளை டீசல் ஒரு லீற்றரின் 06



**நாளை 05ஆம் திகதி முதல் யாழ் ரயில்சேவைகள் அனுராதபுரம் வரையே**

33 விசேட பஸ் சேவைகளை நடத்த விசேட ஏற்பாடு 03



புலிகள் மீளுருவாக்கம், ஆயுதக்கடத்தல் குற்றச்சாட்டு:

**வழக்கை இரத்துச் செய்யுமாறு சென்னை உயர் நீதிமன்றில் மனு** 03

### உரிய நேரத்தில் வாகனம் இல்லை:

## 4 வயது சிறுவன் பரிதாபகர மரணம்

### தோட்ட மக்கள் எதிர்ப்பு போராட்டம்




ஹற்றன், வெலிஓயா 22 ஆம் இலக்க தோட்டத்தில் சுகவீனமுற்றிருந்த 04 வயது சிறுவனை பாதை சீரின்மை காரணமாக உரிய நேரத்தில் வைத்தியசாலையில் அனுமதிக்கமுடியாமல் போனதால் சிறுவன் உயிரிழக்க நேர்ந்தது. இதனையடுத்து தோட்ட மக்கள் போராட்டத்தில் குதித்தனர்.

சுகவீனமுற்றிருந்த சிறுவனை, நேற்று முன்தினம் (02) உரிய நேரத்துக்கு வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு வாகனம் இருக்கவில்லை. வீதி குண்டும் குழியுமாக காணப்படுவதால் வெளியில் இருந்துகூட வாகனத்தை பெற முடியாத நிலை ஏற்பட்டது. இந்நிலையிலேயே இதற்கு மேலும் மக்கள் சாவதற்கு இடமளிக்க முடியாது என 06

## 05 பேரை கடித்து குதறி ஒருவரை பலியெடுத்த நாய்

### உரிமையாளரான பிரான்ஸ் பிரஜை கைது



பாதுகாப்பற்ற முறையில் நாயை வளர்த்த பிரான்ஸ் பிரஜையொருவர் அளுத்கம களுவாமோதர பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நாய், அளுத்கம களுவாமோதர பிரதேசத்தில் ஐந்து பேரை கடித்துக் குதறியுள்ளதுடன் ஒருவர் உயிரிழந்துமுள்ளார். இச் சம்பவத்தையடுத்தே பிரான்ஸ் பிரஜை கைது செய்யப்பட்டுள்ளார். 06

### தினேஷ் ஷாப்டர் கொலை தொடர்பில்

## இதுவரை 140 பேரிடம் பொலிஸ் வாக்குமூலம்



தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் இதுவரை 140 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் மனித கொலைகள் பிரிவு மேற்கொண்டு வருகின்றது. 06

### எதிர்வரும் சகல தேர்தல்களிலும்

## SLPP கை சின்னத்தில் வடக்கு, கிழக்கில் போட்டி

### கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்வரும் தேர்தல்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கை சின்னத்தில் போட்டியிடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா 06

90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# நகர்வலம்



### சட்டபூர்வமற்ற விதத்தில் சுற்றுலா விசாவில்

# வெளிநாட்டில் தங்கியிருக்கும் பெண்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானம்

### வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சட்டபூர்வமற்ற விதத்தில் சுற்றுலா விசா மூலம் வெளிநாட்டில் தங்கியிருக்கும் அனைத்து பெண்களையும் தடைசெய்யப்பட்ட பட்டியலில் சேர்க்கவும் அவர்களுக்கெதிராக நடைமுறை சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானித்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, தற்போது ஓமானிலுள்ள இலங்கை தூதர அலுவலகத்தின் கீழ் இயங்கும் பாதுகாப்பு விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கைப் பெண்களை மீள நாட்டிற்கு அழைத்துவருவதற்கான நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாகவும் அந்த பணியகம் தெரிவித்துள்ளது.

அவ்வாறு ஓமானில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களில் கடந்த 24 ஆம் திகதி முதற்கட்டமாக 8 பேரை நாட்டுக்கு அழைத்துவர முடிந்துள்ளதாகவும் இரண்டாவது கட்டமாக நேற்றைய தினம் 6 பெண்கள் நாட்டுக்கு அழைத்துவரப்பட்டதாகவும் அந்தப் பணியகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, தூதரகங்கள் மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் முறையாக பதிவு செய்யாது சுற்றுலா விசா மூலம் ஓமானுக்கு வேலைவாய்ப்புக்காக சென்றுள்ள 18 பெண்கள் அங்கு நிர்க்கதியாகியுள்ளதாகவும் அந்தப் பணியகம் தெரிவித்துள்ளது.

அவர்கள் பணிபுரிந்த இடத்திலிருந்து தப்பிச்சென்றுள்ள காரணத்திற்காக அந்நாட்டின் தொழில் அமைச்சினால் அவர்களை தடை செய்யப்பட்ட பட்டியலில் உள்ளீர்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சம்பந்தப்பட்ட தொழில் தருநர்களின் அனுமதியின் கீழ் அவர்களை இலங்கைக்கு அழைத்துவருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் சட்டவிரோதமாக அந்நாட்டில் தங்கியிருப்போரை இலங்கைக்கு அழைத்துவருவதற்காக விமானச்சீட்டுக்கான செலவை அவர்களின் உறவினர்கள் மூலம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்தப் பணியகம் தெரிவித்துள்ளது.

### தென் மாகாண கல்வித் திணைக்களத்தில்

# மூன்று பணிப்பாளர்கள் புத்தாண்டுடன் ஓய்வு

### பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் பலரும் ஓய்வு

**வெலிகம தினகரன் நிருபர்**

2023 புது வருடம் ஆரம்பித்திருக்கும் இந்நிலையில், ஓய்வு பெறும் வயதை பூர்த்தி செய்ததன் காரணமாக தென் மாகாண கல்வித் திணைக்களத்தில் பிரதான மூன்று பணிப்பாளர்கள் ஒரே தடவையில் ஓய்வு பெற்றுச் செல்வதால் அம்மூன்று பதவிகளும் வெற்றிடமாகியுள்ளதாக தென் மாகாண கல்வி அமைச்சு தெரிவிக்கின்றது.

தென் மாகாண கல்விப் பணிப்பாளர் நிமல் திஸாநாயக்க, உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி), உதவிப் பணிப்பாளர் திருமதி ஷந்திராவதி கபுஆரச்சி ஆகிய மூவருமே இவ்வாறு ஒரே தடவையில் ஓய்வு பெற்றுச் செல்கின்றனர்.

இது தவிர தென் மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் தென் மாகாணத்திலுள்ள வலய கல்வித் திணைக்களங்களில் கடமையாற்றிய பிரதிப் பணிப்பாளர்கள், உதவிப் பணிப்பாளர்கள் பலரும் அதேபோல் இப்பகுதியின் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் பலரும் ஓய்வு பெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# வீதி அபிவிருத்தி பணிகள் மீண்டும் ஆரம்பம்

**திறப்பனை தினகரன் நிருபர்**

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக நாடளாவிய ரீதியில் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டிருந்த வீதி அபிவிருத்தி வேலைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் சிராவஸ்திபுர நாச்சியாதீவு பிரதான வீதி, கெக்கிராவ இபலோகம ஊடான தலாவ வரையிலான வீதிகளின் அபிவிருத்தி வேலைகள் தற்சமயம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பிட்ட இவ் வீதிகளின் அபிவிருத்தித் திட்டம் நிறைவடைந்த பின் இப் பிரதேச விவசாயிகள் மற்றும் பொது மக்கள் அதிக நன்மைகளை அடைந்து கொள்ளும் வாய்ப்பை பெறுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# சிறுமி மீதான பாலியல் வல்லுறவு; குற்றவாளிக்கு 45 வருட கடூழிய சிறை

### அநுராதபுரம் மேல் நீதிமன்றம் தீர்ப்பு

**அநுராதபுரம் மாவட்ட குறூப் நிருபர்**

இளம் வயது சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தியமை நிரூபிக்கப்பட்டதால் திருமணமான நபரொருவருக்கு அநுராதபுரம் மேல் நீதிமன்ற நீதிபதி விராஜ் ரணதுங்க நாற்பத்தைந்து (45) வருடகால சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

இவ்வாறு சிறைத்தண்டனை விதிக்கப்பெற்றவர் நொச்சியாகம பொலிஸ் பிரிவில் வசிக்கும் குடும்பஸ்தராவார். கடந்த 2017.01.08 ஆம் திகதி முதல் இடம்பெற்ற இவ் வழக்கு விசாரணைகளின் போது குற்றவாளியின் மீது சுமத்தப்பட்டிருந்த மூன்று குற்றச்சாட்டுக்களும் எந்த ஒரு சந்தேகமுமின்றி நிரூபிக்கப்பட்டது. இவ்வாறு நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டு ஒவ்வொன்றுக்கும் தலா பதினைந்து (15) வருடங்கள் வீதம் மொத்தமாக 45 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக பாதிக்கப்பட்ட சிறுமிக்கு மூன்று இலட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கவேண்டும் எனவும் நஷ்டஈட்டுத் தொகையை செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் மூன்று வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும், சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் ஒவ்வொன்றுக்கும் தலா பத்தாயிரம் ரூபா வீதம் தண்டம்செலுத்தவேண்டும் எனவும் இத்தொகையை செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் மூன்று மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிபதி தனது தீர்ப்பை அறிவித்து உத்தரவு பிறப்பித்தார்.

கடந்த ஐந்து வருட காலமாக இந்த வழக்கு தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வந்ததுடன் ஆரம்பகட்ட விசாரணைகள் நொச்சியாகம நீதிமன்றத்திலும் மேலதிக விசாரணைகள் சட்டமா அதிபரின் ஆலோசனைகளுக்கு அமைவாக அநுராதபுரம் மேல் நீதிமன்றத்திலும் நடைபெற்றன. நொச்சியாகம பொலிஸார் குற்றவாளியைக் கைது செய்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மலாய் இஸ்லாமிய செயலகத்தின் இணைப்பாளராக ஜெமீல் நியமனம்



**(கல்முனை விசேட நிருபர்)**

மலேசியாவின் மலாக்கா மாநில ஆளுநர் துன் முஹமட் அலி ருஸ்தாம் தலைமையிலான மலாய் இஸ்லாமிய சர்வதேச செயலகத்தின் இலங்கைக்கான இணைப்பாளராக முன்னாள் கிழக்கு மாகாண சபையின் குழுத் தலைவரும் College of Management and Technology (CMT Campus) தவிசாளருமான கலாநிதி ஏ.எம்.ஜெமீல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள மலாக்கா ஆளுநரின் பங்குபற்றலுடன் திங்கட்கிழமை (02) மாலை, கொழும்பில் இடம்பெற்ற வைபவம் ஒன்றின்போதே அவரால் இந்நியமனம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, கலாநிதி ஏ.எம். ஜெமீலின் அழைப்பின் பேரில் மலாக்கா மாநில ஆளுநர் துன் முஹமட் அலி ருஸ்தாம், இன்று புதன்கிழமை (04) கல்முனைக்கு விஜயம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சிறைத்தண்டனை அனுபவித்து வரும் குறைந்த வயது

# சிறுவர்களுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கவேண்டும்

### சட்டத்தரணி தர்ஷன குருப்பு ஜனாதிபதிக்கு கடிதம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சிறுவர்களாக இருந்த காலத்தில் இழைத்துள்ள குற்றங்கள் காரணமாக மரண தண்டனை வழங்கப்பட்டு இதுவரை சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகளை ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை வழங்கப்பட வேண்டும் என சட்டத்தரணி தர்ஷன குருப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் மூலம் கடந்த ஒக்டோபர் மாதம் வழங்கப்பட்டுள்ள உத்தரவுக்கிணங்க குற்றம் செய்த போது 16 வயதுக்குக் குறைந்தவர்களாக உள்ள சிறுவர்களுக்கு மரண தண்டனை வழங்கக்கூடாது என்றும் அவ்வாறானவர்களின் குற்றம் தொடர்பில் தீர்ப்புகள் வெளியாகியபோது அவர்களின் வயது 18 ஐத் தாண்டியிருந்ததாகவும் எனினும் அவர்களுக்கு மரண தண்டனையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது என்பதையும் அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சட்டத்தரணி தர்ஷன குருப்பு, நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, நீதியமைச்சின் செயலாளர் வசந்த பெரேரா, மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் ரோகினி மாரசிங்க உள்ளிட்டோருக்கும் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தின் பிரதிகளை அனுப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

18 வயதுக்குக் குறைந்த வயதில் குற்றங்களைப் புரிந்து அந்தக் குற்றங்களுக்காக மரணதண்டனை பெற்றுள்ள பெருமளவானோர் தற்போது சிறைத் தண்டனை அனுபவித்து வருகின்றனர். அவர்கள் தொடர்பில் அறிக்கை பெற்றுக்கொண்டு விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி அவர்களுக்கு ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் அக்கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.



மலேசியா நாட்டின் புதிய தூதுவர் அலுவலகம் கொழும்பு பான்ஸ் பிளேஸில் நேற்று முன்தினம் (02) திறந்து வைக்கப்பட்டது. மலேசியா நாட்டிலிருந்து வருகை தந்த மலாக்கா ஆளுனர் தத்தோ டொக்டர் மொஹமட் அலி மொஹமட் ரஸ்டான் பிரதம அதிதியாக கலந்து கொண்டு திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மலேசிய நாட்டின் இலங்கைக்கான தூதுவர் தத்தோ டான் யங் தாய், சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் உட்பட கலந்துகொண்டவர்களில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம். (படம் அஷ்ரப் ஏ சமத்)

# மண்வெட்டியால் அடித்து பெண்ணொருவர் கொலை

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மஹவிலச்சிய ஹெலம்பகஸ்வெவ பகுதியில் மண்வெட்டியால் அடித்து பெண் ஒருவரை கொலை செய்துள்ள சம்பவமொன்று பதிவாகியுள்ளதாக மஹவிலச்சிய பொலிஸார் (31) தெரிவித்தனர். மஹவிலச்சிய பேமடுவ ஹெலம்பகஸ்வெவ பகுதியில் கடந்த 31 ஆம் திகதி பிற்பகல்வேளையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மஹவிலச்சிய, பேமடுவ,ஹெலம்பகஸ்வெவ பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட 76 வயதுடைய பெண் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது தெரிய வந்துள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, உயிரிழந்த பெண்ணுக்கும் சந்தேக நபருக்கும் இடையில் மிக நீண்ட நாட்களாக ஏற்பட்டு வந்த காணி தகராறே இக்கொலைக்கு காரணம் என விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய 52 வயதுடைய சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹவிலச்சிய பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# எனசல்கொல்ல மத்திய கல்லூரியில் ஒரு நாள் ஊடகக் கருத்தரங்கு





ஊடகத்துறையில் நன்றாக அறிவூட்டப்பட்ட பல்துறை மற்றும் முனைப்பான மாணவர் சமூகத்தினை உருவாக்கும் நோக்கில் கண்டி எனசல்கொல்ல மத்திய கல்லூரியின் 2005/2008ம் ஆண்டு வகுப்பினர் ஒன்றிணைந்து அமைத்துக் கொண்ட 'REAL ECCIANS' அமைப்பினால் கல்லூரியில் பலமான ஊடகக் கழகமொன்றினை அமைக்கும் நோக்கில் ஏற்பாடு செய்திருந்த ஒரு நாள் ஊடக கருத்தரங்கு கடந்த டிசம்பர் மாதம் இறுதி வாரத்தில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

தினகரன் தேசிய நாளிதழ் ஊடக அனுசரணையில் நடாத்தப்பட்ட இக்கருத்தரங்கில் தெல்தோட்டை ஊடக மன்றத்தின் முன்னணி ஊடகவியலாளர்களால் விரிவுரைகள் நடாத்தப்பட்டன. இந்த கருத்தரங்கின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினர் மேற்கொண்டனர்.

இந்த கருத்தரங்கின் மூலம் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களைக் கொண்டு பாடசாலையின் ஊடகக் கழகம் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### குவைத் நாட்டின் நிதியுதவியில்

# கலாவெவ கிராம மக்களுக்கு குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம்

### சுமார் 400 குடும்பங்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைவர்



**கெக்கிராவ குறூப் நிருபர்**



அநுராதபுரம் மாவட்டம், கலாவெவ அமுனவெட்டிய கிராம மக்களின் நீண்டகால தேவையாகவிருந்த குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் மக்கள் பாவனைக்காக பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் மற்றும் அல்ஹிமா பணிப்பாளர் அஷ்ஷெய்க் நூருல்லாஹ் ஆகியோர் இணைந்து மக்கள் பாவனைக்காக அண்மையில் திறந்து வைத்தனர்.

அல்ஹிமா இஸ்லாமிய அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் நூருல்லாஹ் (நளீமி) யிடம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் விடுத்த வேண்டுகோளின்பேரிலேயே இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டம் குவைத் நாட்டின் சுமார் 10 இலட்சம் நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

திறப்பு விழா நிகழ்வில் அமுனவெட்டிய மஸ்ஜிதுன் நூராணியா பள்ளிவாசல் தலைவர், நலன்விரும்பிகள், ஊர்வாசிகள் என பலரும் கலந்துகொண்டதோடு இத்திட்டத்தின் மூலம் பிரதேசத்திலுள்ள சுமார் 400 இற்கும் அதிகமான குடும்பங்கள் பயன்பெறுமெனவும் பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் தெரிவித்தார்.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஜனவரி 4 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN



**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 05.02 |
| லுஹர் | 12.17 |
| அஸர் | 03.38 |
| மஃரிப் | 06.08 |
| இஷா | 07.23 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் மார்கழி 20

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



ரயில்வே துறையில் ஓய்வு பெற்றுச் செல்லும் அதிகாரிகளுக்கு பதிலாக புதிய நியமனங்களை வழங்கும் செயற்பாட்டின் கீழ் புதிதாக ரயில் நிலைய அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான நியமனக் கடிதங்களை போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் அமைச்சர் பந்துல குணவர்தன உத்தியோகபூர்வமாக வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்.

## உணவு விஷமானதால் 114 ஊழியர்கள் ஆஸ்பத்திரியில்

**கொக்கல ஏற்றுமதி வலயத்தில் சம்பவம்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொக்கல ஏற்றுமதி வலயத்தில் பணிபுரியும் 114 ஊழியர்கள் உணவு விஷமானதால் சுகவீனமுற்று வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கொக்கல ஏற்றுமதி வலயத்தில் இயங்கும் ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்களே இவ்வாறு சுகவீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் அனைவருமே பெண் ஊழியர்கள் என்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்துபசாரத்தில்

வழங்கப்பட்டுள்ள உணவுகளே விஷமாகி

06

### வடக்கில் சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்தி

## குடிநீர் பிரச்சினையை தீர்க்க 50 நனோ நீர் சுத்திகரிப்பு தொழிற்சாலைகள்

**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவிப்பு**

வடமாகாணத்தில் அப்பிரதேச மக்களின் சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்தி குடிநீர் பிரச்சினையை தீர்க்க 50 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பின் அமைச்சின் கீழ் செயற்படும் மீள்குடியேற்றப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் தலா 23 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் நிறுவப்பட உள்ளதாக அப்பிரிவின் செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர் வழங்க வேண்டும் என்ற அரசின் கருத்தின் கீழ் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரையின் பிரகாரம் அந்த அமைச்சின் கீழ் மீள்குடியேற்றப் பிரிவு, சமூக நீர் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இந்த நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நாள் ஒன்றுக்கு 2000 லீற்றர் தண்ணீரை முழுவதுமாக சுத்தம் செய்யும் திறனைக் கொண்டுள்ளது என்று

06

## இலங்கையின் 33 உணவுப் பொருட்கள் சீனாவுக்கு ஏற்றுமதி

**ஒப்பந்தம் கைச்சாத்திட அமைச்சரவை அனுமதி**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் 33 உணவுப் பொருட்கள் சீனாவுக்கு ஏற்றுமதிசெய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் அதற்கு சீனாவின் சுங்க நிர்வாகத்தின் மூலம் அனுமதி கிடைத்துள்ளதாகவும் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அவற்றுள் 29 உற்பத்திப்பொருட்கள் சமுத்திர மற்றும் கடல் உற்பத்தி சார்ந்தவை என்றும் சீன அரசாங்கத்தினால் முடிவுசெய்யப்பட்டுள்ள 38 இலங்கை நிறுவனங்கள் அந்த உற்பத்திகளின் ஏற்றுமதியாளர்களாக செயற்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சீனாவுக்கு அந்த உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதிசெய்வதற்கு தேவையான ஒத்துழைப்புக்களை வழங்கவும் அதனை ஊக்குவிக்கும் வகையில் அந்த உற்பத்திப் பொருட்களை பரீட்சித்தல் அதன் தரம் சுகாதாரத் தன்மை தொடர்பில் கவனம் செலுத்தப்படுவதுடன் சீன அரசாங்கத்தின் சுங்க நிர்வாகம் மற்றும் கடற்றொழில் அமைச்சு ஆகியன ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடவுள்ளது.

அதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் விளக்கமளிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

## நாளை 05ஆம் திகதி முதல் யாழ். ரயில்சேவைகள் அனுராதபுரம் வரையே

**33 விசேட பஸ் சேவைகளை நடத்த விசேட ஏற்பாடு**

**யாழ்.விசேட நிருபர்**

கொழும்பிலிருந்து வட மாகாணத்துக்கான ரயில் சேவைகள் நாளை 05ஆம் திகதியுடன் அனுராதபுரத்துடன் மட்டுப்படுத்தப்படவுள்ளதையடுத்து யாழ்ப்பாணம் கொழும்பு பஸ் சேவைக்காக மேலதிகமாக 33 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக வட மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் ரவீந்திரன் நேற்று தெரிவித்துள்ளார்.

வடமாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,



கொழும்பு யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவை, வவுனியா அனுராதபுரம் பாதை திருத்த வேலை காரணமாக குறைந்தது ஆறு மாதங்களுக்கு ரயில் சேவை இடைநிறுத்தப்படுகின்றது .

அதனால் வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபை ,தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ரயில்வே திணைக்களத்துடன் இணைந்து சில மாற்று நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றோம்.

06

### புலிகள் மீளுருவாக்கம், ஆயுதக்கடத்தல் குற்றச்சாட்டு:

## வழக்கை இரத்து செய்யுமாறு சென்னை உயர் நீதிமன்றில் மனு

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**



விடுதலைப்புலிகள் இயக்கத்தை மீளுருவாக்க போதைப்பொருள் மற்றும் ஆயுதங்களை கடத்தியதாக பதிவு செய்யப்பட்ட வழக்கை இரத்துச் செய்யக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரவுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

வழக்கை இரத்துச் செய்யக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் மனுதாரர் குறிப்பிட்டிருப்பதாவது,

என் பெற்றோர் 1947ஆம் ஆண்டுக்கு முன்பே தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்கு சென்று குடியேறினர். நான் 1966ஆம் ஆண்டு இலங்கையில் பிறந்தேன். கடந்த 2003ஆம் ஆண்டு தமிழ்நாடு வந்து கல்பாக்கத்தில் தங்கியிருந்தேன். அப்போது, என் மீது போதைப்பொருள் கடத்தல் வழக்கை தமிழ்நாடு போலீசார் பதிவு செய்தனர். இந்த வழக்கில் 05 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

06

## பெற்றோல் மற்றும் டீசல் மீதான வரிகள் அதிகரிப்பு

**நிதியமைச்சு நேற்று அறிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஒக்டேன் 92 மற்றும் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றிற்கான வரி 27 ரூபாவிலிருந்து 52 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் சுப்பர் டீசலின் வரியும் 13 ரூபாவிலிருந்து 38 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வரி அதிகரிப்பு இடம்பெற்றுள்ள போதும் எரிபொருட்கள் மீதான விலை அதிகரிப்பு தொடர்பில் எந்தவித திருத்தங்களும் அறிவிக்கப்படவில்லை.

## மூன்று இலட்சியங்களை முன்னிறுத்திய எமது சிந்தனைகளே இன்று யதார்த்தமாகிறது

**ஊடகவியலாளர் சிவகுமாரின் நினைவேந்தலில் அமைச்சர் டக்ளஸ்**

தேசிய நீரோட்டத்தில் இணைதல், பாராளுன்ற அரசியலை பலப்படுத்தல் மற்றும் ஜனநாயக வழியில் அரசியல் தீர்வுக்கு முயற்சித்தல் போன்ற மூன்று இலட்சியங்களை திடப்படுத்தியே இந்தியாவிலிருந்து 1990 இல், மீண்டும் இலங்கைக்கு திரும்பியதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். தற்போது இந்த மூன்று விடயங்களுமே சாத்தியப்பட்டுள்ளதென்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

மறைந்த ஊடகவியலாளர் சிதம்பரப்பிள்ளை சிவகுமாரின் வருடத்திதி நிகழ்வில் நேற்று முன்தினம் (02) உரையாற்றுகையிலே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.அமரர் சிவகுமாரின் மனைவியான பிரபல ஊடகவியலாளர் வாசுகி சிவகுமார் மற்றும் அவரது உறவினர்கள் ஏற்பாடு செய்த இந்நிகழ்வில், பெருமளவான ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.



இங்கு உரைநிகழ்த்திய அமைச்சர் கூறியதாவது,

தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் 1985க்குப் பின்னர் நடந்த சகோதரப் படுகொலைகளால் பலவீனமடையத் தொடங்கியது. இதனால் இந்திய, இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு ஜனநாயக வழிக்குத் திரும்புவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. 1986 இல் இந்தியாவுக்குச் செல்ல நேரிட்ட எங்களை, 1990 இல் மீண்டும் இலங்கைக்கு வர வைத்ததும் இலங்கை இந்திய ஒப்பந்தமே! அங்கிருந்து வரும்போது மேற்சொன்ன மூன்று விடயங்களையுமே மனதில் திடப்படுத்தினேன். இன்று, இவ்விடயங்கள்தான் சாத்தியப்படும் நிலையிலுள்ளன.எங்களது அரசியல் சிந்தனை, வழிகாட்டல்களுக்கு அமரர் சிவகுமாரின் சிந்தனைகள் மற்றும் எழுத்துக்கள் மிகப் பக்கபலமாக இருந்தது. "அமீன்" என்ற புனைப்பெயரில் நண்பர் சிவகுமார் எழுதியவைதான், இன்று யதார்த்தமாகிறது. அன்னாரின் இழப்பு என்னை மிகவும் துயரப்படுத்தியது. அவருக்கான "திதி" நிகழ்வில் கலந்துகொண்டு குடும்பத்தாருக்கு ஆறுதல் சொல்லக் கிடைத்ததை பெரும் ஆறுதலாகக் கருதுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.





2023 புத்தாண்டு கடமையேற்பு வைபவம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமைக் காரியாலயத்தில் தலைவர் ரஜீவ் சூரியஆரச்சி தலைமையில் இடம்பெற்றது. இவ் வைபவத்தில் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், பொது முகாமையாளர் பொறியியலாளர் ஜானக்க உட்பட அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் கலந்து சிறப்பித்தனர்.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 243.91 | 255.11 |
| கனடியன் டொலர் | 263.86 | 275.73 |
| யூரோ | 382.82 | 398.41 |
| ஜப்பான் யென் | 2.7603 | 2.8723 |
| சிங்கப்பூர் டொலர் | 267.84 | 279.09 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 433.54 | 450.25 |
| சுவிஸ் பிராங்க் | 387.22 | 405.66 |
| அமெரிக்க டொலர் | 360.22 | 371.59 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 963.09 | கட்டார் ரியால் | 99.37 |
| குவைத் டினார் | 1,186.90 | சவூதி ரியால் | 96.59 |
| ஓமான் ரியால் | 943.09 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.86 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சுபகிருது வருடம் மார்கழி மாதம் 20ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஜுமாதல் ஆகிராஹ் பிறை 10

### குறள் தரும் சிந்தனை



உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர்

பயனை எண்ணிப்பார்த்து அதற்காகவே நட்புக் கொள்பவரும், விலைமகளிரும், கள்வரும் ஆகிய இந்த மூவரும் ஒரே மாதிரியானவர்களே ஆவார்கள்.

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஆக்கபூர்வமான முன்னெடுப்புகள்

நாட்டில் நிலவிவரும் இனப்பிரச்சினைக்கு உறுதியான தீர்வைக் காண்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் அடிப்படையில் இப்பிரச்சினைக்கான தீர்வை விரைவாகக் காண்பதற்கான இணக்கப்பாட்டை எட்டும் வகையிலான கலந்துரையாடல்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

நாட்டின் 75 வது சுதந்திர தினம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி கொண்டாடப்பட உள்ளது. அதற்கு முன்னர் நாட்டில் நிலவும் இனப்பிரச்சினைக்கு உறுதியான தீர்வைக் காண்பதற்கான இணக்கப்பாட்டை எட்டுவதற்கான கலந்துரையாடலுக்கு கடந்த நவம்பர் இறுதியில் ஜனாதிபதி அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தார். அதனை அடிப்படையாகக் கொண்டு டிசம்பர் மாத நடுப்பகுதியில் முதலாவது கலந்துரையாடலும் இடம்பெற்றுள்ளது. அதனைப் பின்புலமாகக் கொண்டு இம்மாதம் இரண்டாவது வாரம் முதல் தொடர் கலந்துரையாடலுக்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சூழலில் கருத்து தெரிவித்துள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன், 'எமது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை எட்டுவதற்குரிய சந்தர்ப்பமொன்று கிட்டியுள்ளது. அந்த சந்தர்ப்பத்தை நாங்களாக புறமொதுக்கியதாக இருக்கக்கூடாது. தற்போதைய விரைந்த முயற்சிகள் வெற்றி பெற எம்மால் இயலுமான ஒத்துழைப்புக்களை வழங்க உள்ளோம்' என்றுள்ளார்.

உண்மையில் இந்த அறிவிப்பு பெரிதும் வரவேற்கத்தக்கதாகும். நாட்டில் பல தசாப்தங்களாக நிலவிவரும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும். இப்பிரச்சினை இனியும் நீடிக்க இடமளிக்கப்படலாகாது என்பது தான் நாட்டை உண்மையாக நேசிக்கும் அனைத்து தரப்பினரதும் எதிர்பார்ப்பும் கருத்தும் ஆகும்.

இந்நாட்டில் நிலவிவரும் இனப்பிரச்சினை தோற்றம் பெற்று பல தசாப்தங்கள் கடந்து விட்டது. இப்பிரச்சினை காரணமாக நாடும், இத்தேச மக்களும் இழந்தவை கொஞ்ச நஞ்சமல்ல. அவ்வாறான இழப்புக்களை கனவில் கூட எண்ணிப் பார்த்திடக்கூடாது என்பதிலும் நாட்டை உண்மையாக நேசிக்கும் அனைத்து தரப்பினரும் உடன்பாடாகவே உள்ளனர்.

இந்த நிலையில் இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான இணக்கப்பாடுகளை எட்டுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சூழலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர் தெரிவித்திருக்கும் கருத்து இம்முயற்சிகளுககு மேலும் பலம் சேர்ப்பதாகவே அமைந்துள்ளது.

தற்போதைய சூழலில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான இணக்கப்பாட்டை எட்டுவதற்கான முயற்சிகளுக்கு மேலும் பலம் சேர்க்கப்பட வேண்டும். அதற்காக ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். ஜனாதிபதியின் அழைப்பின் அடிப்படையில் இடம்பெறும் இம்முயற்சிகளை இணக்கப்பாட்டை எட்டுவதற்கான சிறந்த சந்தப்பமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கான பொறுப்பும் கடமையும் அனைத்து தரப்பினருக்கும் உள்ளது.

இதைவிடுத்து இப்பிரச்சினையிலும் அதற்கான முயற்சிகளிலும் அற்ப அரசியல் இலாபம் தேட முயற்சிப்பது, இப்பிரச்சினையை மேலும் நீடிக்க வழிவகை செய்வதாகவே அமையும். அதற்கு எவரும் துணை போய்விடலாகாது என்பது தான் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

அதனால் இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக அனைத்து தரப்பினரும் இதய சுத்தியுடன் செயற்பட வேண்டும். இனியும் இந்நாட்டில் இனப்பிரச்சினை நீடிக்கத் தேவையில்லை என்ற நிலைப்பாடு அனைவருக்கும் அவசியமானது. இந்நாட்டைச் சேர்ந்த அனைத்து மக்களும் ஒரு தாய்வயிற்று பிள்ளைகள் போல் வாழும் சூழல் உருவாக ஒவ்வொருவரும் பங்களிக்க வேண்டும்.

பிரச்சினைகளை பேச்சுவார்த்தைகள், கலந்துரையாடல்கள் மூலம் தீர்த்துக்கொள்ள முடியும். பேச்சுவார்த்தை மற்றும் கலந்துரையாடல்கள் மூலம் தீர்வு காண முடியாத பிரச்சினைகள் இருக்க முடியாது. அதனால் ஜனாதிபதியின் அழைப்பையும் அதனை அடிப்படையாகக் கொண்ட முயற்சிகளையும் நல்லதொரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்ளத் தவறவிடக் கூடாது. அதனால் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி செயற்படுவது இன்றியமையாததாகும்.

தற்போது பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீட்சிபெற்றுக் கொண்டிருக்கிறது. என்றாலும் முழுமையான பொருளாதார மீட்சியையும் அபிவிருத்தியையும் கொண்ட நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது பெரிதும் பயனளிக்கக்கூடியதாக இருக்கும். இப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவது சவால் மிக்க காரியமாக இருக்கும். இதனைக் கருத்தில் கொண்டு தான் இனப்பிரச்சினைக்கு உறுதியான தீர்வைக் காண்பதற்கான இணக்கப்பாட்டை 75 வது சுதந்திர தினத்திற்கு முன்னர் காண்பதில் உறுதியான நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதன் ஊடாக பேதங்களுக்கு அப்பாலான வளமானதும் சுபீட்சம் மிக்கதுமான தேசத்தை கட்டியெழுப்பக்கூடியதாக இருக்கும். அதுவே நாட்டின் தேவையும் மக்களின் எதிர்பார்ப்பும் ஆகும்.

ஆகவே இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் நாட்டினதும் மக்களிதும் எதிர்பார்ப்புகளையும் தேவைகளையும் கருத்தில் கொண்டு சகலரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். அதுவே காலத்தின் அவசியத் தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# புத்தாண்டில் இயற்கை விவசாய தற்சார்பை நோக்கிய பயணம்

## உள்நாட்டு உணவு உற்பத்தியை அதிகரிக்க 'புதியவெளிச்சம்' அமைப்பு முன்னெடுத்துள்ள முயற்சி

போரினால் சிதைந்து போன சமூகத்தை முன்னேற்றும் நோக்கத்தைக் கொண்டு பல்வேறு சமூகச் செயற்பாடுகளை 2018 ஆம் ஆண்டு முதல் மேற்கொண்டு வருகின்ற புதிய வெளிச்சம் அமைப்பு, ஒரு முக்கிய செயற்பாடாக இயற்கை விவசாயத்தை மக்கள் மத்தியில் மேலும் விரிவாக கொண்டு செல்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றது.

உணவுப் பாதுகாப்பின்மையால் ஏற்பட்டுள்ள சவால் மிகுந்த நிலைமையை எதிர்கொள்ளும் வகையில் மக்கள் மத்தியில் தன்னம்பிக்கையையும் வாழ்க்கையில் மாற்றங்களையும் ஏற்படுத்தும் நோக்கத்துடன் இந்தச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இயற்கை விவசாயத்தின் மூலம் உணவுத் தற்சார்பு நிலைமையை மக்கள் மத்தியில் விரிவாக்கம் செய்து சமூகத்தை முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்வதே இந்த வேலைத்திட்டத்தின் அடிப்படை இலக்கும் நோக்குமுமாகும் என்று புதிய வெளிச்சம் அமைப்பின் இணைப்பாளர் குலசிங்கம் வசீகரன் கூறுகின்றார்.

உணவு தற்சார்புக்கு அடிப்படையாக இருப்பது விவசாயம். வேளாண்மையின் முக்கிய கூறுகளாகிய கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு என்பவற்றையும் இணைத்து ஒருங்கிணைந்த பண்ணையாக மாற்றுவதன் ஊடாக உணவு தற்சார்பு, பொருளாதார தற்சார்வு நிலைமையை நோக்கி, ஒரு தொடர் நிகழ்வுகளின் மூலம் மக்களை முன்னகர்த்திச் செல்வதற்கு இந்தச் செயற்பாட்டில் திட்டமிடப்பட்டிருக்கின்றது.

"இவ்வாறான செயற்பாடுகளுக்கு ஏதுவாக எம்முன்னே உள்ள வாய்ப்புக்கள் அனைத்தையும் கையிலெடுத்து செயற்பட உள்ளோம். முதலில் ஒன்றிணைத்தல், பயிற்சிகள் வழங்குதல் பின்பு அவர்களுக்கு என்ன உதவிகள் தேவையோ அவற்றை அரச திணைக்களங்களினூடாகவோ, நிறுவனங்களின் மூலமோ, புலம்பெயர்ந்துவாழும் ஈழத்தமிழர்களின் மூலமோ பெற்றுக்கொடுப்பதையும் நோக்கமாகக் கொண்டு செயற்படவுள்ளோம்" என்று வசீகரன் குறிப்பிடுகின்றார்.

அந்த வகையில் இந்தப் புதிய வருடத்தில் தமிழ்நாட்டிலிருந்து இயற்கை வேளாண் விஞ்ஞானிகளான பாமயன், சுந்தரராம் ஆகியோர் இந்த வேலைத் திட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளார்கள். இவர்களுடன் தமிழ்நாடு இயற்கை விவசாய யுடியுப் சேனலைச் சேர்ந்த ராஜசேகர் இந்தச் செயற்திட்டத்தில் கலந்து கொள்ள உள்ளார். இலங்கையைச் சேர்ந்த இயற்கை விவசாயச் செயற்பாட்டாளர் நிஹால் ரணசிங்கவும் கலந்து கொள்ளவுள்ளார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த இயற்கை வேளாண் விஞ்ஞானி பாமயன் தமிழ்நாட்டில் இயற்கை வேளாண்மை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய துறைகளில் 30 ஆண்டுகளாகச் செயற்பட்டு வருவதுடன், இந்தத் துறை சார்ந்த 22 நூல்களை எழுதி வெளியிட்டிருக்கின்றார். அத்துடன் இயற்கை வேளாண் தொடர்பில் சிறந்த பயிற்சியாளராகிய இவர், தமிழ்நாடு உட்பட பல்வேறு மாநிலங்களில் 29 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்குப் பயிற்சியளித்துள்ளார். இவரது பயிற்சிப் பணி அமெரிக்கா, பங்களாதேஷ், மலேசியா போன்ற நாடுகளிலும் விவசாயிகள் மத்தியில் பிரபல்யம் பெற்றிருக்கின்றது.




தமிழ்நாட்டில் மாவட்டம் தோறும் மாதிரி இயற்கை வேளாண் பண்ணைகளை உருவாக்கியுள்ளதுடன், இந்தியாவிலேயே ஒரு பெரிய முயற்சியாக சுமார் 100 ஏக்கரில் கூட்டுப் பண்ணை ஒன்று தொடங்கப்பட்டிருக்கின்றது. மேலும் 'Eco village' என்ற பெயரில், 100 பேர் சேர்ந்து 100 ஏக்கரில் அவர்களுக்கு தேவையான ஒரு தற்சார்பு கிராமம் ஒன்றும் இவரது முயற்சியில் உருவாக்கப்பட்டிருக்கின்றது.

இயற்கை வேளாண் விஞ்ஞானி சுந்தரராமன் இயற்சை வேளாண் துறையில் 40 வருடகால அனுபவத்தைக் கொண்டிருக்கின்றார். தமிழ்நாட்டின் இயற்கை வேளாண்மைக்கான முதலாவது ஆய்வு மையமாக இவரது இயற்கை வேளாண் பண்ணையே செயற்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இயற்கை வழியில் பல உயிரியல் கரைசல்கள், பூச்சி விரட்டிகள் என்பவற்றை கண்டுபிடித்து மக்கள் மத்தியில் கொண்டு சேர்த்து வருகின்ற இவர், 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளதன் மூலம் இயற்சை வேளாண் துறையின் சிறந்த பயிற்சியாளராகத் திகழ்சின்றார்.




தமிழ்நாடு இயற்கை விவசாய யூடியூப் சேனல் SIRKALI TV ஐச் சேர்ந்த ராஜசேகர் தனது யூடியூப் சேனலாகிய SIRKALI TV ஐ விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மையின் பல்வேறு விடயங்களைத் தெளிவுபடுத்துவதற்கான ஊடகத் தளமாகப் பயன்படுத்தி பெரும்பங்காற்றியுள்ளார்.

விவசாய உற்பத்திகளுக்கான சந்தைவாய்ப்பைப் பெருக்கி, விவசாயிகளின் இயற்கை விவசாய தொழில் நுட்ப அறிவை மேற்படுத்தவும், விழிப்புணர்வை அதிகரிக்கவும் தமிழ்நாட்டிலிருந்து ராஜசேகர் அழைக்கப்பட்டுள்ளார். இவரின் ஊடாக எமது விவசாயிகளின் வளர்ச்சியை உலகறியச் செய்வதும் முக்கிய நோக்கமாகும்.

இலங்கை விவசாய யூடியூப் சேனலைச் சேர்ந்த நிஹால் ரணசிங்க குளியாப்பிட்டியைச் சேர்ந்தவர். இயற்கை விவசாயத்தில் நீண்டகாலமாக வெற்றிகரமாக ஈடுபட்டிருப்பவர். இயற்கை விவசாயப் பயிற்சியாளரும்கூட. இயற்கை விவசாயம் பற்றிய பல்வேறு விடயங்களில் ஊடகங்களில் தனித்துவமாக விவசாயிகளுக்கு வழங்குவதுடன், விவசாயிகளின் இயற்கை வேளாண் முன்னேற்றத்தையும் வெற்றியையும் கொண்டாடி வருகின்றார்.

'போக்குவரத்து வசதிகளை வழங்கினால் எங்கேயும் வந்து இலவசமாக பயிற்சி வழங்கத் தயாராக இருக்கின்றேன்' என்று இவர் பகிரங்க அறிவித்தல் விடுத்திருக்கின்றார். இவரது அனுபவத்தையும் பங்களிப்பையும் எமது விவசாயிகளின் நலன்களுக்கும் முன்னேற்றத்திற்கும் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக குலசிங்கம் கூறுகின்றார்.

ஹற்றன், நுவரெலியா, மட்டக்களப்பு, மன்னார், கிளிநொச்சி யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் 2022 டிசம்பர் 30 ஆம் திகதி ஆரம்பமாகி, 2023 ஜனவரி 14 வரையில் விவசாயிகளுக்கான பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன. அத்துடன் மாணவர்களுக்கான 'SIRKALI TV 2022' பரிசளிப்பு மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் பயன்பாட்டில் உள்ள சகலவிதமான விவசாயத்துக்கான விதைகளையும் பயன்படுத்தி, விதைகளை பன்மடங்கு பெருக்கும் நோக்கத்துடன் 'விதைப் பகிர்வகங்களை' வடக்கு, கிழக்கு மாகாணத்தில் ஆரம்பித்து வைப்பதற்கும், ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த விதைப் பகிர்வகத்தின் ஊடாக பாரம்பரிய விதையினங்களை அழிவிலிருந்து காப்பாற்றி, விதைத் தட்டுப்பாட்டை நீக்கவும் முடியும் என 'புதிய வெளிச்சம்' அமைப்பினர் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர்.

ஜனவரி 8ஆம் திகதி முதல் 14ஆம் திகதிவரை முன்னெடுப்படவுள்ள 'இயற்கை விவசாய வாரம் 2023' இன் அங்கமாகவும், இயற்கை விவசாயம் சார்ந்து 'புதியவெளிச்சம்' முன்னெடுத்த செயற்பாடுகளின் ஐந்து வருட பூர்த்தியை முன்னிட்டும், இம்முறை வடமாகாணம், கிழக்கு மாகாணம் மற்றும் மலையகம் என பரந்துபட்ட பிரதேசங்களில் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் நிகழ்வுகளை 'புதிய வெளிச்சம்' அமைப்பினர் ஒழுங்கு செய்திருக்கின்றனர்.

இந்த விவசாய வார நிகழ்வுகளில் அனைவரையும் பங்கேற்குமாறும் தற்சார்பு உணவு உற்பத்தி முயற்சிகளுக்கான ஒத்துழைப்பாக, முதலீடுகளையும் சந்தை வாய்ப்பு உள்ளிட்ட வாய்ப்புக்களையும் வழங்குமாறும் புலம்பெயர் மக்களிடம் 'புதிய வெளிச்சம்' அமைப்பினர் அழைப்பு விடுத்திருக்கின்றனர்.

**இயற்கை வேளாண் விவசாயப் பயிற்சி மற்றும் நிகழ்வுகள் தொடர்பான தொடர்புகளுக்கு: குலசிங்கம் வசீகரன் (இணைப்பாளர்) – 0773788795**

**பி.மாணிக்கவாசகம்...**

# போதைப்பொருள் அரக்கனிலிருந்து எமது இளைய சமுதாயத்தை காப்பாற்றுவோம்!

## சமூக சீர்கேட்டை ஒழிப்பதில் அனைத்து தரப்பினரும் பங்களிப்பு வழங்குவது அவசியம்

போதைவஸ்து பாவனை இலங்கையில் அதிகரித்து வருகிறது. இது பாரிய சுகாதார மற்றும் அனைத்து சீர்கேடுகளையும் உருவாக்கி வருகிறது. ஐஸ் என்பது ஆய்வகங்களில் மனிதனால் செயற்கையாக உருவாக்கப்பட்ட ஒரு இரசாயனப் பொருளாகும்.

இது மனிதனின் மைய மூளை நரம்புத்தொகுதியைத் தூண்டி தற்காலிகமான ஒரு இன்பத்தை வழங்கும். இந்தப் போதைப் பொருள் மிகக்கொடியது. இதனை ஒரு தடவை நுகர்ந்தாலும் அதனுள் இருந்து மீள முடியாமல் போய் விடும்.

ஐஸ் பாவனை ஊடாக கொடிய விளைவுகள் ஏற்படுகின்றன. வயது வித்தியாசம் இன்றி திடீர் மாரடைப்பு ஏற்பட்டு உயிரை விட நேரிடும். வாழ்க்கை வெறுத்து, நிதானம் தவறிய நிலைக்கு தள்ளப்பட்டு சிறுபிள்ளை செய்யும் வேலை ஒன்றைக் கூட செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்படும். தொடர்ந்து பல நாட்கள் தூக்கம் இல்லாமல் சென்று, மீண்டும் தொடர்ந்து பல நாட்கள் தொடர்தூக்கத்தில் இருக்க நேரிடும். வழமையாக இருக்கும் உடல் எடை தீவிரமாகக் குறைந்து மோசமான உடல் தோற்றத்தை உருவாக்கும்.



பற்கள் அனைத்தும் கறை படிந்து, உருக்குலைந்து அருவருக்கத்தக்க தோற்றத்தை உருவாக்கும். இரத்தபந்த உறவுகளை கூட அடையாளம் தெரியாமல் சென்று ஆண், பெண் வேறுபாடு இல்லாமல், வயது வித்தியாசம் பார்க்காமல் நடந்துகொள்ளும் கொடூர மிருகங்கள் போல் நடவடிக்கைகள் மாற்றமடையும்.

இறுதியில் தன்னை தானே தாக்கிக் கொள்ளும் நிலைமைக்கு தள்ளப்பட்டு வாழ்க்கையை முடிக்க நேரிடும். பிள்ளைகள் இந்தப் பாவனைக்கு உள்ளாகி இருப்பார்களா எவ்வாறு அறிவதில் கவனம் செலுத்த வேண்டும்.

உடல் எடையில் திடீர் மாற்றங்கள் ஏற்படுதல், உடல் தோற்றங்களில் அக்கறை காட்டாத விதத்தில் நடந்து கொள்ளுதல், வழமைக்கு மாற்றமான செயல் நடத்தைகள், காரணம் இல்லாமல் சிரித்தல், காரணம் இல்லாமல் பேசுதல் போன்ற நடவடிக்கைகள், எக்காரணமும் இன்றி தீவிரமாக உடல் வியர்த்தல், கண்களை வேகமாக அசைத்தல் அல்லது கண்கள் அரைவாசி மூடியது போன்று சிவந்து காணப்படுதல், வழமைக்கு மாற்றமாக உணவுகளில் விருப்பமின்றி நடத்தல் போன்றன அறிகுறிகளாகும்.

ஆரம்பப் பாடசாலை செல்லும் மாணவர்கள் முதல் உயர்தரங்கள் கற்கும் மாணவர்கள் வரை அனைவரும் விஷமிகளால் இலக்கு வைக்கப்பட்டுள்ளனர். போதைப் பொருள் என்று தெரியாமல் கூட பிள்ளைகளில் உடலுக்கு செல்வதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. எனவே பெற்றோர் அவதானமாக இருக்க வேண்டும்.

மாணவர்களுக்கு வீட்டு உணவுகளை மாத்திரம் பாடசாலைக்கு கொடுத்து அனுப்புதல் முக்கியம். பாடசாலை சிற்றுண்டிகளில் கூட போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதான தகவல்கள் வெளியாகியுள்ளன. இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக எவரும் எதையும் செய்யலாம் என்ற நிலைமை உருவாகி உள்ளது. இந்த விடயத்தில் வித்தியாசமான நடத்தைகளைக் கொண்ட பிள்ளைகளை அவதானித்து வழிப்படுத்த வேண்டியது பெற்றோர்களின் கட்டாய கடமையாகும்.

பகுதி நேர வகுப்புக்கள் அனைத்தையும் தீவிரமாக கண்காணிப்பு செய்தல் வேண்டும். வீட்டு, வகுப்பறை குப்பைத் தொட்டிகளை அடிக்கடி பரிசோதனை செய்தல், கண்ணாடி குழாய்கள், மூடி இல்லாத பேனா, எரித்த பத்திரிகை, மூடி இல்லாத லைட்டர் போன்றவைகள் தென்பட்டால் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அத்துடன் பெற்றோர், பிள்ளைகளுடன் அதிக நெருக்கத்தை உருவாக்க வேண்டும்.

செல்போனின் செயற்பாடுகள் என்றும் கண்காணிப்பில் இருக்கக் கூடியதாக அமைத்து வைக்க வேண்டும். காரணம் இன்றி பிள்ளைகளுக்கு பணம் கொடுப்பதை முற்று முழுதாக தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். பெண்பிள்ளைகளும் இலக்கு வைக்கப்படுவதோடு பாதிக்கப்பட்டும் உள்ளனர்.

யாரையும் போதைப் பொருளுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகித்தால் உடனடியாக உரிய தரப்பினருக்கு தகவல் வழங்குதல் வேண்டும். நிதானமாக சிந்தித்து செயல்படுவதன் ஊடாக போதை மாபியாக்களி டமிருந்து எமது பிள்ளைகளையும் மாணவர்களையும் பாதுகாப்பதற்கு அனைவரும் முன்வர வேண்டும்.

**எஸ்.அஷ்ரப்கான்...**
(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

# வெற்றிநடை போடும் 'இனிய நந்தவனம்' வெள்ளிவிழா கடந்து 26ஆம் ஆண்டில் காலடி

**அச்சு ஊடகங்களுக்கு இது சவாலான காலம். சவால்களை ஏற்றுக்கொண்டே வரலாற்றைப் பதிவு செய்ய வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டிருக்கிறது. என்னதான் நவீன மாற்றங்களும் மின் ஊடகங்களும் வளர்ச்சி பெற்றாலும் அச்சு ஊடகமே வரலாற்றின் தேவையையும் முக்கியத்துவத்தையும் முன்னெடுத்து வருகிறது.**

தமிழ்நாட்டில் இலக்கியத் தளத்தில் தனித்த அடையாளத்தோடு பல சஞ்சிகைகள் வெளிவந்தாலும், சர்வதேச அளவில் கவனம் பெற்ற சஞ்சிகையாக திருச்சிராப்பள்ளியிலிருந்து வெளிவரும் 'இனிய நந்தவனம்' மக்கள் மேம்பாட்டு மாத சஞ்சிகையானது வெள்ளி விழாவைக் கடந்து 26 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது

நுகர்வுக் கலாசாரத்தில் சந்தைப்படுத்த சில சமரசங்களை செய்துகொண்டு சினிமா, அரசியல் இரண்டையும் மிகைப்படுத்தலாக தூக்கிப் பிடிப்பது வியாபார யுக்தி என்றாலும், வாசகனை சிந்திக்க

வைக்கிறோமா? என்பதை வணிகமயமாகப் பார்க்கும் சஞ்சிகைகள் இதை உணர்வதில்லை

ஆனால், இனிய நந்தவனம் இவை இரண்டையும் தவிர்த்துவிட்டு எந்தவிதமான சமரசமும் செய்து கொள்ளாமல் நல்லனவற்றை மட்டுமே பதிவு செய்ய வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையில் மக்கள் மேம்பாட்டுக் கருத்துகளையும், கலை இலக்கியத்தையும் மட்டுமே முன்னெடுக்கும் சஞ்சிகையாக சர்வதேச வாசகர்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றுள்ளது.

காலமாற்றத்தில் புதியனவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது கட்டாயம் என்றாலும் இனிய நந்தவனம் தன் குறிக்கோளிலிருந்து விலகிவிடாமல் பல நெருக்கடிகளைக் கடந்து நேர்மறையான சிந்தனையோட்டத்தை முன்னெடுப்பதைப் பாராட்ட வேண்டும்.

அரசியல், சினிமா, ஆன்மிகம் ஆகிய மூன்றையும் தவிர்த்துவிட்டு ஒரு சஞ்சிகையை வெளியிடுவது என்பது சாதாரண விடயமல்ல ஆனால், இனிய நந்தவனம் அதில் வெற்றி பெற்றிருப்பது பெருமைப்படக் கூடியதாகும்.

இனிய நந்தவனம் சஞ்சிகையின் 26 ஆம் ஆண்டு விழா எதிர்வரும் ஜனவரி மாதம் 08 .01.2023 அன்று திருச்சிராப்பள்ளி தமிழ்ச் சங்கத்தில் நடைபெற இருப்பதை முன்னிட்டு



'இனியநந்தவனம்' ஆசிரியர் சந்திரசேகரன்

224 பக்கங்களில் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்படுகிறது. இம்மலரில் சர்வதேச அளவில் பல படைப்பாளிகளின் சிறுகதைகள், கட்டுரைகள் மற்றும் கவிதைகளுடன் இந்திய அரசாங்கம் வழங்கும் உயரிய விருதான பத்மஶ்ரீ விருது பெற்ற எஸ். தாமோதரன், தொழிலதிபர் ஆர்.ரவிச்சந்தர், எழுத்தாளர் கேத்தரீன் ஆரோக்கியசாமி ஆகியோரின் நேர்காணலும் இலங்கை 'ஞானம்' சஞ்சிகை ஆசிரியர் தி.ஞானசேகரன் எழுதிய இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் பற்றிய சிறப்புக்கட்டுரையும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் வி. திருவள்ளுவன், மருத்துவர் ஆ.வேணி, திருச்சிராப்பள்ளி தமிழ்ச்சங்க அமைச்சர் (பொறுப்பு) பெ.உதயகுமார், மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் ராமச்சந்திரன், வி.ஜி.பி நிறுவனத் துணைத்தலைவர் இரா.தங்கையா, இலங்கை தினகரன் மற்றும் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளும் இவ்விழாவில் தமிழ்நாடு, மலேசியா, அவுஸ்திரேலியா மற்றும் இலங்கையைச் சேர்ந்த பல்துறை சாதனையாளர்கள் ஆண்களுக்கு 'வெற்றித் தமிழன்' விருதும், பெண்களுக்கு 'வெற்றித் தமிழினி' விருதும் வழங்கப்படுகின்றன.

சிறந்த சுயமுன்னேற்ற நூல்களை எழுதிய மூன்று பேருக்கு 'நம்பிக்கை நாயகன்'




விருதும் ஊக்கத்தொகையும் வழங்கப்படுகிறது. புதுக்கோட்டை யோகி பயிற்சி நிறுவனமும், கரூர் சுடர் சமூக நல அறக்கட்டளையும் ஆண்டு தோறும் இந்த விருதினையும் ஊக்கத்தொகையையும் வழங்கி வருகின்றன.

நந்தவனம் சந்திரசேகரனை பிரதம ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் இனிய நந்தவனத்துக்கு எம்.சாதிக் பாட்சா, பா.தென்றல், முகம்மது அபூபக்கர் சித்திக் ஆகியோர் இணையாசிரியர்களாகவும், புலவர் தியாகசாந்தன் , மருத்துவக் கலாநிதி வே.த.யோகநாதன் ஆகியோர் ஆலோசர்களாகவும், ஜெர்மனி நைனைவியன் சர்வதேச ஆலோசகராகவும் இருந்து வழிநடத்தி வருகின்றனர்.

"26 ஆண்டுகளாக எவ்வாறு இனிய நந்தவனத்தை வெற்றிகரமாக வெளியிட்டு வருகிறீர்கள்?" என்று நந்தவனம் சந்திரசேகரனிடம் கேட்ட போது, "எப்போதும் முழுதாக ஒரு விடசயத்தைப் பற்றி அறிந்த பிறகு உங்கள் முயற்சிகளை முன்னெடுங்கள் என்கிறார் ஆபிரகாம் லிங்கன். இவ்வாறாக தெளிவான முயற்சிகளை முன்னெடுத்து தோல்விகளைக் கண்டு துவண்டு போகாமல் நல்லனவற்றைக் கொடுத்தால் வாசகர்கள் வரவேற்று ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையே இந்த வெற்றியைத் தந்துள்ளது" என்று தெரிவிக்கிறார்.

வெற்றிப் பாதையில் இனிய நந்தவனமும் பயணிப்பதால் 26 ஆண்டுகளைக் கடந்தும் பயணத்தைத் தொடர முடிகிறது. இவ்வாறான சிறந்த சஞ்சிகையாக வெளிவரும் இனிய நந்தவனத்தை தமிழ் பேசும் சமூகம் தொடர்ந்து ஆதரிக்க வேண்டும் என்கிறார்கள் அதன் அபிமானிகள்.

# உலக தமிழ்ச் சங்க விழாவில் பேராசிரியர் சண்முகதாஸுக்கு அளிக்கப்பட்ட கௌரவம்

**உலக தமிழ்ச் சங்கம் விழா மதுரையில் நடைபெற்ற போது யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களுக்கு ஆவியூர். அ.சொர்ணமணி பொன்னாடை அணிவித்து கௌரவித்து வாழ்த்துரை வழங்கினார்.**

தமிழ்நாடு அரசின் உலகத் தமிழ்ச் சங்கம்_ மதுரை, யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கம் இணைந்து ஏற்பாடு செய்த உலக தமிழ் இலக்கிய விழா அண்மையில் மதுரையில் நடைபெற்றது.

உலகத் தமிழ்ச் சங்கத்தின் இயக்குநர் முனைவர் ப.அன்புச்செழியன் நிகழ்வுக்குத் தலைமையேற்றார். விழாவில் சான்றோர்கள் பலர் கலந்து சிறப்பித்தார்கள்.

வரலாற்றுக் கட்டுரைகள், கவிதைகள், பட்டிமன்றம் நடைபெற்றன. விழாவில் கலந்து கொண்ட யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், துணைத்தலைவர் முனைவர். ச.மணோன்மணி ஆகியோரை மதுரை சொர்ணதமிழ் பிசியோ தெரபி மறுவாழ்வு சிகிச்சை மையத்தின் தலைவரும் தமிழ்மரபினர் பண்பாட்டுச் சங்கத்தின் நிர்வாகியுமான ஆவியூர்.

மருத்துவர் அ.சொர்ணமணி பொன்னாடை அணிவித்து கௌரவித்து வாழ்த்துரை வழங்கினார்.

ஆவியூர் அ. சொர்ணமணி தனது வாழ்த்துரையில் "இலங்கையும் இந்தியாவும் ஒரே நிலபரப்பாக இருந்தன. கடல்கோளால் பிரிக்கப்பட்டன. தாமிரபரணி ஆறு இங்கேயும் ஓடுகிறது. அதன் தொடர்ச்சி இலங்கையிலும் ஓடுகிறது. இலங்கை வாழ் தமிழர்கள் எமது சாகோதரர்கள்" என குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் நிர்வாகிகள் வி.மு.சு.கணேசன், சி.சம்பத், எஸ்.பி.முருகையன், சி.பிரபாகரன் மற்றும் முனைவர்.சு.சோமசுந்தரி, பேராசிரியர் மறைமலை இலக்குவனார், திருமதி ஐ.ஜான்சிராணி,

கவிஞர் ஆண்டாள் பிரியதர்சினி, நியுசிலாந்து இலக்குவன் சொக்கலிங்கம், பட்டிமன்றம் புகழ் ராஜா உட்பட அறிஞர் பெருமக்கள் கலந்து சிறப்பித்தனர்.

**எச்.எச்.விக்ரமசிங்க...**



# தனித்துவம் மிக்க ஆளுமையாக திகழ்ந்தவர் காஸெம் சுலைமானி

**ஈரான் இஸ்லாமிய குடியரசின் புரட்சிக் காலவர் படை ஜெனரல் காஸிம் சுலைமானி பாக்தாத் சர்வதேச விமான நிலையத்திற்கு அருகில் அமெரிக்காவின் ஆளில்லா விமான (ட்ரோன்) தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்து மூன்றாண்டுகள் (3.1.2023) நிறைவடைந்துள்ளன.**

சிரியாவையும் ஈராக்கையும் துண்டாடும் நோக்கத்துடன் தீயசக்திகளால் உருவாக்கப்பட்டதே ஐ.எஸ்.ஐ.எஸ் எனும் பயங்கரவாத அமைப்பு என்பதை ஆரம்பத்தில் பலர் அறிந்திருக்கவில்லை. ஆனால் ஈரான் ஐ.எஸ்.ஐ.எஸ். இன் இயல்தன்மையை ஆரம்பத்திலேயே புரிந்து கொண்டது. திடீரெனத் தோன்றிய ஒரு குழு, அதிநவீன ஆயுதங்களுடன், இராணுவ ரீதியாக பலம் பெற்றிருந்த ஈராக், சிரியா ஆகிய நாடுகளின் சில பிராந்தியங்களை தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து ஆட்சி அமைப்பதானது, பலம் வாய்ந்த சக்திகளின் துணையின்றி நடப்பது முற்றிலும் சாத்தியமற்ற ஒன்றாகும்.

இப்பயங்கரவாதத் தொல்லை கட்டுக்கடங்காமல் போகவே ஈராக் மற்றும் சிரிய அரசாங்கங்கள் ஈரானின் உதவியை நாடின. இவர்களால் ஏற்படக்கூடிய ஆபத்தை நன்கு உணர்ந்திருந்த ஈரானும் பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தை வழிநடத்தியது. இதற்கு ஜெனரல் காஸெம் சுலைமானி மிகைத் திறமையாக தலைமை வகித்து, இப்பிராந்தியத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். தொல்லைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

இப்பயங்கரவாதக்குழு ஒழிக்கப்பட்டமையானது எண்ணெய்வளம் கொண்ட மத்திய கிழக்கு பிராந்தியத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் அமெரிக்க ஏகாதிபத்திய திட்டத்திற்கு கிடைத்த பெரும் தோல்வியாகும். இதை சகித்துக்கொள்ள முடியாத சக்திகள் ஈரானைப் பழிவாங்க எண்ணின. என்றாலும் அச்சக்திகளின் சதிகளுக்கு எதிராக உறுதியாக நின்று, அச்சதியை முறியடித்த செயல் வீரர் ஜெனரல் காஸெம் சுலைமானியை அமெரிக்கா பழிவாங்கியது.

தூதுவனாகச் செல்லும் ஒருவரை கொலை செய்வது மிகவும் இழிவான செயலாகும். அந்த செயலை செய்யும்படி நானே உத்தரவிட்டேன் என்று ட்ரம்ப் பெருமையடித்தது, அதைவிட கேவலமானது.

ஈராக், சிரியா, லெபனான், யெமன் அல்லது ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் பாதுகாப்பற்ற சூழல் தொடருமாயின் பிராந்தியத்தில் உள்ள எவரும் அதனால் பயனடைய மாட்டார்கள். தமது சதித்திட்டங்களை செயல்படுத்த சொந்த நாட்டவர்களையே பலியிட தயங்காத ஏகாதிபத்திய கும்பல் தமது



திட்டங்கள் தவிடுபொடியாக காரணமாக நின்ற ஒரு சிறந்த மனிதரை பழிவாங்க நினைத்தது.

சுலைமானி தனித்துவமானவர், துணிச்சலான தளபதி என்றாலும் அவர் மக்களின் உள்ளங்களில் நிலைத்திருக்க அதுமட்டும் காரணமல்ல, எல்லாச் சூழலிலும் அவருடைய விவேகம் முக்கியமானது.

அவர் விவேகமுள்ள மனிதர், விஷயங்களைப் பகுப்பாய்வு செய்து அதன் உண்மைத் தன்மையை சரியாகப் புரிந்து கொள்வதில் விற்பன்னர், அவர் பிராந்திய மற்றும் உலக அரசியலை மிகச்சரியாக புரிந்து கொண்டவர், மேலும் அவர் தீவிர போக்கை கடைப்பிடித்த ஒருவரல்ல. வலது அல்லது இடது சாய்வு அவரிடம் இருக்கவில்லை.

ஈரானில் அவர் ஒரு தேசிய வீரர் மாத்திரமல்லாமல் பிராந்திய நாடுகளுக்கும், புரட்சிகர முஸ்லிம்களுக்கும் ஒரு கௌரவ சின்னம். எதிரிகள் இந்த மனிதரை எம்மிடம் இருந்து பிரித்து விட்டால் தமது திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள இருக்கும் தடை நீங்கிவிடும் என்று தப்புக்கணக்குப் போட்டனர். ஆனால் அவர்கள் நினைத்ததற்கு மாற்றமாக இந்த தேசிய நாயகன் ஒரு நித்திய நாயகனாக மாறினார், ஈரானிய வரலாற்றில் தியாகி சுலைமானி சிறந்த வரலாற்று நாயகர்களில் ஒருவராக மாறிவிட்டார்.

பிராந்தியத்தில் பாதுகாப்பையும் அமைதியையும் நிலைநாட்ட பெரும் முயற்சிகளை மேற்கொண்ட ஒருவராவார். அதனால் முழு பிராந்திய மக்களும் தியாகி சுலைமானிக்கு நிறைய கடமைப்பட்டுள்ளனர்.

சுலைமானியைக் கொன்று பிராந்தியத்தில் தமக்கிருந்துவரும் தடையை உடைப்பதே எதிரியின் குறிக்கோளாக இருந்தது, ஆனால் நடந்ததோ முற்றிலும் முரணானது. அவரது படுகொலையானது, சுலைமானியை ஈரானிய மக்கள் மத்தியிலும் பிராந்தியத்திலும் அழியாத்தடத்தை பதித்த நபராக்கியுள்ளது.

**தாஹா முஸம்மில்...**

# முஸ்லிம் பெண்களின் உயர்கல்விக்கான முன்னோடி நிறுவனம் குரீகொடுவ ஹாதியா கல்வி நிலையம்

**குருநாகல் மாவட்டத்தில் குளியாப்பிட்டிய தேர்தல் தொகுதியில் குரீகொடுவ என்னும் கிராமத்தில் அமைந்துள்ள ஹாதியாக் கல்வி நிலையம் இலங்கையில் முஸ்லிம் பெண்களுக்கான உயர்கல்வியை வழங்குவதில் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாக விளங்குகின்றது. நீண்ட காலமாக குறித்த பிரதேசத்தில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான பகுதிநேர அறபுக் கல்லூரியாகத் இது செயற்பட்டு வந்த போதிலும், 2006 ஆம் ஆண்டு முதல் பெண்களுக்கான முழு நேரக் கல்வி நிறுவனமாகச் செயற்படத் தொடங்கியுள்ளது.**

தற்போது நூற்று இருபத்து நான்கு (124) மாணவிகள் உள்ளக விடுதியில் தங்கி கல்வி கற்று வருகின்றனர். முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் அறபுக் கல்லூரியாகப் பதிவு செய்யப்பட்டுள்ள ஹாதியாக் கல்வி நிலையத்திலிருந்து, கடந்த பதினாறு வருடங்களில், நாட்டின் பல பாகங்களில் இருந்தும் 296 பேர் கற்கையை நிறைவு செய்து வெளியேறியுள்ளனர். அவர்களில் அறுபத்தைந்து சதவீதத்தினர் அதாவது 199 பேர் இலங்கையின் பல்வேறு பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பைத் தொடருவதற்கு வாய்ப்பைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள்.

ஹாதியாவி பட்டதாரிகள், கல்வி மற்றும் நிர்வாகத் துறைகளிலும் தஃவா மற்றும் சமூக சேவைப் பணிகளிலும் இந்நாட்டில் காத்திரமான பங்களிப்பை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பன்முக முஸ்லிம் பெண் ஆளுமையை உருவாக்கும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ள ஹாதியா கல்வி நிலையத்தின் கலைத் திட்டம் ஆறு பகுதிகளை உள்ளடக்கி வடிவமைக்கப்பட்டுள்ளது. நான்கரை வருடங்களுக்கான இக்கலைத் திட்டம் நூற்று இருபது கிரடிட்களைக் கொண்டது.

**கற்கைகள்:**

1. மொழிக் கற்கைகள்: அறபு, ஆங்கிலம், சிங்களம், தமிழ்.

2. ஷரீஆத் துறை: இஸ்லாமிய சட்டவியல் (அல்பிக்ஹ் வஉஸூலுஹு) மற்றும் தஃவா ஆகிய பகுதிகளுக்கு கூடுதல் அழுத்தத்துடன் ஏனைய இஸ்லாமியத் துறைக் கற்கைகளையும் உள்ளடக்கியது.

3. குடும்பவியல் கற்கைகள்: குடும்பக் கலைகள், குடும்ப உளவளத்துணை.

4. உயர் தரக் கலைப் பிரிவு: அறபு, இஸ்லாமிய நாகரீகம், புவியியல், தமிழ், தகவல் தொழிநுட்பம் ஆகிய பாடங்களில் அறபு பாடத்துடன் ஏனைய இரண்டு பாடங்களில் தெரிவு வழங்கப்படுகின்றது.

5. வாழ்க்கைக் கலைகள்: ஆன்மீகம், ஒழுக்கவியல், கிராஅத், சமையல், வீட்டுத் தோட்டம், திட்டமிடல், முகாமைத்துவம்.

6. தொழிற் கலைகள்: ஆடைவடிவமைப்பு, முன்பள்ளி, மொழிபெயர்ப்பு, தகவல்தொழில்நுட்பம், ஊடகவியல், ஒலி ஒளியாக்கம் புகைப்படவியல்.

எதிர்காலத்தில் விரைவில் ஆரம்பம் செய்யப்படவுள்ள ஹாதியாவின் வெளிவாரிக் கற்கைகள் பிரிவின் ஊடாக ஹாதியாவின் உள்ளக மாணவிகளுடன் வெளி மாணவிகளுக்கான கற்கை வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படவுள்ளன. அவற்றுள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள



தொழிற் கலைகளுடன் கணக்கியல், மொழிக் கற்கைகள் போன்ற பல்வேறு தொழில்சார் கற்கை நெறிகள் வழங்கப்படவுள்ளன. விருப்பத் தெரிவின் அடிப்படையில் உள்ளக மாணவிகளும் அவற்றுள் பங்குபற்றுவதற்கான வாய்ப்பளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இலங்கை தொடர்பான கற்கைப் பகுதிகளும் எதிர்காலத்தில் கலைத்திட்டத்தில் உள்வாங்கப்படவுள்ளன.

அஷ்ஷெய்க்
**அக்ரம் அப்துல் ஸமத்...**
அதிபர், ஹாதியா கல்வி நிலையம்

## வழக்கை இரத்து செய்யுமாறு... (03ஆம் பக்கத் தொடர்)

இதன்பின்னர், கடந்த 2020ஆம் ஆண்டு காஞ்சிபுரம் கியூ பிரிவு பொலிசார் என் மீது மிரட்டல் உள்ளிட்ட சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கு செங்கல்பட்டு கோர்ட்டில் நிலுவையிலுள்ளது. இந்த வழக்கில் பிணை பெற்று திருச்சி அகதிகள் முகாமில் அடைக்கப்பட்டிருந்தேன்.

நான் ஒருபோதும் விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஆதரித்தது கிடையாது. தற்போது இலங்கை ஜனாதிபதியாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவாளரான என் மீது தேசிய புலனாய்வு முகமை கடந்த டிசம்பர் 15ஆம் திகதி வழக்குப்பதிவு செய்துள்ளது. அதாவது கடந்த ஜூலை மாதம் மத்திய உள்துறை அமைச்சு இயற்றிய தீர்மானத்தின் கீழ், சார்பு செயலாளர் ராஜீவ் குமார் கொடுத்த புகாரின் அடிப்படையில் என் மீது இந்த வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதில், விடுதலைப்புலிகள் இயக்கத்தை மீளுருவாக்கம்செய்யும் விதமாக என் தலைமையில் ஒரு கும்பல் போதைப் பொருள் மற்றும் ஆயுத கடத்தல் குற்றத்தில் ஈடுபட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. ஆனால், போதைப்பொருளோ, ஆயுதமோ என்னிடம் இருந்து பறிமுதல் செய்யப்படவில்லை. இந்த குற்றச் சம்பவம் எப்போது நடந்தது என்றும் குறிப்பிடவில்லை.

எந்த விவரங்களும், ஆதாரங்களும் இல்லாமல் மத்திய அரசு அதிகாரி கொடுத்த முறைப்பாட்டின் அடிப்படையில் தேசிய புலனாய்வு முகமை பதிவு செய்துள்ள இந்த வழக்கை இரத்து செய்ய வேண்டும். இவ்வாறு அதில் கூறியுள்ளார். இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு வர உள்ளது.

## குடிநீர் பிரச்சினையை... (03ஆம் பக்கத் தொடர்)

மீள்குடியேற்றப் பிரிவு தெரிவிக்கிறது. நனோ தொழில்நுட்பம் மூலம் நீரைச் சுத்திகரிக்கும் போது அதிக உப்புகளை நீக்குகிறது. நனோ சுத்திகரிப்பு மூலம் நச்சுக்கள், பார உலோகங்கள் மற்றும் ஏனைய சேதன இரசாயன உலோகங்கள் அகற்றப்பட்டு நீரின் உப்பு சுவையும் துர்நாற்றமும் நீக்கப்படும்.

2021 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பு 209 மில்லியன் ரூபாவாகும். நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பின் அமைச்சின் கீழ் செயற்படும் மீள்குடியேற்றப் பிரிவின் இந்தத் திட்டத்தின் சுமார் 60 வீத கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

கொரோனா வைரஸ் பரவல் மற்றும் நாடு எதிர்கொள்ளும் நெருக்கடிகள்காரணமாக நனோ நீர் சுத்திகரிப்பு நிலையத் திட்டத்தின் கட்டுமானப் பணிகளின் நிறைவு காலதாமதமானது என்றும் அந்த பிரிவு குறிப்பிடுகிறது. விரைவில் இந்த திட்டத்தை நிறைவு செய்ய முடியும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக மீள்குடியேற்றப் பிரிவு தெரிவித்தது.

# சர்வதேச சாதனையாளர்கள் அறக்கட்டளையின் விருது விழா




சர்வதேச சாதனையாளர்கள் அறக்கட்டளை எதிர்வரும் 2023.01.08 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்பு 11, புறக்கோட்டை மிதக்கும் சந்தை 02ஆம் இலக்கத்தில் உள்ள அறக்கட்டளையில் சமூக சேவகர்களையும் மற்றும் பல்வேறு துறை சார்ந்த சாதனையாளர்களையும் விருது வழங்கி கௌரவிக்கவுள்ளது. ஜேர்மனியை தலைமையகத்துவமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச சாதனையாளர்கள் அறக்கட்டளை, கொழும்பு 11, புறக்கோட்டை மிதக்கும் சந்தை 02ஆம் இலக்கத்தில் அதன் கிளையை கொண்டு இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

## நாளை 05ஆம் திகதி முதல்... (03ஆம் பக்கத் தொடர்)

குறிப்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, இலங்கை போக்குவரத்து சபை, ரயில்வே திணைக்களம், வடமாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையுடன் இணைந்து என்ன மாற்றங்களை செய்யலாம் என்பதை தீர்மானித்து மூன்று வகையான தீர்மானங்களை எடுத்திருக்கின்றோம்.

1. யாழ்ப்பாணத்திலிருந்து செல்கின்ற யாழ். ராணி ரயில் தற்பொழுது முறிகண்டி வரை பயணிக்கின்றது. வவுனியா வரை செல்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது.

வவுனியாவிலிருந்து அனுராதபுரம் சென்று ரயிலில் கொழும்பு செல்ல விரும்புவோருக்காக வவுனியா அனுராதபுரத்துக்கு 20 பஸ்கள் மேலதிகமாக சேவையில் ஈடுபடவுள்ளன.

2. தனியார் போக்குவரத்து சேவை மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்கள் அந்தந்த மாவட்டத்திலிருந்து நேரடியாக அனுராதபுரத்துக்கு சென்று அங்கே பயணிகள் செல்லக்கூடியவாறு ஒழுங்கு செய்திருக்கின்றோம். நேரடியாக பஸ்களிலேயே கொழும்புக்கு செல்லக்கூடிய வாறான ஏற்பாடுகளும் செயற்படுகின்றன. குறிப்பாக நேரடியாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு பல குளிரூட்டப்பட்ட பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்றன.

தற்பொழுது 38 பஸ்கள் யாழ்ப்பாணத்திலிருந்து நேரடியாக கொழும்புக்கு சேவையில் ஈடுபடுகின்றன. அவைகள் தங்களுக்கு ஏற்ற முற்பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர். அதை விட மேலதிகமாக 33 குளிரூட்டப்பட்ட பஸ்கள் இருக்கின்றன. அந்த பஸ்களும் தற்போது கடந்த கால கொரோனா மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக சேவைகள் ஈடுபடவில்லை. அந்த 33 பஸ்களையும் மீண்டும் சேவையில் ஈடுபடுமாறு அதனோடு தொடர்புடையவர்களை கோரியுள்ளோம். எனவே உயர்ந்த சேவை நிறுத்தப்பட்டாலும் பொதுமக்களுக்கான போக்குவரத்து சேவைகள் தடைப்படாது செயல்படுத்துவதற்கு முயற்சிக்கின்றோமென தெரிவித்தார்.

## குமார் நடேசனுக்கு ...

விருது என்பது வெளிநாட்டுவாழ் இந்தியர்களுக்கு வழங்கப்படும் உயரிய கௌரவமாகும். இந்த விருது வழங்கும் வைபவம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையிலிருந்து 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெளிநாடு வாழ் இந்தியர்கள் தினத்தின் அங்கமாக மத்தியப் பிரதேசத்திலுள்ள இந்தூரில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

17 ஆவது தடவையாக வழங்கப்படும் இந்த விருதுகள் வெளிநாடுகளில் வாழும் இந்திய வம்சாவளி தனிநபர்கள், இந்தியாவில் வசிக்காத இந்தியர்கள் மற்றும் இந்திய வம்சாவளி தனிநபர்கள் ஆகியோரால் ஸ்தாபிக்கப்பட்டு செயற்படுத்தப்படும் அமைப்புகள் மற்றும் நிறுவனங்களுக்கு இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் அவர்கள் மேற்கொண்ட சிறந்த சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில் இந்திய ஜனாதிபதியால் வழங்கப்படுகின்றன.

இந்த ஆண்டுக்கான பாரதிய சம்மான் விருதுகள் அந்த விருதுகள் தொடர்பான நடுவர்கள் சபையில் முன்வைக்கப்பட்ட விருது பெறுபவர்கள் பட்டியலைப் பின்பற்றி வழங்கப்படுகின்றன. உப ஜனாதிபதியை தலைவராகவும் வெளிவிவகார அமைச்சரை உப தலைவராகவும் தமது வாழ்நாளில் பல்வேறு துறைகளில் தடம் பதித்த ஏனைய கீர்த்திபெற்ற உறுப்பினர்களையும் கொண்ட மேற்படி விருதுகளுக்கான நடுவர் சபையால் இந்த ஆண்டுக்கான பிரவாசி பாரதீய சம்மான் விருதுகளுக்கான நியமனங்கள் பரிசீலிக்கப்பட்டு விருது பெறுவோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இம்முறை உலகளாவியரீதியில் 27 பேர் இந்த விருதுக்கு தெரிவாகியுள்ளனர். இதில் இலங்கையிலிருந்து சிவகுமார் நடேசன் (குமார் நடேசன்) இந்த விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். குமார் நடேசன் பிரிட்டிஷ் பேரரசின் ஆணையைப் பெற்ற ஆர்.ஏ. நடேசனின் புதல்வராவார். கொழும்பில் பிறந்த இவர் தனது ஆரம்பக்கல்வியை கொழும்பு சென். தோமஸ் கல்லூரியிலும் உயர் கல்வியை சென்னை லோயலா கல்லூரியிலும் சென்னை பல்கலைக்கழகத்திலும் பயின்றார்.

## பட்டியல் முறையாக...

கிடைத்தவுடன் நிலுவைப் பணத்துடன் அதனை முழுமையாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றில் இடம்பெற்ற நேர்காணலின் போது எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்தக் கேள்வியை எழுப்பிய ஊடகவியலாளர், நீங்கள் உங்கள் உத்தியோகபூர்வ இல்ல மின் கட்டணமாக ஒரு கோடி 28 இலட்சம் ரூபா செலுத்தவேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அந்த இல்லத்திற்கு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதா என கேள்வியெழுப்பினார்.

அதற்குப் பதிலளித்துள்ள அமைச்சர், அந்த இல்லத்திற்கான மின்சார கட்டணம் வேறு ஒருவரின் பெயருக்கு அனுப்பப்பட்டுள்ளது. எனக்கல்ல. முன்னர் வசித்த ஒருவரின் பெயருக்கே அது அனுப்பப்பட்டுள்ளது. மூன்று பதிவுத் தபால்கள் வந்துள்ளன. டெக்ஸபெல் இன்கம் மூலம் குறைக்கவேண்டுமானால் எனது பெயருக்கு பட்டியல் இருக்க வேண்டும். வேறு ஒருவரின் பெயரில் அவ்வாறு பட்டியல் இருக்கும்போது எனது கணக்கில் குறைக்கப்படாது. அதனை மாற்றுமாறு நான் மூன்று தடவை பதிவுத் தபாலில் அனுப்பியுள்ளேன். எனினும் அது மாற்றப்படவில்லை. அவ்வாறு மாற்றப்படுவதற்கு மறுநாளே தண்டப்பணம் தவிர ஏனைய கட்டணத்தை செலுத்த நடவடிக்கை எடுப்பேன் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## இந்தியாவில் கைதான...

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் இந்தியாவில் கோயம்புத்தூரில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்துடன் தொடர்புடையவராக சந்தேகிக்கப்படும் ஷேக் ஹிதாயத்துல்லா மற்றும் இந்தியாவில் பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்தும் திட்டங்களில் பங்கேற்றதாகக் கூறப்படும் சனோபர் அலி ஆகியோர் டிசம்பர் 29 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த சந்தேகநபர்கள் 2022 பெப்ரவரியில் ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வனப்பகுதியின் ஆசனூர் மற்றும் கடம்பூர் பகுதிகளில் உள்ள வனப்பகுதியின் உட்பகுதியில் குற்றவியல் சதித்திட்டத்தில் ஈடுபட்டதுடன், இலங்கையில் 2019 ஏப்ரலில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான பயங்கரவாதி சஹ்ரான் ஹாசீமுடன் தொடர்பில் இருந்துள்ளனர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட ஐ எஸ். அமைப்பைச் சேர்ந்தவர்களுடன் காத்தான்குடியைச் சேர்ந்த 30 வயதுடைய உமர் லெப்பை அஹமட் நுஸ்கீன் முகநூலில் தொடர்புகளை பேணிவந்துள்ளதாக இந்திய உளவுத்துறை விசாரணையில் தெரியவந்ததையடுத்து, இலங்கை உளவுத்துறைக்கு அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் காத்தான்குடி பழைய கல்முனை வீதி எம். பி.சி.எஸ். குறுக்கு வீதியைச் சேர்ந்த இந் நபரை நேற்று முன்தினம் இரவு அவரது வீட்டில் வைத்து பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் விசாரணைக்காக கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## தேர்தலை இடைநிறுத்தக்கோரி...

10 பில்லியன் ரூபா செலவாவதாகவும் அது அரசாங்கத்திற்கு கிடைக்கும் வருமானம் அல்லது கடன் பெற்றுக்கொள்வதை அடிப்படையாக வைத்தே தீர்மானிக்கப்படும் என தேர்தல் ஆணைக்குழு தமக்கு அறிவித்துள்ளதாக ஓய்வுபெற்ற கேர்ணல் விஜயசுந்தர உச்ச நீதிமன்றத்தில் ரிட்மனுவொன்றை தாக்கல்செய்து தகவல் சமர்ப்பித்துள்ளார். அரசியலமைப்பின் 140வது சரத்திற்கிணங்க உச்சநீதிமன்றத்தில் அந்த ரிட்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த மனுவில் ஓய்வுபெற்ற கேர்ணல் விஜயசுந்தர தெரிவித்துள்ளதாவது, இத்தகைய சூழ்நிலையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதில் நாட்டுக்கோ அல்லது நாட்டு மக்களுக்கோ எந்தவித முன்னேற்றமும் கிடைக்காது. ஒரு அரசியல் கட்சி தேர்தலை கோரும் நிலையில் மேலும் தரப்பினர் தேர்தல் நடத்துவதற்கு பணம் கிடையாதென ஊடகங்கள் மூலம் தெரிவித்துவருகின்றனர்.

தேர்தல் ஆணைக்குழு தெரிவிக்கும் விதத்தில் தேர்தலை நடத்துவதென்றால் ஆகக்குறைந்தது 10 பில்லியன் ரூபா செலவாகும். கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் தகவலறியும் சட்டத்தின் மூலம் தேர்தல் நடத்துவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா? அது பணமாக கையிருப்பில் உள்ளதா? என நான் தேர்தல் ஆணைக்குழுவிடம் கேட்டிருந்தேன்.

அதற்குப் பதிலளித்துள்ள ஆணைக்குழு, சாதாரணமாக தேர்தலை நடத்துவதற்கு 10 பில்லியன் ரூபா செலவாவதாகவும் அது அரசாங்கத்திற்கு கிடைக்கும் வருமானம் அல்லது கடன் பெற்றுக்கொள்வதை அடிப்படையாக வைத்து தீர்மானிக்கப்படும் என பதிலளித்திருந்தது.

எவ்வாறாயினும் அது சம்பந்தமான அனைத்து ஆவணங்களும் மனுதாரரால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. நாட்டின் தற்போதைய வருமான நிலைமை, சர்வதேச நாணய நிதியம் முன்வைத்துள்ள நிபந்தனைகள் மற்றும் சர்வதேச கடன்களை மறுசீரமைப்பது தொடர்பிலும் மனுதாரர் விடயங்களை முன்வைத்துள்ளார்.

## மகநெகும பணிப்பாளர்...

விசாரணைத் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் இந்த சம்பவம் தொடர்பில் போதுமானளவு சாட்சிகள் காணப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டின் போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், திட்டமிட்ட வன்முறைக் கும்பலொன்று நிறுவனத்தின் ஊழியர்கள் போன்று வருகை தந்து இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளது. புதுவருடத்தில் பணிகளை ஆரம்பிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் மகநெகும அலுவலகத்தின் தலைவர் உரையாற்றிக்கொண்டிருக்கையில் அவரது கையிலிருந்து ஒலிவாங்கியை அபகரித்து அந்த வன்முறைக் கும்பல் தாக்கியுள்ளதுடன் அந்தவேளையில் தேசியக் கொடியை ஏற்றுதல் மற்றும் தேசிய கீதம் இசைத்தலுக்கான சந்தர்ப்பத்தையும் அந்தக் குழு இல்லாமற் செய்துள்ளது.

அந்த அலுவலகத்தின் தலைவர் பதவியிலிருந்து அவரை விலகுமாறு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதுடன் புதுவருட ஆரம்ப நிகழ்வுக்காக அங்கு வைக்கப்பட்டிருந்த பால்சோற்றினால் அவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் அரச மற்றும் தனியார் தொலைக்காட்சிகள் அனைத்தும் காட்சிகளை ஒளிபரப்பியுள்ளதுடன் அந்த சம்பவத்தை திட்டமிட்டிருந்த கும்பல் மேற்படி நிகழ்வில் தகவல் சேகரிப்பதற்காக ஊடகங்களுக்கு ஏற்கனவே அழைப்பு விடுத்திருந்ததாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்திற்குப் பின்னர் தேசியக் கொடியை ஏற்றுதல் மற்றும் தேசிய கீதம் இசைத்தலுக்கு இடமளிக்காமல் செய்த முதலாவது சந்தர்ப்பம் இதுவாகுமென்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அரசின் புதிய...

சார்ந்தவர்களுக்கும் இராஜாங்க அமைச்சருக்குமிடையில் விசேட பேச்சுவார்த்தையொன்று நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த பேச்சுவார்த்தையின் போது தொழிற்றுறை சார்ந்தவர்கள் முகங்கொடுக்க நேர்ந்துள்ள நெருக்கடி தொடர்பில் விரிவாக அமைச்சருக்கு தெளிவுபடுத்தியுள்ளதாக பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டுள்ள அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடக பேச்சாளர் டாக்டர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம், மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கம், இலங்கை வங்கி ஊழியர்கள் சங்கம், பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சங்கம், நிர்வாக அதிகாரிகளின் சங்கம், இணைந்த நிறைவேற்று அதிகாரிகளின் கூட்டமைப்பு உள்ளிட்ட நாட்டின் முக்கிய தொழிற்சங்கங்களின் முக்கியஸ்தர்கள் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டுள்ளதுடன் இந்தப் பேச்சுவார்த்தை மிகவும் முக்கியமானதாக அமைந்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள அநீதியான வரி திருத்தம் மூலம் அரசாங்க ஊழியர்கள், தொழிற்றுறையாளர்கள் ஆகியோருக்கு எதிர்காலத்தில் ஏற்படும் அழுத்தங்கள் தொடர்பில் இங்கு இராஜாங்க அமைச்சருக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளால் கல்விமான்களான தொழிற்றுறையாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதே அதிகமாகும் என்பதையும் அவர்கள் இராஜாங்க அமைச்சருக்கு எடுத்துக்கூறியுள்ளனர்.

அதுதொடர்பில் கவனம் செலுத்தியுள்ள இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய எதிர்வரும் வியாழக்கிழமை அதுதொடர்பில் ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தப்போவதாக குறிப்பிட்டுள்ளார்.

## மாணவர்களை இணைத்துக்கொள்வதில்...

புதிய நடைமுறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த அதுதொடர்பில் அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ள அமைச்சரவைப் பத்திரத்திற்கே இவ்வாறு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

எவ்வாறாயினும் நேற்று தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டின் போது அது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன, மேற்படி புதிய நடைமுறை ஆறாம் வகுப்புக்கு பொருந்தாது என்றும் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க, தற்போது நடைமுறையிலுள்ள சுற்றறிக்கை மேலும் முறைப்படுத்தப்பட்டு இடைப்பட்ட வகுப்புகளை பாடசாலைக்கு மாற்றம் பெறுவதற்கு தேவைப்படும் குழுக்களை இனங்கண்டு அனைத்து மாணவர்களுக்கும் நீதியான வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், தற்போது 1 தொடக்கம் 5 வரையிலான வகுப்புகளில் ஒரு வகுப்பில் ஆகக்கூடிய எண்ணிக்கை 40 மாணவர்களாகவும் 6 11 வரையிலான வகுப்புகளில் ஒரு வகுப்பில் ஆகக்கூடியது 45 மாணவர்களும் புதிய நடைமுறையின் கீழ் செயற்படுத்தப்படும்.

அதுதொடர்பான சுற்றுநிருபம் மிக விரைவில் வெளியிடப்படுமென்றும் கல்வியமைச்சர் அறிவித்துள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

## உணவு விஷமானதால்... (03ஆம் பக்கத் தொடர்)

அவர்கள் சுகவீனமுற்றதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர். அவர்களில் 30 பேர் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## நிதியமைச்சின்...

ரூபா வீதம் போனஸ் வழங்கியுள்ளதாக ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிதியமைச்சின் சுற்றுநிருபம் மூலம் மேற்படி அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ள நிலையில் எரிபொருள் விலை அதிகரித்துள்ளதால் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இலாபமீட்டுவதாக தெரிவித்து இவ்வாறு போனஸ் வழங்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்காக 120 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இலாபமீட்டுவதாக குறிப்பிடப்பட்டிருந்தாலும் கூட்டுத்தாபனம் வழங்க வேண்டிய கடன் தொகை அதில் உள்ளடக்கப்படவில்லை என்பதும் அந்த அறிக்கையினூடாக தெரியவருகிறது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களாக 4200 பேர் பணிபுரிவதுடன் அவர்கள் அனைவருக்கும் இரண்டு மாத சம்பளம் இவ்வாறு போனஸாக வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை அங்குள்ள உயர்மட்ட அதிகாரிகள் மத்தியில் ஐந்து இலட்சம் ரூபா மாதாந்த சம்பளத்தை பெற்றுக்கொள்ளும் அதிகாரிகளும் உள்ளடங்குவதாகவும் சில அதிகாரிகளுக்காக 10 இலட்சம் ரூபா போனஸாக வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இலட்சக்கணக்கான ரூபாய்களை பெருமளவிலானோர் போனஸாக பெற்றுக்கொண்டுள்ளனர். ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தில் 5800 ஊழியர்கள் பணிபுரிவதுடன் அவர்களுக்கு 13வது மாத சம்பளமாக குறிப்பிடப்பட்டு ஒவ்வொருவருக்கும் தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க 58 கோடி ரூபா இதற்காக செலவிடப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் சுற்றுநிருபத்துக்கு முரணாக இந்த போனஸ் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதால் அந்த இரண்டு நிறுவனங்களிடமிருந்தும் ஜனாதிபதியால் விளக்கம் கோரப்பட்டுள்ளது. அந்த விளக்கம் கிடைத்தவுடன் ஜனாதிபதி அந்த நிறுவனங்கள் தொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் பொருளாதார நெருக்கடியில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ள நிலைக்கு இத்தகைய நிறுவனங்களின் கடன்களே காரணமாக அமைந்துள்ளது. அதனைப் பொருட்படுத்தாது மேலும் மேலும் மக்கள் மீதும் சுமைகளை சுமத்தும் இத்தகைய நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி தமது கவலையைத் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மதுபானங்களின்...

1309 ரூபாவாகவிருந்த வரி 1576 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதேவேளை பியர் போத்தலொன்றுக்கு இதுவரை அறவிடப்பட்டுவந்த 103 ரூபா வரி 124 ரூபாவாகவும் 194 ரூபாவாகவிருந்த வரி 233 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## டீசல் விலை...

பஸ்கட்டணத்தை குறைக்குமளவுக்கு போதுமானதாகவில்லை என்றும் அந்த ஆணைக்குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் திருத்தங்களின் போது ஒட்டோ டீசல் லீற்றரொன்றின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டதுடன் அண்மைக்காலத்தில் இருந்த டீசலின் விலை தற்போது 25 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் பஸ் கட்டணத்தை குறைப்பதற்கான தீர்மானம் எடுக்கப்படுமா என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் வகையிலேயே அந்த ஆணைக்குழுவின் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் எதிர்காலத்தில் பயணிகளுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பது சம்பந்தமாக பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## டீசல், மண்ணெண்ணெய்...

விலை 15 ரூபாவாலும் மண்ணெண்ணெய் ஒரு லீற்றரின் விலை 10 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளதாக அந்த கூட்டுத்தாபனத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார். அதற்கமைய வெள்ளை டீசல் ஒரு லீற்றரின் புதிய விலை 405 ரூபாவாகவும் மண்ணெண்ணெய் ஒரு லீற்றரின் புதிய விலை 355 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் இந்த விலைக் குறைப்பையடுத்து ஐஓசி நிறுவனமும் வெள்ளை டீசல் ஒரு லீட்டருக்கு 15 ரூபாவையும் மற்றும் மண்ணெண்ணெய் ஒரு லீட்டருக்கு பத்து ரூபாவையும் குறைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

## 4 வயது சிறுவன் ...

கூறி மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

குறித்த வீதியை உடன் புனரமைத்து தருமாறு வலியுறுத்தி தோட்ட மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 2 கிலோ மீற்றர் வரையான வீதி குண்டும் குழியுமாக காணப்படுவதால் மழைக்காலங்களில் பாடசாலை மாணவர்கள், பெரும் சிரமத்துக்கு மத்தியில் பயணிப்பதாக அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். இது தொடர்பில் பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

சிறுவனின் மரணத்துக்கு இந்த வீதியும் ஒரு காரணம் என தெரிவித்த போராட்டகாரகள், இனியும் மக்களை பலிகொடுக்க நாம் தயாரில்லை. எமக்கான வீதி புனரமைக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அரசியல்வாதிகளை தோட்டத்துக்குள் விட மாட்டோம் எனவும் திட்டவட்டமாக கூறினர்.

## SLPP கை சின்னத்தில் ...

சுதந்திரக் கட்சி மத்திய செயற்குழு அதற்கான அனுமதியை வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ள அவர், வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் தேர்தல்களில் போட்டியிடப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இதுவரை 140 பேரிடம்...

தினேஷ் ஷாப்டர் மீட்கப்பட்ட இடத்தில் காணப்பட்ட இரத்த மாதிரிகள் உள்ளிட்ட ஆதாரங்களை மரபணு பரிசோதனைக்காக அரச இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்ப கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றம் திங்கட்கிழமை (02) அனுமதி வழங்கியிருந்தது.

## 05 பேரை கடித்து...

எரிக் மார்ஷல் பெர்னார்ட் கோல்மேன் என்ற 84 வயதான பிரான்ஸ் பிரஜையே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். நாய் கடந்த 23ஆம் திகதி வீட்டிலிருந்து தப்பிச் சென்றே இவ்வாறு ஒவ்வொருவரையும் கடித்துக் குதறியுள்ளது.

# கிழக்கின் குரல்



# அதிபரின் இடமாற்றத்தை இரத்துச் செய்யக் கோரிக்கை

## மூதூரில் பெற்றோர், மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

தோப்பூர் குறூப் நிருபர்



மூதூர் வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட பள்ளிக்குடியிருப்பு கலைமகள் இந்துக் கல்லூரி அதிபரின் இடமாற்றத்தை இரத்துச் செய்து மீண்டும் அக்கல்லூரிக்கு அவரையே அதிபராக நியமிக்குமாறு கோரி அக்கல்லூரி மாணவர்களும் பெற்றோரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்படி பாடசாலை முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர், பாடசாலை நுழைவாயிலுக்கு பூட்டிட்டு இவ்வார்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்த போது,

"மேற்படி அதிபரின் காலத்தில் பாடசாலையில் கல்வி அடைவு மட்டம் அதிகரித்துள்ளதாகவும் ஆகவே, மேற்படி அதிபரை இடமாற்றம் செய்வதால் கல்வி அடைவு மட்டத்தில் பின்னடைவு ஏற்படும். அத்துடன், மேற்படி அதிபரின் பதவிக்காலம் முடிவடைய முன்னர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது" என்றனர்.

இந்நிலையில் ஆர்ப்பாட்ட இடத்துக்கு வருகை தந்த மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் முனவ்வறா நளீம், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோருடன் கலந்துரையாடியதுடன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் மூலம் தீர்வைப் பெற்றுத் தருவதாக தெரிவித்தார்.

அதிபரின் இடமாற்றத்தை இரத்துச் செய்தால் மாத்திரமே பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதாகவும் இல்லையெனில் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதாக இல்லையெனவும் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் பெற்றோர் தெரிவித்தனர்.

# களுவாஞ்சிக்குடி வரலாற்று குழுவின் பரிசளிப்பு விழா



பெரியபோரதீவு தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி வரலாற்றுக் குழுவினர் ஏற்பாடு செய்த பரிசளிப்பு விழா, களுவாஞ்சிக்குடி இராசமாணிக்கம் மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

களுவாஞ்சிக்குடி வரலாற்றுக் குழுவின் ஏற்பாட்டாளரும் வரலாற்று ஆசிரியருமான த.ஐங்கரனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இவ்விழாவில் கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மூ.கோபாலரெத்தினம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். அத்துடன், பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் வரலாற்றுப் பாடத்துக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.சுரேஸ்,பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

களுவாஞ்சிக்குடி பிரதேசத்திலிருந்து கடந்த வருடத்தில் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பதக்கங்கள் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

# திராய்க்கேணியில் 50 பேருக்கு புத்தாண்டு ஆடை வழங்கல்



திராய்க்கேணி தினகரன் நிருபர்

2023 புத்தாண்டையொட்டி திராய்க்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த 50 பேருக்கு அட்டாளைச்சேனை ANNAML சகாத், சகதா மன்றத்தின் ஊடாக அண்மையில் புடைவை வழங்கி வைக்கப்பட்டன.

இம்மன்றத்தின் தலைவர் கே.எல்.எம்.முனாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் திராய்க்கேணி ஆலயத் தலைவர் த.யோகநாதன், சமூக சேவை உத்தியோகத்தர், கிராம சேவை உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### திருகோணமலை மஹதிவுல்வெவ பகுதியில்

# குடும்பஸ்தரை மண்வெட்டியால் தாக்கிய சிறுவனுக்கு விளக்கமறியல்

றொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் மஹதிவுல்வெவ பகுதியில் குடும்பஸ்தரொருவரை மண்வெட்டியால் தாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 16 வயதுடைய சிறுவனை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, திருகோணமலை நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டார்.

இச்சந்தேக நபரை, திருகோணமலை நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் அண்மையில் ஆஜர்படுத்திய போதே, நீதவான் இவ்விளக்கமறியல் உத்தரவை வழங்கினார்.

பாடசாலை விடுமுறைத் தினங்களில் இச்சிறுவன் மஹதிவுல்வெவ குளத்தில் மீன் பிடிப்பதற்குச் செல்வதாகவும் இந்நிலையில், மீன்பிடிச் சங்கத்தில் அங்கத்துவம் இல்லாதவர்கள் மீன் பிடிப்பதற்குத் தடையென்று மண்வெட்டித் தாக்குதலுக்குள்ளானவர் இச்சிறுவனுக்கு கூறியுள்ளார்.

இதனையடுத்து, இவர்கள் இருவருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்ட நிலையில், மேற்படி குடும்பஸ்தரை சிறுவன் மண்வெட்டியால் தாக்கியதாக, பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்தது.

இதற்கிடையில், தலையில் படுகாயமடைந்த குடும்பஸ்தர், திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாக, நீதவான் முன்னிலையில் பொலிஸார் தெரிவித்தனர்.

# நாணல்சேனையில் காட்டு யானைகள் அட்டகாசம்



திருகோணமலை மாவட்டத்தின் மூதூர், உப்புக்காச்சிமடு நாணல்சேனை தோட்டக் கிராமத்தில் அண்மையில் காட்டு யானைகள் நுழைந்து அட்டகாசம் புரிந்ததுடன், அக்கிராமத்தில் வீடொன்றையும் உடைத்துச் சேதப்படுத்தியுள்ளது.

(படம்: மூதூர் தினகரன் நிருபர்)

# மக்களுக்கு சிறந்த சேவை வழங்க முன்வர வேண்டும்

## கல்முனை மாநகர ஆணையாளர் தெரிவிப்பு

கல்முனை, சாய்ந்தமருது விசேட நிருபர்கள்



ஊழல், மோசடி, இலஞ்சம் அற்ற நிர்வாகங்களை கட்டியெழுப்புவதற்கும் மக்களுக்கு சிறப்பான சேவைகளை வழங்குவதற்கும் கல்முனை மாநகர சபை ஊழியர்கள் அனைவரும் திடசங்கற்பம் பூண வேண்டுமென, கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபையில் புதிய ஆண்டின் அலுவலகப் பணிகளை ஆரம்பிக்கும் சத்தியப்பிரமாண நிகழ்வு நேற்று (02) முன்தினம் நடைபெற்ற போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"கடந்த காலங்களை விட இரட்டிப்பான சேவைகளை வழங்க முன்வர வேண்டுமென்று அனைத்து ஊழியர்களுக்கும் அழைப்பு விடுக்கின்றேன். அந்த வகையில் எல்லோரும் சிறப்பாக செயற்படுவீர்கள் எனும் எதிர்பார்ப்பும் இருக்கின்றது.

கிழக்கு மாகாணத்திலுள்ள 45 உள்ளூராட்சி சபைகளில் முதன்மையான சபையாக எமது கல்முனை மாநகர சபையை தூக்கி நிறுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம். ஊழியர்களின் ஒத்துழைப்பு முழுமையாக இருக்குமாயின், இதனை இலகுவாக சாத்தியப்படுத்திக் கொள்ளலாம்" என்றார்.

# ஓய்வுபெறும் அதிபர் கௌரவிப்பும் புதிய அதிபர் வரவேற்பும்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காத்தான்குடி மத்திய கல்லூரி அதிபராக கடமையாற்றிய எம்.எசி.எம்.ஏ.சத்தாரின் சேவையை பாராட்டி அவரைக் கௌரவிக்கும் வைபவமும் புதிய அதிபர் எம்.ஏ.நிஹால் பதவியேற்கும் வைபவமும் காத்தான்குடி மத்திய கல்லூரி ஒன்று கூடல் மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

காத்தான்குடி மத்திய கல்லூரி தேசியப் பாடசாலையின் பழைய மாணவர் அமைப்பினதும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினதும் ஏற்பாட்டில் இந்த வைபவங்கள் நடைபெற்றன.

# கிழக்கு மாகாணத்தின் புதிய கல்விப் பணிப்பாளர் கடமை பொறுப்பேற்பு



புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள அகிலா கனகசூரியம், தனது கடமையை நேற்று (02) முன்தினம் உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார். கிழக்கு மாகாண ஆளுநரிடம் தனது நியமனக் கடிதத்தை பெற்றுக்கொண்டதையடுத்து, கிழக்கு மாகாண கல்வி அலுவலகத்தில் சுபவேளையில் தனது கடமையை ஆரம்பித்தார்.

இலங்கை அரச சேவையில் பல்வேறு பதவி நிலைகளில் கடமை புரிந்துள்ள இவர் ஆசிரியையாக, வலயக் கல்விப் பணிப்பாளராக, மாகாண கல்வித் திணைக்கள பிரதி திட்டமிடல் பணிப்பாளராக கடந்த காலத்தில் பணியாற்றியுள்ளார்.

# கிண்ணியாவில் பயனாளிகளுக்கு பால்மா பெட்டிகள் வழங்கிவைப்பு



கிண்ணியா தினகரன் நிருபர்

சிறுவர்களினதும் முதியோர்களினதும் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு கிண்ணியா பிரதேச செயலகத்தினால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு அப்பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனியினால் பால்மா வழங்கி வைக்கப்பட்டது.

கிண்ணியா பிரதேச செயலகத்தில் வைத்து நேற்று (03) முன்தினம் பால்மா வழங்கி வைக்கப்பட்டது.

நாட்டில் பொருளாதார நெருக்கடி மிகைத்திருக்கும் சூழ்நிலையில் சிறார்களினதும் முதியோர்களினதும் ஆரோக்கியம் தொடர்பில் அக்கறை செலுத்தியே இச்செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுவதாக பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி கருத்துத் தெரிவித்தார்.

கிண்ணியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட 31 கிராம அலுவலகர் பிரிவுகளிலிருந்தும் தேவையுடைய சிறுவர்களையும் முதியோர்களையும் இனங்கண்டே இவ்வுதவி வழங்கப்பட்டதாக, கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி தெரிவித்தார்.

# கிழக்கு மாகாண சபையில் புதிய ஆண்டுக்கான சத்தியப்பிரமாணம்



கந்தளாய் தினகரன் நிருபர்

கிழக்கு மாகாண சபையில் 2023ஆம் ஆண்டுக்கான அம்மாகாண சபை உத்தியோகத்தர்கள் சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வு நேற்று (02) முன்தினம் நடைபெற்றது.

கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் கலாமதி பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின்போது, நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்த படைவீரர்களுக்கும் ஏனையவர்களுக்குமாக 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், 2023ஆம் ஆண்டின் அரசாங்க ஊழியர்களுக்கான சத்தியப்பிரமாணமும் நடைபெற்றது.

இந்நிகழ்வை அடுத்து உரையாற்றிய கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் கலாமதி பத்மநாதன்,

"முன்னொருபோதும் அனுபவித்திராத பொருளாதார நெருக்கடிக்குள் மக்களின் வாழ்க்கை மிகவும் கஷ்ட நிலைமைக்குள்ளாகியுள்ளது. இக்காலப்பகுதியில் உலகில் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்த நாடுகள் அந்தச் சவால்களை வெற்றி கொள்வதற்கு அறிமுகப்படுத்திய மறுசீரமைப்புக்கள் பற்றிய அனுபவங்களை ஆராய்ந்துஅரச சேவையில் தேவையான மறுசீரமைப்புகளை அறிமுகப்படுத்துவதற்கும் அரசாங்க செலவுகளைக் குறைத்து வருமானத்தை அதிகரிப்பதற்கும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்" என்றார்.

"2023ஆம் ஆண்டில் சமூக, பொருளாதார எதிர்பார்ப்புகளை அடைந்துகொள்ளும் ஒருமித்த எண்ணத்துடன் அனைத்து அரசாங்க ஊழியர்களும் அரச வளங்களை வினைத்திறனாக முகாமைத்துவம் செய்து நிகழ்கால மற்றும் எதிர்காலப் பரம்பரையினரின் நல்வாழ்வுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றும் மனப்பாங்கு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்திக்கொள்வதன் அவசியமானதெனவும், அவர் தெரிவித்தார்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

திங்கட்கிழமை 2023.01.02 உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 4988 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,192,949.00
ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 0 2 6 9 9 3

**ஜாதிக சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 1443 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,962,581.60
வெற்றி இலக்கினம் சிம்மம் — வெற்றி இலக்கங்கள் 5 1 5 0 9 0

**கொவிசெத** (Govisetha) — சீட்டிழுப்பு இலக்கம் 3230 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 67,577,169.60
ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 59 66 76 80

**ராசி சுப பலன்** (Handahana) — சீட்டிழுப்பு இலக்கம் 297 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,549,521.00
வெற்றி இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 13 14 57 58 — விசேட இலக்கினம் மகரம்

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1018 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 140,503,267.60
ஆங்கில எழுத்து J — வெற்றி இலக்கங்கள் 06 08 19 34

**மெகா பவர்** — சீட்டிழுப்பு இலக்கம் 1336 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 290,449,302.00
ஆங்கில எழுத்து H — சுப்பர் இலக்கம் 20 — வெற்றி இலக்கங்கள் 54 63 77 78
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# கிழக்கின் குரல்



## 2023 புதுவருட பண்டிகைக் காலத்தையிட்டு மட்டக்களப்பில் மின்குமிழ்கள் பொருத்தும் பணி

**மட்டக்களப்பு விசேட நிருபர்**



2023ஆம் ஆண்டு புதுவருட பண்டிகைக் காலத்தையிட்டு மட்டக்களப்பு நகருக்கு வருவோர் அதிகரித்துக் காணப்படுவதனால், அவர்களின் நலன் கருதி கேந்திர முக்கியத்துவம் மிக்க இடங்களில் புதிய மின்குமிழ்கள் பொருத்தும் பணி மட்டக்களப்பு மாநகர சபையினால் நேற்று (03) முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாநகர சபையின் அரசடி வட்டாரத்தின் தாமரைக் கேணி, அரசடி மற்றும் கோட்டை முனை உள்ளிட்ட பிரதேசங்களில் மின்குமிழ்கள் இல்லாத இடங்களில் புதிய மின்குமிழ்களும் செயலற்ற நிலையில் காணப்பட்ட மின்குமிழ்களுக்குப் பதிலாக புதிய மின்குமிழ்களும் பொருத்தப்பட்டன.

மட்டக்களப்பு நகரிலுள்ள புடைவைக் கடைகள், வீட்டு அலங்காரப் பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள், அழகுசாதனக் கடைகள் உள்ளிட்டவை இரவு வேளையில் திறந்து இருப்பதனால் தமது தேவைகளுக்காக பொதுமக்கள் நகரை நாடி வருகின்றனர். அவர்களின் நலன் கருதி மட்டக்களப்பு மாநகர சபையின் மின்சாரப் பிரிவு ஆளணியினரால் இம்மின்குமிழ்கள் பொருத்தப்பட்டன.

நகரின் இதயமெனக் காணப்படும் வட்டாரங்களில் புதிய LED Panel மின்குமிழ்கள் மற்றும் குறைந்த மின்வலுவில் எரியும் மின்குமிழ்கள் பொருத்தப்பட்டன.

## பாண்டிருப்பு பிரதேசத்தில் புத்தாண்டு மனமகிழ் விழா



**காரைதீவு குறூப் நிருபர்**

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் 2023ஆம் ஆண்டு புத்தாண்டு மனமகிழ் விழாவானது கலை, கலாசாரப் பாரம்பரிய விளையாட்டுப் போட்டி நிகழ்வாக பிரதேச செயலகத் திட்டமிடல் பிரிவு உத்தியோகத்தர்களால் நடத்தப்பட்டது.

பாண்டிருப்பு இந்து கலாசார மண்டபத்தில் நேற்று (03) நடைபெற்ற இவ்விழாவில், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் பிரதமர் விருந்தினராகக் கலந்து கொண்டார். புத்தாண்டை வரவேற்கும் முகமாக பாரம்பரியக் கலாசார விளையாட்டு நிகழ்வுகளும் நடைபெற்றன.

## கிரிமிச்சை பகுதியில் உள்ளூர் துப்பாக்கியுடன் ஒருவர் கைது

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரிமிச்சை பகுதியில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியொன்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் வாகரை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து, பொலிஸ் விசேட அதிரடிப்படையின் வாகரை முகாம் அதிகாரிகள் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, உள்ளூர் துப்பாக்கியுடன் இச்சந்தேக நபர் நேற்று (02) முன்தினம் கைது செய்யப்பட்டதாகவும், பொலிஸார் தெரிவித்தனர். மாங்கேணி பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

இச்சந்தேக நபரிடம் தொடர்ந்து வாகரை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## சாய்ந்தமருது பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்

**சாய்ந்தமருது நிருபர்**



அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட சாய்ந்தமருது பிரதேசத்தில் டெங்கொழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சாய்ந்தமருது பிரதேசத்தில் நுளம்புகள் அதிகரித்துள்ளமை தெரிய வந்துள்ளது. இந்நிலையில், இப்பிரதேசத்திலுள்ள மக்கள் தமது வீட்டுச் சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறு, சாய்ந்தமருது சுகாதார வைத்தியதிகாரி, வைத்தியர் யு.எல். எம் நியாஸ் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், நீர் தேங்கியிருக்கும் பொருட்களை கல்முனை மாநகர சபையின் குப்பை சேகரிக்கும் வண்டிகளில் ஒப்படைக்குமாறும் பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வீடு வீடாகச் சென்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சோதனையில் ஈடுபடும் போது, நுளம்புகள் பெருகுவதற்கு ஏதுவாக இருக்கும் இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டால், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

## கிழக்கு மாகாண சபைக்கு புதிய செயலாளர் நியமனம்



**கிண்ணியா, கந்தளாய் தினகரன், காரைதீவு குறூப் நிருபர்கள்**

கிழக்கு மாகாண சபை செயலகத்தின் புதிய செயலாளராக எம்.கோபாலரெத்தினம், கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்தினால் நேற்று (02) முன்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், உதவிச் செயலாளர்கள், மாகாணத் திணைக்களங்களின் பணிப்பாளர்கள் மற்றும் ஆணையாளர்கள் ஆகியோருடனான புதுவருடச் சந்திப்பும் இவ்வாண்டுக்குரிய செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடலும் ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே, புதிய செயலாளருக்கான நியமனக் கடிதத்தை கிழக்கு மாகாண ஆளுநர் வழங்கி வைத்தார்.

ஏற்கெனவே கிழக்கு மாகாண சபை செயலகத்தின் செயலாளராகக் கடமையாற்றிய வந்த எம்.வை.சலீம் கடந்த டிசெம்பர் 31ஆம் திகதி ஓய்வு பெற்றுச் சென்றதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு புதிய செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## மலாக்கா ஆளுநர் கல்முனைக்கு இன்று விஜயம் செய்கிறார்

**கல்முனை, சாய்ந்தமருது விசேட நிருபர்**



மலேசியாவின் மலாக்கா மாநில ஆளுநர் துன் முஹமட் அலி ருஸ்தாம் இன்று புதன்கிழமை (04) கல்முனைக்கு விஜயம் செய்கிறார்.

கிழக்கு மாகாண சபையின் முன்னாள் குழுத் தலைவரும் சி.எம்.ரி. கம்பஸ் தவிசாளருமான கலாநிதி ஏ.எம். ஜெமீலின் விசேட அழைப்பில் கல்முனைக்கு வருகை தரும் இவர், கல்முனை நகரில் நிறுவப்பட்டுள்ள மேற்படி கம்பஸின் நிர்வாக அலுவலகத்தை திறந்து வைக்கவுள்ளார்.

அத்துடன், கல்முனை மாநகர சபைக்கு மலாக்கா மாநில ஆளுநர் வருகை தருவதுடன், கல்முனை மாநகர முதல்வர் ஏ.எம்.றகீபை சந்தித்து, இரு தரப்பு புரிந்துணர்வு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடவுள்ளதாக, அறிவிக்கப்பட்டுள்ளது.

## வாழைச்சேனையில் 'கிழக்கு ஊடக மன்றம்' அங்குரார்ப்பணம்

**பாசிக்குடா நிருபர்**

வாழைச்சேனை பிரதேசத்தில் கிழக்கு ஊடக மன்றமொன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

சிரேஷ்ட ஊடகவியலாளர் க.ருத்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் புதுக்குடியிருப்பு வாழைச்சேனை ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலயத் தலைவர் வை.பரராஜசேகரம், முதியோர் சங்கத் தலைவர் க.நடேசன், கோறளைப்பற்று பிரதேசத்தின் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் ஆலோசகர் ச.சஜேந்திரன், உலகெலாம் நூலாசிரியர் கலாநிதி ந.பிரதீபன் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இறை ஆசியுடன் மங்கள விளக்கேற்றி கிழக்கு ஊடக மன்றம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

## காரைதீவு வைத்தியசாலைக்கு ஒரு தொகுதி மருந்து கையளிப்பு



**காரைதீவு குறூப் நிருபர்**

அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு பிரதேச வைத்தியசாலையில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் காரைதீவிலுள்ள குடும்பமொன்று, ஒருதொகுதி மருந்துப் பொருட்களை அவ்வைத்தியசாலைக்கு வழங்கி வைத்துள்ளது.

காரைதீவு மார்க்கண்டு சமூக அறக்கட்டளை மூலம் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இம்மருந்துப் பொருட்களை, 2023ஆம் ஆண்டு புதுவருட தினத்தன்று வழங்கி வைக்கப்பட்டன.

வைத்தியசாலை பொறுப்பதிகாரியும் வைத்தியருமான நடராஜா அருந்திரனிடம் சமூக அறக்கட்டளையின் உதவியுடன் மேற்படி குடும்பத்தினர் மருந்துப் பொருட்கள் கையளித்தனர்.

## சாய்ந்தமருது வட்டார எண்ணிக்கையை நான்காக குறைத்தமையை ஏற்க முடியாது

### பிரதமருக்கு கல்முனை மாநகர முன்னாள் முதல்வர் கடிதம்

**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**



புதிதாக அமைக்கப்பட்டுள்ள தேர்தல் எல்லைகள் நிர்ணய ஆணைக்குழுவினுடைய சிபாரிசின் அடைப்படையில், கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சாய்ந்தமருது பிரதேசத்திலுள்ள வட்டாரங்களின் எண்ணிக்கையை ஆறிலிருந்து நான்காக குறைத்துள்ளமையை ஏற்க முடியாதென்பதுடன், சாய்ந்தமருதுக்கு தொடர்ந்து 6 வட்டாரங்கள் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டுமென, கல்முனை மாநகர முன்னாள் முதல்வர் கலாநிதி சிராஸ் மீரா சாஹிப் தெரிவித்துள்ளார்.

பிரதமரும் உள்நாட்டலுவல்கள் அமைச்சருமான தினேஷ் குணவர்தனவுக்கு அண்மையில் அனுப்பியுள்ள கடிதத்திலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"அதிக வாக்காளர்களையும் அதிக சனத்தொகையையும் கொண்ட சாய்ந்தமருதுக்கு 4 வட்டாரங்கள் என்பது ஏற்க முடியாது. 6 வட்டாரங்களே தொடர்ந்து இருக்க வேண்டும்.

பொலிவேரியன் கிராமத்தை தனியான வட்டாரமாகப் பிரிக்க வேண்டிய தேவை உள்ள காலகட்டத்தில், இப்படி வட்டாரங்களை சுருக்குவதை ஏற்க முடியாது.

கல்முனையில் 5 வட்டாரங்களும் இஸ்லாமாபாத்தை தனி வட்டரமாகவும் நிர்ணயித்துள்ளமை போன்று சாய்ந்தமருத்துக்கான வட்டாரங்களும் 6ஆக இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முதியோர்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்கிவைப்பு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த முதியோர்களின் ஒன்றுகூடல் நிகழ்வும் அவர்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கும் நிகழ்வும் இருதயபுர மேற்கு முதியோர் சங்க தலைவர் பி.கிருஸ்ணபிள்ளை தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது, 60 வயதுக்கு மேற்பட்ட 60 முதியோர்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. இவ்வமைப்பின் முதியோர்கள் இணைந்து தமது திறமையை வெளிக்காட்டும் நாடகமொன்றை அரங்கேற்றினர்.

## தினகரன் பிரதேச செய்தியாளர்கள் எழுவர் உட்பட 22 பேருக்கு கௌரவம்













**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் மக்களுக்கு அர்ப்பணிப்புடன் ஊடகப் பணியாற்றி வரும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 22 ஊடகவியலாளர்கள், சரீரம் நிஷப்தபதி ஸ்ரீலங்கா தேசிய மன்றத்தினால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இதில் தினகரன் பிரதேச ஊடகவியலாளர்கள் 7 பேர் அடங்குகின்றனர்.

தினகரன் பிரதேச ஊடகவியலாளர்களான ரீ.எல்.ஜவ்பர்கான், எம்.எஸ்.எம். நூர்தீன், யு.உதயகாந்த், வ.சக்திவேல், வி.பத்மசிறீ, எஸ்.பேரின்பராசா, சிவம் பாக்கியநாதன் உள்ளிட்டோர் அடங்குகின்றனர்.

தாழங்குடா ஆரையம்பதி சரீரம் நிஷப்தபதி ஆலயத்தின் 33ஆவது ஆண்டு நிறைவையொட்டிய வருடாபிஷேகம், அவ்வாலயத்தில் நேற்று (02) முன்தினம் நடைபெற்ற போதே, மேற்படி ஊடகவியலாளர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.



# தினகரன் வடக்கின் உதயம்

Vadakkin Uthayam

# மானிய விலையில் நடமாடும் அரிசி விநியோகம்

## காரைநகரில் ஆரம்பம்



**யாழ்.விசேட நிருபர்**

காரைநகர் கூட்டுறவு சங்கம் ஊடாக நடமாடும் அரிசி விநியோக சேவை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட மக்களின் உணவுப் பாதுகாப்பு, போசாக்கு என்பவற்றை உறுதி செய்யும் நோக்கில் வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் அனுசரணையில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சந்தை விலையிலும் 50 ரூபா விலை குறைத்து மானிய அடிப்படையில் வடக்கு மாகாண மக்களுக்கு வழங்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இச்செயற்றிட்டம் முதற்கட்டமாக காரைநகர் பிரதேசத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இச்செயற்றிட்டம் மூலம் மக்களின் பொருளாதார சுமையை ஓரளவுக்கு குறைத்து, உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்கு என்பவற்றை உறுதி செய்யும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இத்திட்டம் தொடர்ச்சியாக மூன்று மாதங்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும். ஆரம்ப நிகழ்வில் வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள், காரைநகர் பிரதேச செயலாளர், காரைநகர் பிரதேச சபை தவிசாளர், காரைநகர் கூட்டுறவு சங்க பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# திருடப்பட்ட பசுமாடுகள் மீட்பு

**கரவெட்டி தினகரன் நிருபர்**



யாழ்ப்பாணம் பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துன்னாலை குடவத்தை பகுதியில் இறைச்சிக்காக வெட்டுவதற்கு தயாரான நான்கு பசு மாடுகளை பருத்தித்துறை பொலிஸார் காப்பாற்றியுள்ளனர். பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பாதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் பிரியந்த அமரசிங்க தலைமையிலான குழுவினரே இதுதொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். அதன்படி இறைச்சிக்காக வெட்டுவதற்கு தயாரான நான்கு பசு மாடுகளை பொலிஸார் காப்பாற்றியுள்ளனர்.

இதுகுறித்து கருத்து தெரிவித்த பருத்தித்துறை பொலிஸார், அண்மைக்காலமாக தொடர்ச்சியாக மாடுகள் களவாடப்படுவதாக தமக்கு கிடைத்த தொடர் முறைப்பாடுகளின் அடிப்படையில் தொடர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதாக தெரிவித்தனர்.

# பிறந்து ஓரிரு நாட்களேயான குழந்தை சடலமாக மீட்பு!

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு வத்திராயனில் பச்சிளம் குழந்தையொன்று வீதியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளது. மருதங்கேணி பொலிஸாருக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை கிடைத்த தகவலையடுத்து பச்சிளம் குழந்தையொன்று சடலமாக மீட்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பில் 34 வயதான பெண்ணொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிறந்து ஓரிரு நாட்களான பெண் குழந்தையொன்றின் சடலத்தை நாய்கள் உண்டதை கண்ட ஊரவர்கள் பொலிஸாருக்கு அறிவித்தனர். இது தொடர்பாக விசாரணைகளை முடுக்கிவிட்ட பொலிஸார், சந்தேகத்தின் அடிப்படையில் அப்பகுதியிலுள்ள வீடொன்றில் தங்கியிருந்த பெண்ணை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட பெண்ணிடம் மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியாவில் விவசாயிகளுக்கு உதவித்தொகை



**வவுனியா விசேட நிருபர்**

ஒரு ஹெக்ரெயருக்கு உட்பட்ட நிலத்தில் விவசாயம் செய்யும் 9486 விவசாயிகளுக்கு உதவித்தொகை வங்கிகளில் வைப்பு செய்யப்பட்டு வருவதாக கமநல அபிவிருத்தி திணைக்கள வவுனியா மாவட்ட உதவி ஆணையாளர் நே.விஷ்ணுதாசன் தெரிவித்துள்ளார்.

விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் உதவித்தொகை தொடர்பில் நேற்று (03.01) கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் பெரும்போகத்தில் 21,864 விவசாயிகள் பயிர்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். 23 ஆயிரத்து 369 ஹெக்டெயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் முதற்கட்டமாக விவசாயிகளுக்கான உதவித் தொகையாக ஒரு ஹெக்டெயருக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவிருக்கின்றது. இதன்படி 9486 விவசாயிகளுக்கு இந்த உதவித்தொகை திங்கட்கிழமை முதல் வங்கியில் வைப்பு செய்யப்படுகின்றது. அடுத்த கட்டமாக ஒரு ஹெக்டெயருக்கு மேல் விவசாயம் செய்த விவசாயிக்கு உதவித்தொகை வழங்கப்படும். இரண்டு வாரங்களுக்குள் முழுமையாக அவை வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

மாநகர சபை முதல்வர் இராஜினாமா;

# யாழ். மாநகர சபை உறுப்பினர்களுக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா அழைப்பு

யாழ்ப்பாணம் மாநகர சபையில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பில் நேரில் ஆராய வருமாறு, வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, மாநகர சபை உறுப்பினர்களுக்கு கடிதம் மூலம் அழைப்பு விடுத்துள்ளார்.

வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நாளைய தினம் வியாழக்கிழமை காலை கட்சிரீதியாக உறுப்பினர்களை சந்திக்கும் நோக்குடன், ஒவ்வொரு கட்சி உறுப்பினர்களுக்கும் ஒவ்வொரு நேரம் குறிப்பிட்டு கடிதம் அனுப்பி வைத்துள்ளார். யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வரினால் கடந்த மாதம் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் சபை உறுப்பினர்களால் தோற்கடிக்கப்பட்ட நிலையில், அதனை திருத்தங்களுடன் சபையில் சமர்ப்பிக்காது 31ஆம் திகதி நள்ளிரவுடன் மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இந்நிலையில் புதிய முதல்வருக்கான தெரிவு மாநகர சபை கட்டளை சட்டத்தின் பிரகாரம் நடாத்த முடியாத நிலைமை காணப்படுவதாகவும், அது தொடர்பில் ஆலோசனைகளை பெற சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவித்திருந்தார். இந்நிலையில் யாழ். மாநகர சபை உறுப்பினர்களை தனித்தனி கட்சிரீதியாக சந்திப்பதற்கு ஆளுநர் அழைப்பு விடுத்துள்ளார்.

# வாள் வெட்டுக் குழுவினரை திருப்பி தாக்கிய குடும்பஸ்தர்

**நாகர்கோவில் விஷேட நிருபர்)**

வடமராட்சி கிழக்கு, வத்திராயன் தெற்கு கிராமத்தில் குடும்பஸ்தர் ஒருவர் தன்னை தாக்க வந்த வாள் வெட்டு குழுவினரைத் திருப்பி தாக்கி வாளையும் முச்சக்கரவண்டியையும் மீட்ட சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, தனிப்பட்ட பகைமை காரணமாகவே இத்தாக்குதல் முயற்சி இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. மூவர் கொண்ட குழுவினரே இத்தாக்குதலை நடத்தியதாகவும் அதனை சுதாகரித்துக் கொண்ட குடும்பஸ்தர் தாக்க வந்தோரை திருப்பித் தாக்கியதில் அவர்கள் நிலைகுலைந்து தாம் கொண்டுவந்த வாள் மற்றும் துவிச்சக்கர வண்டியை கைவிட்டு தப்பியோடியுள்ளனர்.

மீட்கப்பட்ட வாள், துவிச்சக்கர வண்டி என்பவற்றை மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளார். பொலிஸார் முறைப்பாட்டை பதிவுசெய்துள்ளார்.

# சாவகச்சேரி நகரசபையின் சத்துமா தயாரிக்கும் திட்டம் ஆரம்பம்

**சாவகச்சேரி விஷேட நிருபர்**



பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் சாவகச்சேரி நகரசபையால் தெரிவு செய்யப்பட்ட பெண் பயனாளிகளுக்கு சத்துமா தயாரிப்பதற்கான உதவிப்பொருட்கள் நேற்று நகரசபையில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

பெண்கள் அபிவிருத்தி நிதியம் ஊடாக சாவகச்சேரி நகரசபை பெண் உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட நான்கு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் சத்துமா தயாரிப்புத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நகரசபை செயலாளர் சுபாஸ்கரன், சபையின் பெண் உறுப்பினர்களான சுபோதினி,சண்முகரஞ்சினி, லலிதாராணி ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு உதவிப்பொருட்களை வழங்கி வைத்திருந்தனர்.

# தென்மராட்சியில் இறந்தவர்களை அடக்கம் செய்வதில் இடர்பாடு

## நகரசபை உறுப்பினர் பவுலினா சுட்டிக்காட்டு

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

தென்மராட்சிப் பிரதேசத்தில் கிறிஸ்தவ மக்களுக்கான பொது மயானமொன்று இன்மையால் இறந்தவர்களை அடக்கம் செய்வதில் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொள்வதாக சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் பவுலினா சுபோதினி தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி நகரசபையில் அண்மையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனை சுட்டிக்காட்டியிருந்தார். இதுதொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், தென்மராட்சிப் பிரதேசத்தில் பல மதங்களைச் சேர்ந்த மக்களும் வசித்து வருகின்றனர். இந்நிலையில் நகரசபையை அண்மித்த உதயசூரியன் மற்றும் மகிழங்கேணிக் கிராமங்களில் அதிகளவான கிறிஸ்தவ மக்கள் வாழ்கின்றனர். எனினும் கிறிஸ்தவர்களுக்கான பொது மயானம் இன்மையால் இறப்பவர்களை அடக்கம் செய்வதில் பல்வேறு இடர்பாடுகளுக்கு மக்கள் முகம்கொடுக்கின்றனர். இந்துக்களுக்கு பொதுவான மயானம் இருப்பது போல் கிறிஸ்தவர்களுக்கான பொது மயானமொன்றினை அமைக்கவும் நகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# கடற்கரையில் சடலம் மீட்பு

**பருத்தித்துறை நிருபர்**

யாழ். வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருவடிநிலை கடற்கரையில் மீனவரொருவருடைய சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சுழிபுரம் காட்டுப்புலம் பகுதியைச் சேர்ந்த கணபதி தவம் (வயது 58) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சுழிபுரம் பகுதியிலிருந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை கடற்றொழிலுக்கு சென்றவர் கடலில் மூழ்கி காணாமல் போயுள்ளார். இந்நிலையில் திருவடி நிலை கடற்கரையிலிருந்து அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

# அதிபர் இடமாற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம்

**பருத்தித்துறை நிருபர்**



யாழ்ப்பாணம் வரணி கரம்பைக்குறிச்சி அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் இடமாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மாணவர்களின் பெற்றோர்கள் பாடசாலை நுழைவாயிலை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை பாடசாலைக்கு மாணவர்கள் எவரும் சமூகமளிக்கவில்லை. ஆசிரியர்கள் மாத்திரம் பாடசாலைக்கு சமூகமளித்திருந்தனர்.

பாடசாலை அதிபர் மாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து மாணவர்களை பாடசாலைக்கு அனுப்பவில்லை என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர் தெரிவித்தனர்.



யாழ்.செட்டித்தெரு பாடசாலையில் கல்வி பயிலும் வறிய குடும்பத்தைச் சேர்ந்த 50 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கணபதிப்பிள்ளை நாகபுஷ்பம் ஞாபகார்த்தமாக அவரது மகன் ஜெயா தம்பதியினர் வழங்கிவைத்தனர்.

# அத்துமீறி மீன்பிடித்த 12 பேருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை

**யாழ்.விசேட நிருபர்**

இலங்கை கடற்பகுதியில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த 12 பேருக்கு ஒத்திவைக்கப்பட்ட மூன்றுவருட சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் இந்த 12 பேருக்கும் மூன்று வருட சாதாரண சிறைத்தண்டனை விதித்து, அதனை பத்து வருடங்களுக்கு ஒத்திவைத்துள்ளது. கடந்த டிசம்பர் 21ஆம் திகதி பருத்தித்துறை அருகே இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் ஒரு படகையும் அதிலிருந்த பன்னிரெண்டு மீனவர்களையும் கைது செய்தனர். 12 இந்திய மீனவர்களும் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 12 பேருக்கும் மூன்று வருட சாதாரண சிறைத்தண்டனை விதித்து அதனை பத்து வருடங்களுக்கு ஒத்திவைத்ததுடன் படகு மற்றும் கைப்பற்றப்பட்ட சான்று பொருட்களை அரசுடைமையாக்க பருத்தித்துறை நீதவான் பொன்னுத்துரை கிரிசாந்தன் உத்தரவிட்டார்.




# பாதையை புனரமைக்குமாறு மக்கள் எதிர்ப்பு போராட்டம்





**ஹற்றன் சுழற்சி நிருபர்**

'விரைவில் தேர்தல் நடைபெறவுள்ளது. எனவே, எமக்கான வீதியை புனரமைத்து தராமல், அரசியல்வாதிகள் எவரும் ஊர் பக்கம் வரக் கூடாது. அவ்வாறு வந்தால் அடித்து விரட்டுவோம்.' இவ்வாறு ஹற்றன், வெளிஓயா 22 ஆம் தோட்ட பகுதி மக்கள் எச்சரித்து மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஹற்றன், வெளிஓயா 22 ஆம் இலக்க தோட்டத்தில் உள்ள 4 வயது சிறுவன் ஒருவன் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். சுகவீனமுற்றிருந்த குறித்த சிறுவனை, உரிய நேரத்துக்கு வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு வாகனம் இருக்கவில்லை. வீதி குண்டும் குழியுமாக காணப்படுவதால் வெளியில் இருந்துகூட வாகனத்தை பெற முடியாத நிலை ஏற்பட்டது.

இந்நிலையிலேயே இதற்கு மேலும் மக்கள் சாவதற்கு இடமளிக்க முடியாது எனவும், வீதியை உடன் புனரமைத்து தருமாறு வலியுறுத்தியும் தோட்ட மக்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். சிறார்களும் இப்போராட்டத்தில் பங்கேற்றனர்.

சுமார் 2 கிலோ மீற்றர் வரையான வீதி குண்டும் குழியுமாக காணப்படுவதால் மழைக்காலங்களில் பாடசாலை மாணவர்கள், உயிரை கையில் பிடித்துக் கொண்டே பயணிப்பதாகவும், இது தொடர்பில் பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

சிறுவனின் மரணத்துக்கு இந்த வீதியும் ஒரு காரணம். இனியும் மக்களை பலிகொடுக்க நாம் தயாரில்லை. எமக்கான வீதி புனரமைக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அரசியல்வாதிகளை தோட்டத்துக்குள் விட மாட்டோம். எனவும் தோட்ட மக்கள் திட்டவட்டமாக குறிப்பிட்டனர்.

# சிவனொளிபாதமலை வந்த யாத்திரிகர்கள் 08 பேர் கைது

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

சிவனொளிபாதமலைக்கு யாத்திரை வருபவர்களை கினிகத்தேனை, கலுகல, தியகல உள்ளிட்ட பல பகுதிகளில் பொலிஸார் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறான நடவடிக்கையின் போது நேற்று முன்தினமும் நேற்றும் 08 பேர் ஹற்றன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த நபர்களிடமிருந்து கேரள கஞ்சா, மதன மோதகம், மாவா, ஐஸ், போதை மாத்திரைகள் உள்ளிட்ட போதை பொருட்கள் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

சிவனொளிபாதமலை மற்றும் ஹற்றன் பகுதிக்கு 2022 வருட இறுதி நாட்களான 30,31 ஆம் திகதிகளில் விடுமுறைக்காக பெரும் எண்ணிக்கையிலான சுற்றுலா பயணிகள் வருகை தந்தனர். இவ்வாறு வந்த சுற்றுலா பயணிகளில், போதைப் பொருட்களுடன் வந்த எட்டு பேர் ஹற்றன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மலையக பகுதிகளுக்கு போதைப்பொருட்களை கொண்டு வருவதனை தடுக்கும் நோக்கில் ஹற்றன் பொலிஸ் கோட்டத்தில் பல்வேறு இடங்களில் வீதி சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# 'கலைச் சங்கமம்' கலை நிகழ்ச்சி

**நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்**

கண்டி நுண் கலை சங்கத்தின் ஏற்பாட்டில் 'கலைச் சங்கமம்' கலை நிகழ்ச்சி 07 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கண்டி சில்வஸ்டர் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்விற்கு பிரதம அதிதியாக மத்திய மாகாண பிரதம செயலாளர் காமினி ராஜரட்னவும் கௌரவ அதிதியாக மத்திய மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளரும் ஹற்றன் கல்வி வலய பணிப்பாளருமான திருமதி.ஏ.ஆர்.சத்தியேந்திராவும் கலந்துக் கொள்ளவுள்ளனர். இதற்கான ஏற்பாட்டை கண்டி நுண்கலை சங்கத்தினர் செய்துள்ளனர்.



அவஸ்திரேலியா பெருந்தோட்ட பெண்களின் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் மாத்தளை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கந்தேநுவர, இரத்தொட்டை, பிடகந்த, உனுகல ஆகிய தோட்டங்களை சேர்ந்த 115 பெண்களுக்கு சத்துணவு பொதிகள் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹண திசாநாயக்க பெண் ஒருவருக்கு வழங்கி வைத்த போது,.... (படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

# இரத்தினபுரி கொடவெல வீதியின் இருமருங்கிலும் மாணிக்கக்கல் தோண்டல்

## உடன் நிறுத்த சப்ரகமுவ மாகாண ஆளுநர் பணிப்பு

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

இரத்தினபுரி கொடவெல வீதியின் இரு புறங்களிலும் மாணிக்கக் கல் தோண்டப்பட்டு வருவதை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ நேற்று முன்தினம் (2) மாணிக்கக்கல் அதிகார சபையின் தலைவர் விராஜ் சில்வாவுக்கு தொலைபேசி ஊடாக உத்தரவிட்டுள்ளார்.

இரத்தினபுரி நகரின் மாற்று வழியாக பயன்படுத்தப்படும் இரத்தினபுரி கொடவெல வீதியின் இரு புறங்களிலும் மாணிக்கக்கல் தோண்டப்பட்டு வருவதால் மேற்படி வீதிக்கு பாரிய சேதம் ஏற்பட்டு வருவது குறித்து சப்ரகமுவ மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே மாகாண ஆளுநர் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார். இரத்தினபுரியின் பிரதான மாற்று வழியாக பயன்படுத்தப்படும் மேற்படி வீதி 11 கோடி ரூபா செலவில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் கடந்த 18 மாதங்களுக்கு முன்பு அபிவிருத்தி செய்யப்பட்டது.

இரத்தினபுரி மாநகர சபைக்கு சொந்தமான மேற்படி வீதி, இரத்தினபுரி நகரில் வெள்ளம் ஏற்படும் போது இவ்வீதியை மாற்று வீதியாக பயன்படுத்தப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

இரத்தினபுரி கொடவெல மாற்று வீதியின் இரு புறங்களிலும் பாரிய அளவில் பெகோ இயந்திரம் மூலம் மாணிக்கக் கல் தோண்டப்பட்டு வருவதால் மேற்படி வீதி பழுதடைந்து வருவது தற்போது மிக பெரிய பிரச்சினைக்கு உள்ளாகியுள்ளது.



மேற்படி வீதியின் இரு புறங்களிலும் மாணிக்கக் கல் அதிகார சபையின் அனுமதி பத்திரத்துடன் பெகோ இயந்திரத்தின் மூலம் மாணிக்கக் கல் தோண்டப்பட்டு வருவதால் வீதி சேதமடைந்துள்ளது.

மேற்படி சேதமடைந்த வீதியை மாணிக்கக் கல் தோண்டப்பட்டு வரும் உரிய அனுமதி பத்திரத்தின் பொறுப்பாளரால் சீரமைந்து தருவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாக மாணிக்கக் கல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

மேற்படி வீதியின் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

# ஒஸ்போன் தோட்டத்தில் காணாமல் போன முதியவர் சடலமாக மீட்பு

**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

நோட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஒஸ்போன் தோட்டத்தில் கடந்த பத்து நாட்களுக்கு முன்னர் காணாமல் போன 73 வயது மதிக்கத்தக்க வயோதிபர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான பொன்னுசாமி மகாலிங்கம் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கடந்த பத்து நாட்களுக்கு முன்பதாக காலை 7.30 மணியளவில் காணாமல் போனதையடுத்து நோட்டன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து குறித்த நபரை தொடர்ச்சியாக தேடும் பணிகள் இடம்பெற்று வந்துள்ளன.

இந்நிலையில் நேற்று காசல்ரீ நீர்த்தேக்கத்திற்கும் நோட்டன் பகுதிக்கும் இடையில் உள்ள காசல்ரீ ஓயாவில் சடலமொன்று மிதப்பதைக் குறித்த அப்பகுதிக்கு வந்த தோட்ட மக்கள் கண்டுள்ளனர். இதனையடுத்து, சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்துள்ளனர்.

இந்நிலையில, ஹற்றன் மாவட்ட நீதவான் சடலத்தை பார்வையிட்டப் பின்னர பிரதே பரிசோதனைக்காக சடலம் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படும் என தெரிவித்த நோர்ட்டன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



கண்டி விவேகானந்த தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்ற ஒளி விழாவில் பிரதம அதிதியாக கண்டி கிறிஸ்தவ நாதர் ஆலயத்தின் தலைமைக் குரு அருட்பணி செல்டன் சமாதானம் மற்றும் பாடசாலை அதிபர் சிவக்குமார் ஆகியோர் உரையாற்றுவதையும் இடம் பெற்ற கலை நிகழ்ச்சிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்: நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

# கைது செய்யப்பட்ட நண்பரை காப்பாற்ற பொலிஸாரின் கையை கடித்த நபர்

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவரை பொலிஸ் அதிகாரியின் கையை கடித்து காயப்படுத்தி காப்பாற்ற முயன்ற சந்தேக நபரின் நண்பர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக இரத்தினபுரி வலைய குற்றத் தடுப்பு பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கஞ்சா செடி 10 ஐ தம் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டுக்காக சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாகவும் அச்சமயம் சந்தேக நபரின் நண்பர் ஒருவர் பொலிஸ் அதிகாரியின் கையை கடித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்தினபுரி அக்மீமன பிரதேசத்தின் வீடொன்றின் பின் புறம் உற்பத்தி செய்யப்பட்டிருந்த கஞ்சா செடிகளுக்கு உரம் போட்டுக் கொண்டிருக்கும்போது கஞ்சா செடி பத்துடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக இரத்தினபுரி குற்றத் தடுப்பு பிரிவு அறிவித்தது.

அச்சமயம் அந்த இடத்திற்கு வந்த சந்தேக நபரின் நண்பர் ஒருவர் சந்தேக நபரை காப்பாற்றுவதற்கு பொலிஸ் அதிகாரியின் கையை கடித்துள்ளதாகவும் கையை கடித்தமையால் ஏற்பட்ட காயத்தின் காரணமாக பொலிஸார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் சந்தேக நபரின் நண்பரும் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் இலங்கை மின்சார சபையின் ஊழியரென பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரின் கடமைக்கு பங்கம் விளைவித்தல் அதிகாரியின் கையை கடித்து காயப்படுத்தியமை சந்தேக நபரை காப்பாற்ற முயற்சித்தமை ஆகிய குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# ஆசிரியர்களின் தற்காலிக இணைப்பை நீடிக்கவும்; கல்வி அமைச்சுக்கு கோரிக்கை கடிதம்

**கினிகத்தேனை தினகரன் நிருபர்**

ஆசிரியர்களின் தற்காலிக இணைப்பை நீடிப்பது தொடர்பாக கல்வி அமைச்சு செயலாளருக்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் 2022.12.14 ஆம் திகதி கல்வி அமைச்சு செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக சங்கத்தின் தேசிய அமைப்பாளர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்

மூன்றாம் தவணை வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு ஆசிரியர்கள் பல்வேறுப்பட்ட பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர். இதில் போக்குவரத்து மற்றும் சுகாதார பிரச்சினைகள் காரணமாக ஆசிரியர்களுக்கு 2022.12. 31 ஆம் திகதி வரை வழங்கப்பட்டிருந்த தேசிய மற்றும் மாகாண தற்காலிக இணைப்பை 2023 மார்ச் 24ஆம் திகதி. வரை நீடிப்பதற்கான கோரிக்கை தொடர்பாக சங்கமானது உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகின்றது.

கல்வி அமைச்சு செயலாளரால் ஊடக அறிக்கையின் மூலம் வெளியிட்ட அறிக்கையானது சட்ட ரீதியான பூரணமான கடிதம் இல்லை என்பதனையும் மாகாண கல்வி பணிப்பாளர்கள் இக்கடித்தை ஏற்றுக்கொள்ளாமல் பல்வேறுப்பட்ட அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் காரணமாக தற்காலிக இணைப்பில் இருக்கும் ஆசிரியர்கள் கடுமையான அசௌகரியங்களுக்கு ஆளாகியுள்ளனர். இங்கு கல்வி அமைச்சு வெளியிட்ட ஊடக அறிக்கையானது சட்டரீதியற்றது எனவும் இதற்கு தகுந்த கடிதத்தை கல்வி அமைச்சு செயலாளரின் கையெழுத்துடன் வெளியிடும்படி இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கோரிக்கை விடுத்துள்ளதாக தேசிய அமைப்பாளர் பிரதீப் தெரிவித்துள்ளார்.

# வெலிமடை வலயக் கல்வி பணிப்பாளராக முஸ்லிம் பெண் ஸரீனா பேகம் நியமனம்

**ஊவா சுழற்சி நிருபர்**

ஊவா மாகணத்தில் முதல் முறையாக சிறுபான்மை முஸ்லிம் பெண் ஒருவர் வலயக் கல்வி பணிப்பாளராக வெலிமடை வலயக் கல்வி பணிமனைக்கு பகினிகஹவெலயைச் சேர்ந்த ஸரீனா பேகம் நியமிக்கப்பட்டார்.

இவர் ப/வெலிமடை முஸ்லிம் மஹா வித்தியாலயம் மற்றும் மொ/பகினிகஹவெல முஸ்லிம் மத்திய கல்லூரியின் பழைய மாணவரும், அப் பாடசாலையில் ஆசிரியராக கடமை புரிந்து கல்வி நிர்வாக சேவை பரீட்சையில் சித்தியடைந்து பிபிலை வலயக் கல்விப் பணிப்பாளராகவும் கடமை புரிந்தார்.

பின்னர் கல்வி நிர்வாக சேவையில் தரம் உயர்வு பெற்று ஊவா மாகாண கல்வி அமைச்சில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வெலிமடை வலயக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றார். ஊவா மாகாண ஆளுனர் ஏ.ஜே.எம்.. முஸம்மில் இவருக்கான நியமனக் கடிதத்தினை உத்திய பூர்வமாக கடந்த வெள்ளிக்கிழமை ஊவா மாகாண கேட்போர் கூடத்தில் வைத்து கையளித்தார். இதன் போது ஏனைய துறைகளுக்கு பொறுப்பான அதிகாரிகளுக்கும் ஆளுனரால் அன்றைய தினம் நியமனங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

### லேக்ஹவுஸ் நிறுவனத்துக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றும்

# ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவேன்

## நிறுவனத் தலைவர் அனுஷ பெல்பிட்ட

நாட்டின் பொருளாதார பிரச்சினைக்கு மத்தியில் அநேகமான நிறுவனங்கள் பாதிப்புக்குள்ளாகிய நிலைமையில் லேக்ஹவுஸ் நிறுவன பணிப்பாளர் சபை மற்றும் ஊழியர்களின் அர்ப்பணிப்பு காரணமாக கடந்த நான்கு மாதங்களில் ஓரளவு இலாபமீட்டும் நிறுவனமாக லேக்ஹவுஸ் திகழ்வதாக அதன் தலைவர், முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும் ஊடக அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்ட தெரிவித்துள்ளார்.



2023 புதிய வருட பிறப்பை முன்னிட்டு நடந்த விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.சர்வமத வழிபாடுகள் நடைபெற்றதோடு பணிப்பாளர் சபை மற்றும் ஊழியர்களுக்கு ஆசிர்வாதமும் வழங்கப்பட்டது.

தலைவர் அனுஷ பெல்பிட்ட அங்கு கருத்து தெரிவித்த போது,

நிறுவன ஊழியர்களின் சமூக நலனை மேம்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம். நிறுவனத்தில் அச்சு நடவடிக்கைகளை மேலும் அபிவிருத்தி செய்ய நவீன இயந்திர உபகரணங்களை இவ்வருடத்தில் விலைக்கு வாங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.இந் நிறுவனம் மிகவும் இக்கட்டான நிலைமையில் இருந்த போதே நான் தலைவராக நியமிக்கப்பட்டேன் 2022 ஆம் ஆண்டு இந்நிறுவனத்துக்கு மிக மோசமான ஆண்டாகும்.

நிறுவனத்துக்கு முதல் 8 மாத கால நட்டம் 290 மில்லியன் ஆகும். அதனை 230 மில்லியன் ஆக எம்மால் குறைக்க முடிந்துள்ளது. ஏனென்றால் செப்டம்பர் மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரை 60 மில்லியன் ரூபாய் இலாபம் பெறப்பட்டது.

கடந்து வருட இறுதியில் நான்கு மாத காலத்தில் நிறுவனத்திற்கு இலாபம் கிடைத்துள்ளது. 10 வருடத்துக்கு அதிகமான சேவையை யுடைய ஊழியர்கள் 10 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது. ஒப்பந்த அடிப்படையில் இங்கு வேலை செய்த 25 பேர் 45 வயதுக்கு குறைவானவர்கள் மேலும் 16 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அவர்களது ஆறு மாத கால சேவை கண்காணிக்கப்படும். 2022 ஆம் ஆண்டு நிறுவனத்தின் நட்டத்தை குறைப்பதற்காக பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. நட்டத்தில் இயங்கிய கல்வி வெளியீடுகளை அச்சிடுவதை நிறுத்த தீர்மானிக்கப்பட்டது. சரசவி, சுபசெத டிஜிட்டல் மயப்படுத்தப்பட்டன. 149 பேர் சுயவிருப்பு ஓய்வு மூலம் அனுப்பப்பட்டனர். அதற்காக 334 மில்லியன் ரூபாய் செலவானது. நிறுவனத்தின் பங்குகளை விற்றதன் மூலம் 210 மில்லியன் ரூபா பெறப்பட்டது. இவ் வருட இறுதிக்குள் மேலும் 100 பேரை இம்முறையின் கீழ் ஓய்வு பெறச் செய்ய நாம் தீர்மானித்துள்ளோம். நிறுவனத்தின் வளர்ச்சிக்காக இயந்திரங்கள் பலவற்றை இவ்வருடம் வாங்குவதே எனது நோக்கமாகும். நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கையை 700 வரையும் ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களின் எண்ணிக்கையை 180 வரையும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதன்படி நிறுவனத்தின் நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கையை 700 ஆகவும் ஒப்பந்த ஊழியர்களின் எண்ணிக்கையை 150 க்குள் கட்டுப்படுத்த நிர்வாகத்தினரும் திறைசேரியும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன.



நாட்டின் தற்போதைய நிலைமையுடன் நிறுவனத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வது சிரமமாகும். கடதாசி விலை மிகவும் அதிகம். அச்சிடும் கடதாசியின் விலை நான்கு தொடக்கம் 5 இலட்சமாக உள்ளது. கடந்த கால நிர்வாகத்தினர் 1000 தொன்னளவில் கடதாசியை வாங்கியிருந்தார்கள். அதனால் தான் இவ்வளவு காலமும் சிரமமின்றி பத்திரிகை அச்சிட முடிந்துள்ளது. அதற்காக கடந்த கால நிர்வாகத்தினருக்கு நன்றி தெரிவிக்கின்றேன். லேக்ஹவுஸ் ஊடக அகாடமியை நிறுவனத்துக்கு பணத்தை சம்பாதித்துக் கொடுக்கும் இடமாக மாற்றுவேன். நிறுவனத்தின் நூலகத்தில் பெறுமதி வாய்ந்த வளங்கள் எம்மிடம் உள்ளன.



எனது தலைமையின் கீழ் நிறுவனத்துக்கு பெற்றுக் கொடுக்கக் கூடிய அதி உயர்ந்த சேவையை நான் பெற்றுக் கொடுப்பேன். ஒரு நிலையான மட்டத்திற்கு நிறுவனத்தை கொண்டு வந்துள்ளேன். அது ஒரு விதமான திருப்புமுனை மாத்திரமேயாகும். இந்த திருப்புமுனையின் கீழ் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்தும் பூர்த்தி செய்யப்படவில்லை. நிறுவனத்தின் வளர்ச்சிக்காக எனக்கும் பணிப்பாளர் சபைக்கும் தனித்து நடவடிக்கையில் ஈடுபட முடியாது. ஊழியர்களுடன் இணைந்து ஒரே அணியாக முன்னோக்கிச் செல்ல வேண்டும். அனைவரும் மிகவும் கஷ்டத்தில் தான் வாழ்கிறோம். நாட்டின் பொருளாதார நிலைமை இதற்கு நிச்சயமாக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

லேக் ஹவுஸ் நிறுவனத்தின் சட்ட மற்றும் நிர்வாகப் பணிப்பாளர் சட்டத்தரணி ஜனக ரணதுங்க, நிதி பணிப்பாளர் பேராசிரியர் ஏ.எச். என் காரியவசம், நிறைவேற்றுப் பணிப்பாளர் சட்டத்தரணி மஞ்சுள மாக்குபுற, ஆசிரிய பீட பணிப்பாளர் சிசிர பரணதந்திரி, பொது முகாமையாளர் சுமித் கொத்தலாவல உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

**சந்தியா கருணாரத்ன**
**தமிழில் வீ.ஆர்.வயலட்**



களுத்துறை தெபுவன பாரதி தமிழ் வித்தியாலய மாணவர்கள் கொழும்புக்கு கல்விச் சுற்றுலா மெற்கொண்டு வந்திருந்த போது லேக்ஹவுஸ் நிறுவனத்தை பார்வையிட்ட பின்னர் எடுத்துக் கொண்ட படம்.

### ட்ரோன்கள் மூலம் போதைப்பொருள், ஆயுதங்கள் கடத்தல்

# பாகிஸ்தான் பயங்கரவாதிகளின் முயற்சியை தடுக்க இந்தியா ஏற்பாடு

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான எல்லைக்கு மேலாக அடிக்கடி ஆயுதமும் போதைப் பொருட்களும் தாங்கிய ட்ரோன்கள் பறப்பது அதிகரித்து வருவதால் இதை நிறுத்தும் வகையில் எதிர் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளும்படி இந்திய உள்துறை அமைச்சு எல்லையோர இராணுவ அணிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

பாகிஸ்தானைத் தளமாகக் கொண்டு இயங்கும் லக்ஷர் ஈ தொய்பா மற்றும் பாக். ஆதரவு பயங்கரவாத அமைப்புகளே ட்ரோன்கள் வழியாக இந்தியாவுக்குள் ஆயுதங்களையும் போதைப் பொருட்களையும் கடத்துவதாகவும் ஹெரோயின் போதைப் பொருளை ட்ரோன்களைப் பயன்படுத்தி தமது சகாக்களுக்கு கிடைக்கும் வகையில் வீசி எறிவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

போதை பொருட்களை விற்று பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக பணம் சேர்ப்பது, காஷ்மீரி இளைஞர்களை போதைப் பழக்கத்துக்கு அடிமையாக்குவது, ஆயுதங்களைக் கடத்துவது என்பன பிரதான நோக்கங்கள் என்றும் தெரிவிக்கும் இராணுவ தரப்பு, எல்லை இராணுவம் 22 ட்ரோன்களை இதுவரை சுட்டு வீழ்த்தி இருப்பதாகவும் 45 கிலோ ஹெரோயின் மற்றும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளது. 2020 முதல் 492 ட்ரோன்களின் நடமாட்டம் அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் 2022 இல் 311 நடமாட்டங்களும், 2021 இல் 104 மற்றும் 2020 இல் 77 நடமாட்டங்களும் அவதானிக்கப்பட்டதுடன் வருடா வருடம் கடத்தலுக்கு ட்ரோன்களின் பயன்பாடு அதிகரித்து வருவதை இது காட்டுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே மூவாயிரத்து 323 கி.மீ. தூர எல்லைக் கோடு அமைந்துள்ளது. பெருமளவிலான ட்ரோன் நடமாட்டம் பஞ்சாம் எல்லையோரமாகவே காணப்படுகிறது.



ஹேலிஸ் குறூப் நிறுவனத்தின் கிங்ஸ்பரி ஹோட்டல் 'கரேஜ் ஒப் ஹோப்' என்ற செயற்றிட்டத்தின் கீழ் 25 மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அதி கஷ்ட பாடசாலைகளில் உள்ள 2,500 மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் அப் பாடசாலை அதிபர்களிடம் நேற்று கிங்ஸ்பரி ஹோட்டலில் வைத்து ஹேலிஸ் குறூப் தலைவர் மொஹான் பண்டித்தகே, செயற்பாட்டுப் பணிப்பாளர் ரோஹான் கா ஆகியோரால் வழங்கி வைக்கப்பட்ட பின்னர் பிடிக்கப்பட்ட படம். (படம்: சுதத் நிசாந்த)


தினகரன் தினகரன் வாரமஞ்சரி
வாழ்த்துக்கள்



# எல் பீ ஃபினான்ஸ் பி.எல்.சி பகிரங்க ஏலவிற்பனை

எல் பீ ஃபினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தில் அடகு வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | | முகவரி |
|---|---|---|
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 755/1, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 91, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 92, ஸ்டான்லி திலகரட்ன மாவத்தை, நுகேகொடை. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 434, ஈ.டபிள்யூபெரேரா மாவத்தை, கோட்டே வீதி, பிட்டகோட்டே. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 595, ஹைலெவல் வீதி, கங்கொடவில, நுகேகொடை. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 61/2, கண்டி வீதி, திஹாரிய. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 594/3, கண்டி வீதி, நிட்டம்புவ. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 19, பிரதான வீதி, கேகாலை. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 1B, பௌத்தாலோக மாவத்தை, கம்பஹா. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 81, கண்டி வீதி, வரகாபொல. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 282, அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 13, ஸ்டேசன் வீதி, மாத்தறை. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 66, திஸ்ஸ வீதி, தங்காலை. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 138 D/1, அம்பாந்தோட்டை வீதி, அம்பலாந்தோட்டை. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 83, தெனியாய வீதி, அக்குரெஸ்ஸ. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 2, எச்.வி.கட்டிடம், தெல்லாவ வீதி, நெலுவ. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 149, பிரதான வீதி, தெனியாய. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 65/A, ஸ்ரீ சத்தர்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 282, நாகலாகம் வீதி, கொழும்பு 14. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 52/17, கொதட்டுவ புதிய நகரம், கொதட்டுவ. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 21, புனித ஜோசப் வீதி, கொழும்பு 14. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 371/1, டாம் வீதி, கொழும்பு 12. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 551, தெமட்டகொட வீதி, கொழும்பு 09. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 149, கே பி கிறிஸ்டி பெரேரா மாவத்தை, கொழும்பு 13. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 197, செட்டியார் தெரு, கொழும்பு 11. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 256, புதிய நகரம், தம்புத்தேகம. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | ரஜரட்ட கட்டிடம், பிரதான வீதி, கதுருவெல, பொலன்நறுவை. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 137, பிரதான வீதி, அனுராதபுரம். |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 514/A, புதிய நகரம், அனுராதபுரம். |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 219, புத்தளம் வீதி, நொச்சியாகம. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 26, கண்டி வீதி, மதவாச்சி. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 38, குருநாகல் சந்தி, தம்புளை. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | பிரதான வீதி, மெதிரிகிரிய. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 15, தலாவ வீதி, கெக்கிராவ. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 24, சிலாபம் வீதி, ஆனமடுவ. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 96, அகலவத்த வீதி, மத்துகம. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 87, பிரதான வீதி, பிட்டிகல. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 14, பிரதான வீதி, எல்பிட்டிய. |
| 01/06/13/20 | பிப்ரவரி 2023 | இல. 48, இரத்தினபுரி வீதி, பதுரலிய. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 134, பிரதான வீதி, வெண்ணப்புவ. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 106C, குருநாகல் வீதி, புத்தளம். |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 84, பிரதான வீதி கல்பிட்டிய. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 356, பிரதான வீதி, நீர்கொழும்பு. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 40A, கொழும்பு வீதி, சிலாபம். |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 110, சிலாபம் வீதி, கொச்சிகடை. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 57, வெயாங்கொட வீதி, மினுவாங்கொட. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 229/1, கடவத்த வீதி, கனேமுல்ல. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 69, கிரஉல்ல வீதி, திவுலபிட்டிய. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 107, சென் ஜோசப் வீதி, நீர்கொழும்பு. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 75A, சிலாபம் வீதி, மாரவில. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 434, பேஸ்லைன வீதி, அவரிவத்த, கட்டுநாயக்க. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 661/A, தேவத்த வீதி, ராகம. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 6/1/1, பழைய நீர்கொழும்பு வீதி, ஜா-எல. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 39, கொழும்பு வீதி, கந்தானை. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 18, எலகந்த, ஹெந்தல, வத்தளை. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 17, ஸ்டேசன் வீதி, ஹெந்தல சந்தி, வத்தளை. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 350/16, கொழும்பு வீதி, தெல்கொட. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 484, அவிசாவளை வீதி, கடுவளை |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 722, வராகொட வீதி, விஹாரை சந்தி, களனி. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 44, மாகொல வீதி, கிரிபத்கொட. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 175, கண்டி வீதி, கிரிபத்கொட. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 136/12H, கண்டி வீதி, கடவத்தை. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 145, மலே வீதி, கொழும்பு 02. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 66, காலி வீதி, கல்கிசை. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 11, கல்தெமுல்ல வீதி, மொரட்டுவ. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 20, தர்மபால மாவத்தை, கொழும்பு 03. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 245, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 54, டி.எஸ்.சேனநாயக்க மாவத்தை, பொரளை. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 197, டீன்ஸ் வீதி, கொழும்பு 10. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 556, 558, மருதானை வீதி, கொழும்பு 10. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 239, கிருல வீதி, நாரஹேன்பிட்டி. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 129, பழைய காலி வீதி, மொரட்டுவ. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 68, ஹொரண வீதி, பிலியந்தலை. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 28, தெஹிவளை வீதி, பொரலஸ்கமுவ. |
| 02/07/14/21 | பிப்ரவரி 2023 | இல. 227, டி சொய்ஸா வீதி, மொரட்டுமுல்ல, மொரட்டுவ. |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 118A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 103A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 21, தம்புளை வீதி, குருநாகல். |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 12, பிரதான வீதி, குளியாப்பிட்டி. |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 31, குருநாகல் வீதி, கலேவெல. |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 35, சரசவி கட்டிடம், பிரதான வீதி, நாரம்மல. |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 835/2A, தலங்கம வடக்கு, மாலபே. |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 365, ஹைலெவல் வீதி, கொட்டாவ. |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 76, ஹைலெவல் வீதி, ஹோமகம. |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 419, கோட்டே வீதி, ராஜகிரிய |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 69, தெஹிவளை வீதி, மஹரகம. |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 227/A, ஹைலெவல் வீதி, வத்தேகெதர, மஹரகம |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 124/A, துட்டுகெமுனு வீதி, கொஹுவல. |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 165, தர்மபால மாவத்தை, கொழும்பு 07. |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 50/12, கொடகம வீதி, அத்துருகிரிய. |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 04, பாணந்துறை வீதி, பண்டாரகம. |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 18, கெசெல்வத்த, பாணந்துறை. |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 508, காலி வீதி, பாணந்துறை. |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 103, பாணந்துறை வீதி, ஹொரண. |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 534, காலி வீதி, வாத்துவ. |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 334, பிரதான வீதி, களுத்துறை தெற்கு. |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 358/D, மத்துகம வீதி, தர்கா நகர். |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 175/A, காலி வீதி, பேருவளை. |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 358, காலி வீதி, அளுத்கம. |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 84A, காலி வீதி, தெஹிவளை. |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 124, காலி வீதி, தெஹிவளை. |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 224, காலி வீதி, வெள்ளவத்தை. |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 269, பிரதான வீதி, அத்திடிய. |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07. |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 676, காலி வீதி, கொழும்பு 03. |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 51A, டபிள்யூ.ஏ.சில்வா மாவத்த, கொழும்பு - 06 |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 150, பிரதான வீதி, காலி. |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 96/2, காலி வீதி, அம்பலாங்கொட. |
| 03/08/15/22 | பிப்ரவரி 2023 | இல. 598 E, ஹிரிம்புர வீதி, கராபிட்டிய. |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல. 56, 57, எட்வின் விக்ரமரட்ன சொப்பிங் கம்பிளெக்ஸ், புதிய நகரம், |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | மஹியங்கனை. |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல. 44/1, புதிய பேருந்து தரிப்பிட வீதி, மொனராகலை. |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல.10/2, இலங்கை வங்கிக்கு எதிரே, புதிய நகரம், தெஹியத்தகண்டிய. |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல. 226, டி எஸ் சேனநாயக்க வீதி, கண்டி |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல. 14, புதிய நகரம், திகன |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல. 153, மடவல வீதி, கட்டுகஸ்தோட்டை. |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல. 251, பிரதான வீதி, மாத்தளை. |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல. 55, லோவர் வீதி, பதுளை. |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல. 167, பிரதான வீதி, பண்டாரவளை. |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல. 3, நுவரெலியா வீதி, வெலிமடை. |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல. 26, வங்கி வீதி, பதுளை. |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல. 71, ராணி எலிசபெத் மாவத்தை, நுவரெலியா. |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல. 473, நுவரெலியா வீதி, புஸ்ஸல்லாவ |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல. 22, நுவரெலியா வீதி, கம்பளை. |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல. 115, கொட்டுகொடெல்ல வீதி, கண்டி. |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல. 13A, கண்டி வீதி, கெலிஓயா. |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல. 52, தன்பார் வீதி, ஹட்டன். |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல. 175, பிரதான வீதி, மஸ்கெலியா. |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல. 66, நாவலபிட்டிய வீதி, கம்பளை. |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல. 298, கொழும்பு வீதி, பிலிமத்தலாவ. |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல. 73, கொத்மலை வீதி, நாவலபிட்டி. |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல. 230, கண்டி வீத, மாவனல்ல. |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல. 530, அளுத் மாவத்தை சாலை, கொழும்பு 15. |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல. 81, மோதர வீதி, கொழும்பு 15. |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல. 03, சென் லூசியாஸ் வீதி, கொட்டாஞ்சேனை. |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல. 3/729, பாம் வீதி, கொழும்பு 15. |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல. 47, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு 14. |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல. 04, மணிக்கூட்டு கோபுரம் எதிரே, அம்பாறை |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | MPCS கட்டிடம், பிரதான வீதி, சாய்ந்தமருது - 09. |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | பிரதான வீதி, மட்டக்களப்பு வீதி, கல்முனை. |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல. 25, ஹிஜ்ரா சந்தி, கல்முனை வீதி, சம்மாந்துறை. |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல. 28, சாகம வீதி, அக்கரைப்பற்று - 08 |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | பிரதான வீதி, திருக்கோவில் - 01 |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | பிரதான வீதி, பொத்துவில். |
| 09/16/23/27 | பிப்ரவரி 2023 | இல. CC/44, பிரதான வீதி, மத்திய முகாம் 03, அம்பாறை. |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல. 24/A, பிரதான வீதி, ஹங்வெல்ல. |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல. 25, யட்டியாந்தோட்ட வீதி, அவிசாவளை |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல. 141/A, கொலன்னாவ வீதி, கொலன்னாவ. |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல. 25A, பிரதான வீதி, எஹெலியகொட. |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல. 49, சேனாநாயக்க மாவத்தை, இரத்தினபுரி. |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல. 34, பிரதான வீதி, திஸ்ஸமஹாராமய |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல. 21, புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய. |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல. 19, தனயம் பிவிசும் மாவத்தை, பலாங்கொட. |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல. 275, சென்ரல் வீதி, திருகோணமலை. |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல. 252B, மற்றும் 252/1, கண்டி வீதி திருகோணமலை. |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல. E 20/3/3, திருகோணமலை வீதி, சேருநுவர. |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல. 175, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல. 71/A, பிரதான வீதி, ஆரையம்பதி. |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல. 50/2, பிரதான வீதி, கிண்ணியா. |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | பிரதான வீதி, 10 ஆம் பிரிவு, கொக்கட்டிச்சோலை |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | சந்தைக்கு எதிரே, பிரதான வீதி, வாழைச்சேனை |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | பிரதான வீதி கிரண். |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | திருகோணமலை வீதி கண்டலடி, வாகரை. |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல. 114, பிரதான வீதி, கந்தளாய். |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | பாடசாலைக்கு எதிரே, வைத்தியசாலை வீதி, களுவாஞ்சிக்குடி. |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | சந்தைத் தொகுதிக்கு எதிரே, பிரதான வீதி, செங்கலடி |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | பிரதான வீதி, அட்டாளைச்சேனை |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல. 151,153, புன்னக்குடா வீதி, ஏறாவூர் 3, ஏறாவூர். |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல. 69, பிரதான வீதி, அச்சுவேலி. |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல. 136, கண்டி வீதி, சாவகச்சேரி. |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல. 440, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல. 111, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல. 406, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல. 10, பருத்தித்துரை வீதி, நெல்லியடி. |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல. 187, பிரதான வீதி, மன்னார். |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல. 497, கண்டி வீதி, கிளிநொச்சி. |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல. 32B, 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா. |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | 1ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | P.W வீதி, முல்லைத்தீவு. |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல. 55, கே கே எஸ் வீதி, சுன்னாகம். |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல. 171, யாழ்ப்பாணம் வீதி, மானிப்பாய். |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல. 95, பலாலி வீதி, திருநெல்வேலி |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | பிரதான வீதி, மல்லாவி |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல. 266, தெல்லிப்பளை வீதி, வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டை |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல 3, 5 வல்லை வீதி சங்கானை. |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல 126, 128 பிரதான வீதி, பருத்தித்துறை. |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | இல 06, பருத்தித்துறை வீதி, கோப்பாய். |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | கண்டி வீதி, கொடிகாமம். |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | 575, K.K.S வீதி, தெல்லிப்பனை கிழக்கு, தெல்லிப்பளை |
| 10/17/24/28 | பிப்ரவரி 2023 | எண்.12, வார்டு எண்.06, பிரதான வீதி, பேசாலை, மன்னார் |

எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளிப் போடவோ எல்பீ ஃபினான்ஸ் பீஎல்சி நிறுவனத்துக்கு உரிமம் உள்ளது.

**LB FINANCE**
உதவி பொது முகாமையாளர் - தங்கக் கடன் பிரிவு
275Æ75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

# அறிவித்தல்

## வரையறுக்கப்பட்ட அலவ்வ பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் 2022.12.31 ஆம் திகதிக்கு தீர்க்கப்பட்ட வாக்குரிமை பெற்ற அங்கத்தவர் பெயர் பலகையை காட்சிக்கு வைத்தல்.

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் பதிவாளர் (வட மேல்) மூலம் வெளியிடப்பட்ட 2131/54 ஆம் இலக்கம் கொண்ட மற்றும் 2019 ஜூலை மாதம் 12 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் திருத்தப்பட்ட 1981/2 -2016 ஓகஸ்ட் மாதம் 22 இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவிக்கப்பட்ட வட மேல் மாகாண பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பிராந்திய செயற்குழு உறுப்பினர்களை தேர்வு செய்யும், கூட்டுறவு தேர்தல் கட்டளை தொடரின் 5:1 கட்டளைக்கு அமைய தயாரிக்கப்பட்டிருக்கும், சங்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் கூட்டுறவு பிராந்தியத்தைச் சேர்ந்தவர்களின் வாக்குரிமை பெற்ற அங்கத்தவர் பெயர் பட்டியல் 2023.01.11 ஆம் திகதி தொடக்கம் 2023.01.25 ஆம் திகதி வரையாக காலத்தில் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் மற்றும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் கடமை நேரங்களில் காட்சிக்கு வைக்கப்படும்.

| வரிசை இலக்கம் | பிராந்திய இலக்கம் | பிராந்தியத்தின் பெயர் | காட்சிப்படுத்தப்படும் இடங்கள் |
|---|---|---|---|
| 01 | 01 | அலவ்வ | அலவ்வ கோப்சிட்டி கடை |
| 02 | 02 | கல்பொத்தேபொல | கல்பொத்தேபொல, கூட்டுறவு இறுதிச் சடங்கு இல்லம் |
| 03 | 03 | குடுமுல்ல | குடுமுல்ல கோப் சிட்டி |
| 04 | 04 | பம்பதெனிய | பம்பதெனிய கூட்டுறவு கிராமிய வங்கி |
| 05 | 05 | வலகும்புர | வலகும்புர கோப் சிட்டி |
| 06 | 06 | மஹரச்சிமுல்ல | மஹரச்சிமுல்ல கூட்டுறவு கிராமிய வங்கி |
| 07 | 07 | ஹும்புலுவ | ஹும்புலுவ கோப்சிட்டி கடை |
| 08 | 08 | நுகவெல | பம்பதெனி கூட்டுறவு கிராமிய வங்கி |
| 09 | 09 | யட்டிகல்லொலுவ | யட்டிகல்லொலுவ கோப்சிட்டி |
| 10 | 10 | பொரமடல | பொரமடல கூட்டுறவு கிராமிய வங்கி |
| 11 | 11 | உடுமுல்ல | உடுமுல்ல கோப்சிட்டி கடை |
| 12 | 12 | வதால | உடுமுல்ல கோப்சிட்டி கடை |
| 13 | 13 | கெப்பிட்டிவலான | போயவலான கோப்சிட்டி கடை |
| 14 | 14 | போயவலான | போயவலான கோப்சிட்டி கடை |
| 15 | 15 | கல்தெனிய | கல்தெனிய கூட்டுறவு கிராமிய வங்கி |
| 16 | 16 | மடவளை | மடவளை கூட்டுறவு கோப்சிட்டி |
| 17 | 17 | கிரிவானபொல | மஹரச்சிமுல்ல கூட்டுறவு கிராமிய வங்கி |
| 18 | 18 | வில்கமுவ | வில்கமுவ கூட்டுறவு கோப்சிட்டி |
| 19 | 19 | நவதல்வத்த | நவதல்வத்த கோப்சிட்டி கடை |
| 20 | 20 | வென்னொருவ | வென்னொருவ கூட்டுறவு கிராமிய வங்கி |
| 21 | 21 | புச்சொமுவ | புச்சொமுவ கூட்டுறவு கோப்சிட்டி |
| 22 | 22 | அப்போவ | அப்போவ கூட்டுறவு கிராமிய வங்கி |
| 23 | 23 | தும்புல்ல | தும்புல்ல கூட்டுறவு கோப்சிட்டி |
| 24 | 24 | தமுனுபொல | உடுமுல்ல கோப்சிட்டி கடை |
| 25 | 25 | ஹப்புகஹகெதர | ஹப்புகஹகெதர மீளமைக்கப்பட்ட கோப்சிட்டி கடை |
| 26 | 26 | ஹொட்டிகெ | கல்தெனி கூட்டுறவு கிராமிய வங்கி |
| 27 | 27 | போவல | நவதல்வத்த கோப்சிட்டி கடை |
| 28 | 28 | கந்தெகெதர | கந்தெகெதர கூட்டுறவு கிராமிய வங்கி |
| 29 | 29 | நுன்கமுவ | உடுமுல்ல கோப்சிட்டி கடை |
| 30 | 30 | கல்கமுவ | கல்கமுவ கூட்டுறவு கிராமிய வங்கி |
| 31 | 31 | கங்கவத்த | கங்கவத்த மினி கோப்சிட்டி கடை |
| 32 | 32 | தெஹெல்கமுவ | உடுமுல்ல கோப்சிட்டி கடை |
| 33 | 33 | ஓதர கிருவன்பொல | மடவளை கூட்டுறவு கோப்சிட்டி |
| 34 | 35 | பாத்தயால | ஹும்புலுவ கோப்சிட்டி கடை |
| 35 | 36 | ஹெண்டுவாவத்த | ஹும்புலுவ கோப்சிட்டி கடை |

முக்கியமானது: இந்த வாக்குரிமை பெற்ற அங்கத்தவர் பெயர் பட்டியலுக்கு பெயர் உள்ளடக்கப்படாமல் இருக்கும் ஒருவருக்கு தமது பெயரை சேர்ப்பது தொடர்பில் மேன்முறையீடு ஒன்று அல்லது ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் அங்கத்தவர் பெயர் ஒன்று தொடர்பில் ஆட்சேபனை ஒன்று இருந்தால் அவைகள் 2023.01.11 ஆம் திகதி தொடக்கம் 2023.01.25 ஆம் திகதி வரையான காலத்தில் சங்கத்தின் செயலாளருக்கு எழுத்துமூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

க.கொ.:- இந்த வாக்குரிமை பெற்ற அங்கத்தவர் பெயர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருப்பது 2021.12.31ஆம் திகதிக்கு பங்குத் தொகையை பூர்த்தி செய்து ஓர் ஆண்டு பூர்த்தியான அங்கத்துவத்தை கொண்ட அங்கத்தவர்களின் பெயர்கள் மாத்திரம் என்பதோடு, 2021.12.31ஆம் திகதிக்கு பின் அங்கத்துவத்திற்கு உள்ளடக்கப்பட்ட அங்கத்தவர்களுக்கு சங்கத்தின் தேர்தலுக்காக கூட்டுறவு சட்டத்திற்கு அமைய வாக்குரிமை கிடைக்காது என்பதை கருத்தில் கொள்ளவும். (இது தொடர்பில் 2023.01.04 ஆம் திகதிய தினமின பத்திரிகையில் மற்றும் 2023.01.04ஆம் திகதி தினகரன் தமிழ் பத்திரிகையில் விளம்பரம் மூலமும் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.)

**இப்படிக்கு**
**ஆணைப்படி,**

**செயலாளர்,**
**எம்.எம்.டி.டி. குமார**
**வரையறுக்கப்பட்ட அலவ்வ பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், நாரம்மல வீதி, அலவ்வ.**
**037-2278131**
**2023.01.02**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

நிதி அமைச்சு

**இலங்கைச் சுங்கம்**

## Procurement of 500,000 Nos. of Bottled Shaped Security Seals

1. இலங்கை சுங்கத்திற்கான 500,000 எண்ணிக்கையான Bottled Shaped Security Seals ஐ கொள்வனவு செய்வதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கைச் சுங்கத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் விளக்கம் | 1.விலைமனு முகவரியிடப்பட வேண்டிய நபர் 2.விலைமனுப்பிணைத் தொகை (ரூபாவில்) 3.விலைமனு செல்லுபடியாகும் காலப்பகுதி | விலைமனுவை மூடுதல் | |
|---|---|---|---|---|
| | | | திகதி | நேரம் |
| Log/S/01/Bolt/ Seal – 2023 | Procurement of 500,000 Nos. of Bottled Shaped Security Seals | 1.சுங்க பணிப்பாளர் நாயகம். 2.500,000 ரூபா 3.2023.07.18 ஆம் திகதியன்று வரையும் | 2023.01.19 ஆம் திகதியன்று | பி.ப. 2 மணிக்கு |

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. 2023 சனவரி 19 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் அல்லது அதற்கு முன்னராக வேலை நாட்களில் இலங்கைச் சுங்கம், 2 ஆம் மாடி, பிரதான சிறாப்பரிடம் மீளளிக்கப்படாத கட்டணமாக 3,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
4. 2023 சனவரி 19 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கொழும்பு-11, பிரதான வீதி, 40 ஆம் இலக்கத்திலுள்ள ''சுங்க இல்லம்'', இலங்கைச் சுங்கத் திணைக்களம், 6 ஆம் மாடி, லொஜிஸ்டிக்ஸ் பணியகம், லொஜிஸ்டிக்கான சுங்கப் பணிப்பாளரிடம் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். மேலேயுள்ள அட்டவணையில் கூறப்பட்டுள்ளவாறான தொகைக்கு சுங்கப் பணிப்பாளருக்கு முகவரியிடப்பட்ட விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை இலங்கை சுங்கத்தின் லொஜிஸ்டிக்கான சுங்கப் பணிப்பாளரிடமிருந்து பெற்று 2023 சனவரி 18 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் லொஜிஸ்டிக்ஸ் பணியகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழுத் திணைக்களம்,**
**இலங்கைச் சுங்கம்.**
**தொலைபேசி: 011-2221680.**
**04.01.2023.**

# பகிரங்க ஏலவிற்பனை

ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ நிறுவனத்திற்குரிய அனைத்து தங்க கடன் சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட தங்க கடனுடன் தொடர்புடைய 2022/12/31 திகதிக்கு காலாவதியாகி இதுவரை மீட்கப்படாத அனைத்து தங்க நகைகளும் 2023/01/25 மற்றும் 2023/01/26 ஆகிய திகதிகளில் மு.ப. 10.00க்கு கீழுள்ள விலாசத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ,
(PB1079/PQ)
இல. 19, புகையிரத வீதி, நுகேகொடை.
தொலைபேசி: 0117 577 577

Orient Finance

## Purewin Auto Wheels (PVT) Ltd.

| Vehicle No.: | Model | Vehicle No.: | Model |
|---|---|---|---|
| BDV-5XXX | HERO DASH VX | BIO-5XXX | HONDA DIO SCV 110 |
| BGF-6XXX | SUZUKI GIXXER -SF-GSX 150 | BIZ-6XXX | HONDA GRAZIA APPS |
| 202—2XXX | BAJAJ AUTO | 201-8XXX | BAJAJ 2 STROKE |
| BEW-8XXX | HONDA DIO SCV 110 | BDO 7XXX | BAJAJ PLATINA |
| BEE-6XXX | BAJAJ DISCOVER 125 | BCO-5XXX | BAJAJ PLATINA |
| BGM-9XXX | HONDA ACTIVA 1 | BAC-7XXX | BAJAJ DISCOVER 125 |
| BBK-9XXX | HONDA DAWN | BBX-7XXX | TVS METRO |
| BIB-OXXX | BAJAJ CT 100 | WJ-6XXX | BAJAJ PULSAR 180 DTSI |

மேலே குறிப்பிட்டுள்ள வாகனங்களை கொள்வனவு செய்வதற்காக 070-3152016 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**பியோவின் ஓட்டோ வீல்ஸ், இல.: 19/ஏ, விஜய வீதி, கம்பஹா.**

சீதாவக்க பிரதேச சபை - ஹங்வெல்ல

## ஏலவிலைக்கோரல் அறிவித்தல்

2023.01.20 முதல் 2023.12.31 வரை பின்வரும் சபைக்கு உரித்தான ஆதனங்களை வருடாந்த குத்தகைக்கு விடுவதற்கு என்னால் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவங்களை வழங்கல் : 2023.01.17 அன்று பி.ப.3.00 வரை
கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் : 2023.01.18 அன்று பி.ப.3.00 வரை
கேள்விகளைத் திறத்தல் : 2023.01.18 அன்று கேள்விகள் மூடப்பட்டதும் உடனடியாக 2023.01.20 அன்று பி.ப.3.00 இற்கு முன்னர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

| தொடர் இலக்கம் | ஆதனங்களின் விபரம் |
|---|---|
| 1 | ஹங்வெல்ல இல.4 பன்றி இறைச்சிக் கடை |
| 2 | ஹங்வெல்ல இல.1, 2, மாட்டிறைச்சிக்கடைகள் |
| 3 | ஹங்வெல்ல இல.3 ஆடு, கோழி இறைச்சிக்கடை |
| 4 | பாதுக்க ஆடு, கோழி இறைச்சிக்கடை அமைவிடம் : பாதுக்க புதிய சந்தை மீன்கடை இல 4 மற்றும் 5 ஆகிய இடங்கள் |
| 5 | பாதுக்க விளையாட்டு மைதானத்தின் 06 தென்னைகளின் விளைச்சல் |
| 6 | பாதுக்க புதிய சந்தைகளின் மீன்கடை இல 01 |
| 7 | பாதுக்க மாட்டிறைச்சிக் கடை அமைவிடம் - பாதுக்க புதிய சந்தை மீன் கடை இல 2 மற்றும் 3 ஆகிய இடங்கள் |
| 8 | கொஸ்கம வாரச்சந்தை பன்றி இறைச்சிக்கடை (செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை) அமைவிடம் வாரச்சந்தை - மீன்கடை 42 என்ற இடம் |
| 9 | அருக்வத்தை பொது மயானத்தின் 5 தென்னைகள் மற்றும் 01 செவ்விளநீர் மரத்தின் விளைச்சல் |
| 10. | பாதுக்க பொது விளையாட்டு மைதானத்தின் 20'X12' விஸ்தீரணமுள்ள கடை அறையை குத்தகைக்கு விடுதல் |

2023.01.17 அன்று பி.ப.3.00 இற்கு முன்னர் பிரதான அலுவலகத்தில் நேரடியாகச் சமுகமளித்து, இதற்கான விண்ணப்பப்படிவங்களையும் விபரக் குறிப்புக்களையும் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களை 036-2255052 ஐ அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**ஜீ.ஜயந்த ரோஹண, தலைவர்,**
**சீதாவக்க பிரதேச சபை**
**2023.01.03 ஆம் திகதி,**
**சீதாவக்க பிரதேச சபை அலுவலகத்தில்**

## பெயர்மாற்றம்

கந்தப்பளை, எஸ்கடேல் தோட்டத்தை சேர்ந்த வேலு மும்மூர்த்தி (தே.அ.அ.இல-19640530433) மற்றும் எனது குடும்பத்தைச் சேர்ந்த துரைராஜ் பவானி (தே.அ.அ. இல: 716774449v) மற்றும் மும் மூர்த்தி நிஷாந்தன் (தே.அ. அ.இல: 911492512V) ஆகியோரும் புனித இஸ்லாம் மதத்தைத் தழுவி எமது பெயர்களை முறையே மொஹமட் முபாரக் மற்றும் பாத்திமா சுமையா மற்றும் மொஹமட் முஜீப் என மாற்றம் செய்துள்ளதாகவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் புதிய பெயர்களையே பாவிப்பதாகவும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகிறோம்.

**மொஹமட் முபாரக்**
**பாத்திமா சுமையா**
**மொஹமட் முஜீப்**

SUNDAY OBSERVER adZ
தினகரன் வாரமஞ்சரி

Promotional Rates for Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| රු. 500/- (Except Thinakaran Varamanjari) | රු. 700/- (Except Thinakaran Varamanjari) | රු. 950/- |

COLOMBO DISTRICT

AVISSAWELLA 036-2230446
Famous Bake House, No. 31, Seethawakapura

ANGODA 011 3069404
Kotikawatte Junction, Kudabuthgamuwa,

ATHURUGIRIYA 011 2760479, 011 4876968
267, Godagama Road,

BATHTHARAMULLA 011 2866705, 077 0736770
West Town, Bake House, Sweet House,

BORALESGAMUWA 071 6505533, 011 2519954
No. 17, Wewa Rd,

HANWELLA 011 4967962, 011 4967960
Sithumina Newspaper Agency, 144, High Level Rd, Pahathgama,

HOKANDARA 071 8685437
No. 501, North Hokandara,

HOMAGAMA 011 2892262, 077 7304046
"Aradanas", Senanayake Shopping Complex, Station Road,

KADUWELA 011 2579609
Nayana Bake House

KADUWELA 011 2412291, 011 4443566
375/1, Pahala Bomiriya, Yakkala,

KALUBOWILA 077 3551145, 011 2767259
No 195, Hospital Road,

KESBEWA 011 2703415
Seedevi Newspaper Office, 19, Horana Rd,

KIRULAPONE 071 5439396, 011 2514166
Ramani Book Shop, 27-A High Level Rd,

classified@lakehouse.lk
011 2 429 342 | 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to: classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service

**2011ஆம் ஆண்டு 40ஆம் இலக்கச் சட்டத்தின் திருத்தப்பட்ட 2006ஆம் ஆண்டு 5ஆம் இலக்கம் எனும் நிதி மோசடியைத் தவிர்க்கும் சட்டத்தின் 8(3) பிரிவின் பிரகாரம் விடுவிக்கப்பட்ட அறிவித்தலின் திருத்தம்**

2022.10.27ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம், எம்பிலிபிட்டிய உயர் நீதிமன்றம் SPL/01/2022 எனும் வழக்கிலக்கத்தின் கீழ் 03 மாத காலத்திற்கு செயற்பாடற்றதாக்கப்பட்ட PF 4717 எனும் இலக்க டொயோட்டா ஹைலக்ஸ் ஜீப் வண்டியின் இல. PF 4117 என பிரசுரிக்கப்பட்டுள்ளதால் PF 4717 என இத்தால் திருத்தப்பட்டுள்ளது.

**சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவு**

# இறுதி அறிவித்தல்

**சீதாவக்க பிரதேச சபையின் வைப்புத்தொகையை தீர்த்து வைத்தல்**

2019.12.31ம் திகதிக்கு முன் உங்களால் சீதாவக்க பிரதேச சபையின் ஹங்வெல்ல தலைமையகம், கொஸ்கம உப அலுவலகம், பாதுக்க உப அலுவலகம் மற்றும் ஹங்வெல்ல உப அலுவலகம் ஆகிய நிறுவனங்களின் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக மீளளிக்கப்படும் வைப்புத் தொகையை வைப்புச் செய்து இதுவரை உங்களால் அத்தொகை மீளப்பெறப்படாது இருப்பின் மேற்படி தொகையை வைப்புச் செய்த பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை 2023.01.23ம் திகதிக்கு முன் அலுவலக நேரங்களில் உங்களால் பணம் வைப்புச் செய்த அலுவலகத்திற்கு சமர்ப்பித்து குறித்த தொகையை மீளப்பெற்றுக்கொள்ளுமாறு இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

உங்களால் வைப்புச்செய்துள்ள சகல தொகைகளும் அத்தினத்திற்கு முன் மீளப்பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் தவறின் மீண்டும் எந்த அறிவித்தலும் இன்றி அத்தொகை சபையின் பொது நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டு, கணக்குகளை தீர்ப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்படும் என்பதை தயவுடன் அறிவிக்கிறேன்.

**ஜீ.ஜயந்த ரோஹன**
**தலைவர்,**
**சீத்தாவக்க பிரதேச சபை**
**ஹங்வெல்ல**
2023.01.02

Best way
to fulfil
your
Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

# பெறுகை அறிவித்தல்

**விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இடம்பெறும் தம்புள்ளை ஹோட்டல் பயிற்சிப் பாடசாலைக்காக 2023 பெப்ரவரி மாதம் 01ஆம் திகதி தொடக்கம் 2024 பெப்ரவரி மாதம் 31 ஆம் திகதி வரை சமைத்த உணவு வழங்குவதற்கான தேசிய போட்டிரீதியான விலைமனுக் கோரல் இலக்கம் - 01**

தேசிய இளைஞர் படையணியின் தம்புள்ளை ஹோட்டல் பயிற்சிப் பாடசாலைக்காக 2023.02.01 ஆம் திகதி தொடக்கம் 2024.01.31 ஆம் திகதி வரையான காலத்திற்கு சமைத்த உணவுகள் வழங்குவதற்கு தகுதியுடைய உணவு வழங்குநர்களிடம் இருந்து தேசிய போட்டிரீதியான விலைமனுக்களை கோரும் நடைமுறையை பின்பற்றி தேசிய இளைஞர் படையணி பெறுகைக் குழுவின் (சிரேஷ்ட) தலைவரினால் 2023.01.04 ஆம் திகதி தொடக்கம் 2023.01.25ஆம் திகதி வரை இத்தால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| வ/இ | நிலையம் | பயிற்சி பெறுவோர் எண்ணிக்கை | மாகாணம் | நிலைய அதிபரின் பெயர் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | தம்புள்ளை ஹோட்டல் பயிற்சிப் பாடசாலை | 275 | வட மேல் | லெப்டினன்ட் கர்ணல் ஏ.பீ. லியனகே | இனாமலுவ, தம்புள்ளை | 066-2286177 |

01. 2022.01.01 ஆம் திகதிக்குப் பின்னர் பெற்றுக்கொண்ட சமைத்த உணவுகளை வழங்கல் தொடர்பில் குறைந்தது ஓர் ஆண்டு அனுபவத்தை உறுதி செய்வது தொடர்பில் விலைமனுதாரர் மூலம் உண்மையான பிரதி என உறுதி செய்த ஆவணங்களின் நிழல் பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.

    விலைமனுக்களை சமர்ப்பிக்கும்போது சமைத்த உணவுகளின் வழங்கல் தொடர்பில் பதிவு செய்யப்பட்டிருப்பதை உறுதி செய்கின்ற கீழ் குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் 01ஐ விலைமனுதாரர் மூலம் உண்மைப் பிரதி என உறுதி செய்த பிரதி ஒன்றாக சமர்ப்பித்தல் வேண்டும்.

    i. பிரதேச செயலாளர் அலுவலகத்தின் மூலம் பெற்றுக்கொண்ட வர்த்தகப் பதிவு சான்றிதழ்
    அல்லது
    ii. நிறுவனப் பதிவாளர் அலுவலகத்தின் மூலம் பெற்றுக்கொண்ட கூட்டிணைக்கப்பட்ட சான்றிதழ் மற்றும் நிறுவனச் சட்டம் (Article Of Association)

02. தம்புள்ளை ஹோட்டல் பயிற்சிப் பாடசாலைக்காக சமைத்த உணவுகளை வழங்குவது தொடர்பில் ஒரு விலைமனு ஆவணத்திற்காக மீளளிக்கப்படாத 12,500.00 ரூபா விலைமனு கட்டணம் ஒன்றை தேசிய இளைஞர் படையணியின் கணக்குப் பிரிவின் சிறாப்பருக்கு செலுத்தப்பட்டு பற்றுச்சீட்டை பெறுகைப் பிரிவுக்கு சமர்ப்பித்து 2023.01.04ஆம் திகதி தொடக்கம் 2023.01.24ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை கடமை நாட்களில் விலைமனுக்களை பெற்றுக்கொள்ள முடியும்.
03. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023.01.25 ஆம் திகதி மு.ப. 11.00க்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு, தலைவர், திணைக்களப் பெறுகைக் குழு (சிரேஷ்ட), தேசிய இளைஞர் படையணி தலைமையகம், இலக்கம் 420, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு - 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது இளைஞர் படையணி தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு வேண்டும். விலைமனுக்களை திறப்பது 2023.01.25 ஆம் திகதி மு.ப. 11.00க்கு விலைமனுக்களை ஏற்பது முடிவுற்ற உடன் மேற்கொள்ளப்படும். அந்த சந்தர்ப்பத்திற்கு நீங்கள் அல்லது உங்களது அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும்.
04. 2023.01.25 ஆம் திகதி மு.ப. 11.00க்கு பின் கிடைக்கின்ற விலைமனுக்கள் அறிவுறுத்தல் இன்றி நிராகரிக்கப்படும்.
05. விலைமனுதாரர் மூலம் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்படும் வர்த்தக வங்கி ஒன்றின் மூலம் 660,000.00 ரூபா பெறுமதிக்கு பொருந்துவதாக, 2023.01.25ஆம் திகதி அல்லது அதற்கு முந்தைய திகதி ஒன்று தொடக்கம் 2023.05.22 ஆம் திகதி வரை செல்லுபடியான வகையில் தலைவர்/ பணிப்பாளர், தேசிய இளைஞர் படையணி, இல, 420, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு - 04 என்ற பெயரில் பெற்றுக்கொண்ட விலைமனு பிணை ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
06. இதற்கு முன்னதாக புரிந்துணர்வு பேச்சுவார்த்தை 2023.01.13 ஆம் திகதி தேசிய இளைஞர் படையணி தலைமையக கேட்போர்கூடத்தில் இடம்பெறும்.
07. விலைமனுக்களை 2023.01.04 ஆம் திகதி தொடக்கம் 2023.01.24ஆம் திகதி வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை இளைஞர் படையணி தலைமையக பெறுகைப் பிரிவில் இருந்து கட்டணம் இன்றி பரீட்சிக்க முடியும்.
08. இது தொடர்பில் மேலதிக விபரங்கள் தேவையெனில் சட்டத்தரணி ஆர். நிஷாந்த புஷ்பகுமார, மேலதிகச் செயலாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) தொ.பே. 011-2 690 294 மூலம் தேசிய இளைஞர் படையணி - பெறுகைப் பிரிவை அழைக்க முடியும்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு (சிரேஷ்ட),**
**தேசிய இளைஞர் படையணி தலைமையகம்,**
**இலக்கம் 420,**
**பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு 01**
**2023.01.04**

சுகாதாரம், போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

## அபேக்ஷா வைத்தியசாலை - மஹரகம

# பெறுகை அறிவித்தல்

01. எமது வைத்தியசாலைக்குத் தேவையான உருப்படிகளைக் கொள்வனவு செய்வதற்காக தகைமை வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| கேள்வி மாதிரிப் படிவ இலக்கம் | உருப்படியின் பெயர் | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|
| 01 | சிகிச்சை பொருள்களற்ற குப்பை கூழங்களை அப்புறப்படுத்துதல் B-21 | ரூபா 500.00 |
| 02 | ஆய்வுகூட உபகரணங்கள், நுகர்வு மற்றும் எதிர்வினைகள் A-28 | ரூபா 500.00 |
| 03 | பொலித்தீன் குப்பை உறைகள் வழங்குதல்<br>34x60x120 gauge - 130,000 Nos<br>30x30x120 gauge - 25,000 Nos | ரூபா 2,000.00 |

02. இலங்கை சந்தைக்காக மேற்குறிப்பிடப்பட்ட உருப்படிகளை வழங்கும் எந்தவொரு விலைமனுதாரர், பிரதிநிதியொருவர் அல்லது பெயரிடப்பட்டவர் மட்டும் மேற்படி கேள்விக்காக முன்வர தகைமை பெறுவர்.

**கேள்வி மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளும் வேளையில்**

I. மஹரகம அபேக்ஷா வைத்தியசாலை பணிப்பாளருக்கு அனுப்பும் வேண்டுகோள் கடிதம்
II. சகல கேள்வி மாதிரியின் பொருட்டும் மீளளிக்கப்படாத ரொக்கப் பணத்தை மஹரகம அபேக்ஷா வைத்தியசாலை கணக்காளருக்குச் செலுத்தப்பட வேண்டும். காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
III. வியாபாரப் பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்திய பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
IV. 2023-01-05ஆம் திகதி முதல் 2023-01-24ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் நிதிப் பிரிவிலிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**கேள்விப்படிவங்களைச் சமர்ப்பிக்கும் வேளையில்**

I. இலங்கையினுள் மேற்படி ஒப்பந்தம் வழங்கலுக்காக செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழின் பிரதியைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
II. 03ஆம் இலக்க கேள்விப் படிவத்திற்கு இயைபாக அனைத்துக் கேள்வியின் பொருட்டும் 2% வீதத்துக்கான கேள்விப் பிணை முறியைச் சமர்ப்பித்தல் வேண்டும். (கேள்விப் பிணைக்காக காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டது)
III. 03ஆம் இலக்க கேள்விப் படிவத்திற்கு இயைபாக கேள்விப் படிவங்களும் இரு பிரதிகளில் (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியாக) சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் கேள்வியைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இயைபுடைய உருப்படியின் பெயரை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
VI. 01ஆம் மற்றும் 02ஆம் இலக்க மாதிரிப் படிவத்திற்கு இயைபாக விண்ணப்பங்களை ஒப்படைக்கும் போது பதிவுக் கட்டணம் செலுத்தியமைக்காக அபேக்ஷா வைத்தியசாலையினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுடன் (மூலப்பிரதி) சமர்ப்பித்தல் வேண்டும்.
V. அனைத்துக் கேள்விகளும் வழங்கப்பட்டுள்ள கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள மாதிரியில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
VI. 2023-01-25ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழு தலைவருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். முழுமையற்ற மற்றும் தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
VII. கேள்விகள் திறக்கப்படும் வேளையில் விண்ணப்பதாரர் அல்லது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் மட்டும் கலந்துகொள்ளலாம்.

03. விலைகள் சகிதமான கேள்விப் படிவங்களை 2023-01-25ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு மஹரகம அபேக்ஷா வைத்தியசாலை பணிப்பாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். மேலதிக விபரங்களை மஹரகம அபேக்ஷா வைத்தியசாலை கணக்காளரிடம் பெற்றுக்கொள்ளலாம். பிராந்திய பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தொலைபேசி இல. : 0112839589/0112850252/0112850253**
**தொலைநகல் இல : 0112839589**

**தலைவர்,**
**பிராந்திய கேள்விச் சபை,**
**அபேக்ஷா வைத்தியசாலை,**
**மஹரகம.**

நீர் வழங்கல் அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

# விலைக்கோரல் அறிவித்தல் - 2023.01.04

பின்வரும் வேலைகள் / வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான விலை மனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| **சிவில் கேள்விகள்** | | | | | | | |
| 01 | அம்பகஸ்தோவ நீர் வழங்கல் திட்டத்தின் புனரமைப்பு வேலைகள் - வால்வு பிரதியீடு<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/REH/ AMBAGASDOOWA/2022/206** | 12,500/-+VAT<br>** | ரூபா 236,300/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5 முதல் C6 வரையான தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 15.75 மில்லியன் | பி.ஓ.நி. (ஊவா), கேள்விப் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 18/01/2023<br>பி.ப. 2.00 |
| வழங்கல் கேள்விகள் | | | | | | | |
| 02 | தேநீவவச தலைமை அலுவலகம் மற்றும் அலுவலகங்கள் மற்றும் தெலவல மற்றும் பொல்வத்தயில் உள்ள அலுவலகத்திற்கு இருபது Biometric Time Attendance இயந்திரங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல: **TNC/DGM/IT/2022/02R** | 4,000/-+VAT | ரூபா 45,000/- | இருபது Biometric Time Attendance இயந்திரங்களை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328 Fax: 011-2635885 | 25/01/2023<br>மு.ப. 10.00 |
| 03 | தலைமை அலுவலகத்திலுள்ள IT பிரிவிற்கு Video Conference Unit வழங்குதல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல: **TNC/DGM/IT/2022/04** | 2,000/-+VAT | ரூபா 30,000/- | ஆவணத்தின் பிரகாரம் Video Conference Unit வழங்குவதற்கான மற்றும் உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | - | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328 Fax: 011-2635885 | 26/01/2023<br>மு.ப. 10.00 |
| **சேவைக் கேள்விகள்** | | | | | | | |
| 04 | கல்லேல்ல, மன்னம்பிட்டிய, அரலகன்வில மற்றும் திம்புலாகல நீர் வழங்கல் திட்டங்களுக்கான அலுவலக வேலைகள், இயக்கம் மற்றும் பராமரிப்பு வேலைகளுக்கான சேவை ஒப்பந்தம்<br>ஒப்பந்த இல: **O&M(P)/NC/DGM/O&M-SER/ GLZ,MAN,ARA,DIM/2022/135R** | 12,500/-+ VAT<br>** | ரூபா 121,815/- | இயைபுடைய பிரதேசங்களிலுள்ள பிரதேச செயலகங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சமூக அடிப்படையிலான அமைப்புகள் (COB) அல்லது வியாபாரப் பதிவு மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | | பி.ஓ.நி (வடமத்தி), தேநீவவச, கொடகே மாவத்தை, அநுராதபுரம்.<br>Tele: 0252222296/ 0252235339<br>Fax:0252225609 | 18/01/2023<br>பி.ப. 2.00 |
| **வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்** | | | | | | | |
| 05 | தலைமை அலுவலக, உள்ளக கணக்காய்வு பிரிவிற்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **DGM/IA/Vehicle Hire/2021/01R** | 4,000/- + VAT | ரூபா 39,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328 Fax: 011-2635885 | |
| 06 | தலைமை அலுவலக, அபிவிருத்திப் பிரிவிற்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **DGM/DEV/ Hiring-V/O&M/2022/01** | 2,000/- + VAT | ரூபா 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328 Fax: 011-2635885 | |
| 07 | மத்திய தெற்கு பிரதேச அலுவலகம் மற்றும் நீர்ப் பாதுகாப்பு திட்டப் பிரிவிற்கு வேன்களை வாடகைக்கமர்த்துதல் (02 எண்ணிக்கையான வேன்களை வாடகைக்கமர்த்துதல்)<br>ஒப்பந்த இல: **RSC-C/M&E/HIRING/O&M/ CS/2022/195** | 6,000/- + VAT | ஒரு வாகனத்திற்கு ரூபா 20,000/- | வாகன உரிமையாளர் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் நிறுவனம் | | பி.ஓ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 26/01/2023<br>மு.ப. 10.00 |
| 08 | கம்பஹா பிராந்தியத்திற்கு 03 எண்ணிக்கையான வேன்கள் வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(W/N)/SS/HIRING/ GAM(O&M)/2022/95** | 2,000/-+ VAT | ஒரு வாகனத்திற்கு ரூபா 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele: 0112922129 Fax: 0112922146 | 25/01/2023<br>மு.ப. 10.00 |
| 09 | கம்பஹா பிராந்தியத்திற்கு 04 எண்ணிக்கையான வேன்கள் வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(W/N)/SS/HIRING/ GAM(O&M)/2022/96** | 2,000/- + VAT | ஒரு வாகனத்திற்கு ரூபா 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele: 0112922129 Fax: 0112922146 | 18/01/2023<br>மு.ப. 10.00 |
| 10 | இரத்தினபுரி நீர் வழங்கல் திட்டத்திற்கு க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(Sab)/RM(Rat)/ O&M/SER/RAT/2022/35** | 6,000/- + VAT | ரூபா 10,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பி.ஓ.நி. (சப்ரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி.<br>Tele: 045-2228274-6 Fax : 045-2228273 | 18/01/2023<br>பி.ப. 2.00 |
| 11 | கொடக்காவெல நீர் வழங்கல் திட்டத்திற்கு சிங்கள் கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல:**RSC(Sab)/RM (Rat)/ O&M/SER/GOD/2022/34** | 4,000/- + VAT | ரூபா 10,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பி.ஓ.நி. (சப்ரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி.<br>Tele: 045-2228274-6 Fax : 045-2228273 | 18/01/2023<br>பி.ப. 2.00 |

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். ("**" எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம்தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**

# அறிவித்தல்

வரையறுக்கப்பட்ட நாத்தாண்டிய புதிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 2022-12-31ஆம் திகதியில் உள்ளவாறான வாக்குரிமை அங்கத்தவர்களின் பெயர் பட்டியல் 2023-01-11ஆம் திகதி முதல் 2023-01-25ஆம் திகதி வரை

பின்வரும் இடங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அதில் உங்களது பெயர் உள்ளடக்கப்பட்டிருக்காவிட்டால் அல்லது ஏதாவது திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தால் அதுபற்றி

2023-01-25ஆம் திகதிக்கு முன் தலைமை அலுவலகத்திற்கு எழுத்து மூலம் தபாலில் அல்லது நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும். அன்றைய தினத்திற்குப் பின் எந்தவொரு முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

சங்கத்தின் முகவரி : செயலாளர்,
வரையறுக்கப்பட்ட நாத்தாண்டிய புதிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
www.membercoop.net / coopnaththandiya.php / www.nattmpcs.com

தொலைபேசி இல. : 032-2254236

| பிரதேச இலக்கம் | பிரதேசத்தின் பெயர் | காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள இடம் |
|---|---|---|
| 01 | நாத்தாண்டிய இல. 01 | உரக் களஞ்சியசாலையில் உள்ளது |
| 02 | நாத்தாண்டிய இல. 02 | உரக் களஞ்சியசாலையில் உள்ளது |
| 03 | நாத்தாண்டிய இல. 03 | உரக் களஞ்சியசாலையில் உள்ளது |
| 04 | பிலாகட்டுமுல்ல | தலைமை அலுவலகத்தில் செயலாளர் அறையில் உள்ளது |
| 05 | மானிங்கல | பிரதேசத்தில் உள்ளது |
| 06 | துன்கன்னாவ | மினி கோப்சிட்டியில் உள்ளது |
| 07 | நாரவில | தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 08 | யக்தெஸ்ஸாவ | தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 09 | மீகஹவெல | தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 10 | பஹல கொட்ராமுல்ல | மினி கோப்சிட்டியில் உள்ளது |
| 11 | தம்போவ | தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 12 | தம்மிககம | தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 13 | சோமவத்த | தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 14 | மாவில | தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 15 | லங்சிகம | கிராமிய வங்கியில் உள்ளது |
| 16 | இஹல கொட்ராமுல்ல | கிராமிய வங்கியில் உள்ளது |
| 17 | இஹல கட்டுநேரிய | தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 18 | கொஸ்வத்த | மினி கோப்சிட்டியில் உள்ளது |
| 19 | மொரகெலே | தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 20 | பலுவெல்கால | மினி கோப்சிட்டியில் உள்ளது |
| 21 | முதுகட்டுவ | தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 22 | மெத கட்டுநேரிய | தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 23 | பஹல கட்டுநேரிய | தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 24 | கச்சிராவ | தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 29 | தெமட்டபிட்டிய | கிராமிய வங்கியின் உள்ளது (தெமட்டபிட்டிய) |
| 30 | ஹெவன வகுகஹமுல்ல | தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 31 | மெதகொட | தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 32 | மட்டகொட்டுவ | தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 33 | குடாமடுவ | பிரதேசத்தில் உள்ளது |
| 34 | தொடுவாவ | கிராமிய வங்கியில் உள்ளது |
| 35 | கொஸ்வாடிய | தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 36 | முட்டிபெந்திவெல | தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 37 | மஹவெவ | கோப்சிட்டியில் உள்ளது |
| 38 | தல்வில | மினி கோப்சிட்டியில் உள்ளது |
| 39 | ஹால்பன்வில | தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 40 | பிரனாந்து வீதி 01 | தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 42 | குடாவெவ | பிரதேசத்தில் உள்ளது |
| 43 | மாரவில தேவாலய வீதி | தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 44 | மாவிர நவீனமயப்படுத்துதல் | மினி கோப்சிட்டியில் உள்ளது |
| 45 | வலஹபிட்டிய | மினி கோப்சிட்டியில் உள்ளது |
| 46 | பருதெல்பொல | தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 47 | மரந்த | தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 50 | கல் அமுன | தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 51 | சாகரகம | தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 52 | மோதரவெல்ல | தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 53 | இரணவில | மினி கோப்சிட்டியில் உள்ளது |
| 54 | கடோல்கொடவத்த | தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 55 | இத்தமல்கம | பிரதேசத்தில் உள்ளது |
| 56 | பனங்கொட | தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 57 | பஹல வலஹாபிட்டிய | கோப்சிட்டியில் உள்ளது |

**செயலாளர், வ/ப நாத்தாண்டிய புதிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## 2023/2024ஆம் ஆண்டுகளுக்காக கொழும்பு மற்றும் அவிசாவளை நிறைவேற்று பொறியியலாளரின் பிரிவுகளுக்காக வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல்

01. 2023/2024 ஆம் ஆண்டுகளுக்காக கொழும்பு மற்றும் அவிசாவளை நிறைவேற்று பொறியியலாளரின் பிரிவுகளுக்காக வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்காக சேவை தகுதியுள்ள வழங்குநர்களிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாக, கொழும்பு, வீதி அபிவிருத்தி சபையின் பிரதான பொறியியலாளரின் அலுவலக பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
    தேவைப்பாடு மற்றும் விபரக்குறிப்புக்களின் விபரமான விளக்கமானது விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன.

| தொ. இல. | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தப் பெயர் | எண்ணிக்கை | விலைமனுப் பிணை (ரூபாவில்) | கேள்விக் கட்டணம் (ரூபாவில்) |
|---|---|---|---|---|---|
| 01. | RDA/CE/COL/BID/2023/01 | Hiring of Tipper 1.25 cube (5 ton) – Colombo Division, Nawala & Navinna Depot | 01 | 5,000.00 | 1,080.00 |
| 02. | RDA/CE/COL/BID/2023/02 | Hiring of Tipper 1.25 cube (5 ton) – Colombo Division, Orugodawatta Depot | 01 | 5,000.00 | 1,080.00 |
| 03. | RDA/CE/COL/BID/2023/03 | Hiring of Tipper 1.25 cube (5 ton) – Colombo Division, Kesbaewa & Homagama Depot | 01 | 5,000.00 | 1,080.00 |
| 04. | RDA/CE/COL/BID/2023/04 | Hiring of Tipper 1.25 cube (5 ton) – Colombo Division, Galagedara & Kaluaggala Depot | 01 | 5,000.00 | 1,080.00 |

02. விலைமனுக்கோரலானது இலங்கை அரசாங்க பெறுகை வழிகாட்டிகளினால் நிர்வகிக்கப்படுவதுடன் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையைப் பாவித்து நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணங்களில் வழங்கப்பட்டுள்ள தகுதித்தன்மை மற்றும் தகைமைத் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்யும் அனைத்து தகுதியுள்ள விலைமனுதாரர்களும் பங்கு பெறலாம்.
03. 2023.01.05 ஆம் திகதியிலிருந்து 2023.01.18 ஆம் திகதியன்று வரையும் அனைத்து வேலை நாட்களிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் ஓராயிரத்து எண்பது ரூபாவை (1,080 ரூபா) இலங்கை பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், பத்தரமுல்ல, உடுமுல்ல வீதி, 36 ஆம் இலக்கத்திலுள்ள பிரதான பொறியியலாளரின் அலுவலகத்திலிருந்து (கொழும்பு) சிங்கள மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை பெற்றுக் கொள்ளலாம்.
04. 2023.01.19 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் ''தலைவர், பெறுகைக் குழு,பிரதான பொறியியலாளரின் அலுவலகம், வீதி அபிவிருத்தி சபை, இல. 36, உடுமுல்ல வீதி, பத்தரமுல்ல'' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கொழும்பு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, பிரதான பொறியியலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
05. 2023.01.19 ஆம் திகதியன்று பி.ப. 2.15 மணிக்கு மேலேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
06. எந்தவொரு மேலதிக விபரங்களையும் கொழும்பு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி: 011-2879113-15. தொலைநகல்: 011-2879116.

**பிரதான பொறியியலாளர் - கொழும்பு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை.**

NSB

# தேசிய சேமிப்பு வங்கி

## மீட்கப்படாத அடகுப்பொருள் ஏலவிற்பனை : 2023 - ஜனவரி.

தேசிய சேமிப்பு வங்கியில் பின்வரும் கிளைகளில் 2021 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை (அத்தினம் அடங்கலாக) அடகு வைக்கப்பட்டு ஆனால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தினங்களுக்கு முன் மீட்கப்படாத மற்றும் அடகினைப் புதுப்பித்துக் கொள்ளப்படாத தங்க ஆபரணங்களை பின்வரும் தினங்களில் குறித்த ஏலவிற்பனை நிலையங்களில் காலை 09.00 மணி முதல் ஏலத்தில் விடப்படும்.

| மீட்டிக்கொள்ளக்கூடிய இறுதித் தினம் 2023.01.19 - ஏலவிற்பனை நடைபெறும் திகதி 2023.01.21 | | |
|---|---|---|
| இல. | ஏலவிற்பனை நடைபெறும் இடம் | ஆபரணங்களை ஏலத்தில் விடும் கிளைகள் |
| 01 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 30, பார்க் வீதி, பண்டாரவளை | பண்டாரவளை, வெல்லவாய |
| 02 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 88, கொடுக்கொடல்லை வீதி, கண்டி | கண்டி, முள்கம்பளை, கண்டி அஞ்சல் கிளை, கண்டி II ம் கிளை, கண்டி சிட்டி சென்டர், நிகில்லகஸ்கட |
| 03 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 32, அம்பகமுவ வீதி, நாவலப்பிட்டி | நாவலப்பிட்டி, கினிகத்ஹேன |
| 04 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 11, லோவர் கிங் வீதி, பதுளை | பதுளை, ஹாலிஎல, பஸ்ஸர, வெலிமட |
| 05 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 26, அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை | மாத்தறை, கெகனதுரை, வெலிகம, மாத்தறை II ம் கிளை, திக்வெல்ல, தெவிநுவர |
| 06 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 52, ஹொரன வீதி, பாணந்துறை | பாணந்துறை, வாத்துவ, பண்டாரகம, களுத்துறை, அழுத்கம, பேருவளை, மதுகம, களுத்துறை II ம் கிளை, ஹொரன, இங்கிரிய, கிரிஎல்ல |
| 07 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 130, மல்வத்த வீதி, கொழும்பு - 11 | புறக்கோட்டை கிளை, மாளிகாவத்த, கொட்டாஞ்சேனை, முகத்துவாரம், நகர கிளை, உலக வர்த்தக மைய கிளை, சிட்டி பிளஸ், நாரஹேன்பிட்டி, ராஜகிரிய, வெல்லம்பிட்டிய, முல்லேரியா, பொரள்ள |
| 08 | தேசிய சேமிப்பு வங்கி, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, இரத்தினபுரி | இரத்தினபுரி, குருவிட்ட, நிவித்திகலை |
| 09 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 88/88A, கினிகத்ஹேன வீதி, யட்டியாந்தோட்டை | யட்டியாந்தோட்டை, புளத்கொஹுபிட்டிய, தெரணியகல |
| 10 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 98, கம்பஹா வீதி, கிரிந்திவெல | கிரிந்திவெல, பூகொட, வெலிவேரிய |
| 11 | தேசிய சேமிப்பு வங்கி, அமரதுங்க கட்டிடம், டி. எஸ். சேனநாயக்க வீதி, அம்பாறை | அம்பாறை, அக்கரைப்பற்று, பொத்துவில், சம்மாந்துறை, தம்பிலுவில், அம்பாறை II ம் கிளை, உஹன |
| 12 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 139, வெல்லவாய வீதி, மொனராகல | மொனராகல, பிபிலை, புத்தள, சியம்பலாண்டுவ, படல்கும்புர |
| 13 | தேசிய சேமிப்பு வங்கி, புகையிரத நிலையம் முன், A9 வீதி, கொடிகாமம் | கொடிகாமம், சாவகச்சேரி, கிளிநொச்சி |
| 14 | தேசிய சேமிப்பு வங்கி, P W D வீதி, முல்லைத்தீவு | முல்லைத்தீவு, மல்லாவி |
| 15 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 15, கொழும்பு வீதி, வென்னப்புவ | வென்னப்புவ, மாரவில, தன்கொட்டுவ நாத்தாண்டிய |
| 16 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 21, மரதன்கடவெல வீதி, கெக்கிராவ | கெக்கிராவ, கலென்பிதுனுவெவ, கல்னேவ |

| மீட்டிக்கொள்ளக்கூடிய இறுதித் தினம் 2023.01.19 - ஏலவிற்பனை நடைபெறும் திகதி 2023.01.22 | | |
|---|---|---|
| இல. | ஏலவிற்பனை நடைபெறும் இடம் | ஆபரணங்களை ஏலத்தில் விடும் கிளைகள் |
| 01 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 445, மாத்தளை வீதி (அநுராதபுர வீதி), தம்புள்ள | தம்புள்ள, நாஉல, கலேவெல |
| 02 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 341, கொழும்பு வீதி, பேராதெனிய | பேராதெனிய, பிலிமதலாவ, தெல்தோட்ட |
| 03 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 24, பார்க் வீதி, நுவரெலியா | நுவரெலியா, றாகல |
| 04 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 96, D C வணிகசேகர மாவத்தை, அகுரஸ்ஸ | அகுரஸ்ஸ, மொரவக்க, கம்புருபிட்டிய, தெனியாய, நெலுவ |
| 05 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 379, கண்டி வீதி, கேகாலை | கேகாலை, வறக்காப்பொல, றம்புக்கன, கேகாலை II ம் கிளை |
| 06 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 75, கண்டி வீதி, மாவனல்ல | மாவனல்ல, அரநாயக்க |
| 07 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 93, இரத்தினபுர வீதி, பதுரலிய | பதுரலிய, புலத்சின்ஹல, கலவான |
| 08 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 342, டி சொய்ஸா வீதி, மொரட்டுமுல்ல | மொரட்டுமுல்ல, மொரட்டுவ, கட்டுபெத்த, புவக்கரம்ப, பிலியந்தல, பிலியந்தல II ம் கிளை, கஹத்துடுவ |
| 09 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 430/10, இஹல கரகஹமுன, கண்டி வீதி, கடவத்த | கடவத்த, கிரிபத்கொட, களனி, றாகம, கனேமுல்ல, மாகொல, கடுவெல, தெல்கொட |
| 10 | தேசிய சேமிப்பு வங்கி, புதிய கடைத்தொகுதி, நிட்டம்புவ | நிட்டம்புவ, வெயான்கொட, மீரிகம |
| 11 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 116, 116A, பஸார் வீதி, மட்டக்களப்பு | மட்டக்களப்பு, ஆரயம்பதி, செங்கலடி, வாழைச்சேனை |
| 12 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 292, மட்டக்களப்பு வீதி, பலகை மோல் சந்தி, கதுருவெல | கதுருவெல, ஹிங்குராங்கொட, மெதிரிகிரிய |
| 13 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 136, K K S வீதி, சுன்னாகம் | சுன்னாகம், காரைநகர், சங்கானை, மானிப்பாய் |
| 14 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 11, இன்னர் சேர்குளர் வீதி, வவுனியா | வவுனியா |
| 15 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 14, கண்டி வீதி, குருநாகல் | குருநாகல், மெல்சிரிபுர, ரிதிகம, மாவத்தகம, இப்பாகமுவ, குருநாகல் II ம் கிளை |
| 16 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 591/1, புதிய நகரம், அநுராதபுரம் | அநுராதபுரம், நொச்சியாகம, அநுராதபுரம் II ம் கிளை, எப்பாவல |

| மீட்டிக்கொள்ளக்கூடிய இறுதித் தினம் 2023.01.26 - ஏலவிற்பனை நடைபெறும் திகதி 2023.01.28 | | |
|---|---|---|
| இல. | ஏலவிற்பனை நடைபெறும் இடம் | ஆபரணங்களை ஏலத்தில் விடும் கிளைகள் |
| 01 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 3/5, T B பானபொக்க வீதி, கம்பளை | கம்பளை, கெலிஓயா, புஸ்ஸல்லாவ |
| 02 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 30, கலகெதர வீதி, கடுகஸ்தோட்ட | கடுகஸ்தோட்ட, அலவத்துகொட, கலகெதர |
| 03 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 114, நுவரெலியா வீதி, தலவாக்கலை | தலவாக்கலை, பூண்டுலோயா, ஹட்டன் |
| 04 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 20, கொழும்பு வீதி, கலுவெல்ல வீதி, காலி | காலி, காலி II ம் கிளை, உடுகம, பத்தேகம, கராப்பிட்டிய, ஹிக்கடுவ, ஹபராதுவ, இமதுவ, யக்கலமுல்ல |
| 05 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 4, வந்துரப்ப வீதி, அம்பலாந்தோட்ட | அம்பலாந்தோட்ட, அங்குணகொலபெலஸ்ஸ, சூரியவெவ, ஹம்பாந்தோட்ட, திஸ்ஸமஹாராம, கதிர்காமம் |
| 06 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 318, காலி வீதி, கல்கிஸ்ஸ | களுபோவில, தெல்கந்த, பொரலஸ்கமுவ, நுகேகொட, பிட்டக்கோட்ட, நாவல, கிருலப்பென, |
| 07 | தேசிய சேமிப்பு வங்கி, புதிய நகரம் எம்பிலிபிட்டிய | எம்பிலிபிட்டிய, கொடக்கவெல |
| 08 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 12, கொழும்பு வீதி, கம்பஹா | கம்பஹா, யக்கல, கம்பஹா II ம் கிளை, மினுவான்கொட, திவுலபிட்டிய |
| 09 | தேசிய சேமிப்பு வங்கி, வைத்தியசாலை வீதி, களுவாஞ்சிகுடி | களுவாஞ்சிகுடி, கல்முனை, பெரியகல்லாறு, பலுகாமம் |
| 10 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 52/1, மருதம் கட்டிடம், கொடிக்காமம் வீதி, நெல்லியடி | நெல்லியடி, அச்சுவேலி, பருத்தித்துறை |
| 11 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 16, வாழ்வுதயம் கொம்பிளக்ஸ், தலைமன்னார் வீதி, மன்னார் | மன்னார், வன்காலை |
| 12 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 161, பிரதான வீதி, குளியாப்பிட்டி | குளியாப்பிட்டி, நாரம்மல, ஹெட்டிப்பொல, பன்னல |
| 13 | தேசிய சேமிப்பு வங்கி, குருநாகல் வீதி, சிலாபம் | சிலாபம், மாதம்ப, பிங்கிரிய |
| 14 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 66, பிரதான வீதி, அலவ்வ | அலவ்வ, பொல்கஹவெல, கிரியுல்ல |

| மீட்டிக்கொள்ளக்கூடிய இறுதித் தினம் 2023.01.26 - ஏலவிற்பனை நடைபெறும் திகதி 2023.01.29 | | |
|---|---|---|
| இல. | ஏலவிற்பனை நடைபெறும் இடம் | ஆபரணங்களை ஏலத்தில் விடும் கிளைகள் |
| 01 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 39, 40, புதிய நகரம், கண்டி வீதி, மஹியங்கன | மஹியங்கன |
| 02 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 20, புதிய நகரம், திகன, ரஜவெல்ல | திகன, வத்தேகம |
| 03 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 147, திருகோணமலை வீதி, மாத்தளை | மாத்தளை |
| 04 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 341, காலி வீதி, அம்பலாங்கொடை | அம்பலாங்கொடை, உரகஸ்மன்ஹந்திய, பிட்டிகல, எல்பிட்டிய |
| 05 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 55, பெலியத்த வீதி, ஹக்மன | ஹக்மன, பெலியத்த, தங்கல்ல, வலஸ்முல்ல, வீரக்கெட்டிய, மித்தெனிய, ஊருபொக்க, தெய்யந்தர, கட்டுவன |
| 06 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 75, ஹைலெவல் வீதி, ஹோமாகம | ஹோமாகம, மீகொடை, கொட்டாவ மஹரகம, பத்தரமுல்ல, அத்துருகிரிய, தலவத்துக்கொட, மாலபே, ஹன்வெல்ல |
| 07 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 318, காலி வீதி, கல்கிஸ்ஸ | கல்கிஸ்ஸ, தெகிவளை, கொள்ளுப்பிட்டி II ம் கிளை, பம்பலப்பிட்டி, வெள்ளவத்த, தலைமை அலுவலகக் கிளை |
| 08 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 57/1, யட்டியாந்தோட்ட வீதி, அவிசாவெல | அவிசாவளை, ருவன்வெல, எஹெலியகொட |
| 09 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 71/A, பான்ஸ் ரத்வத்த மாவத்தை, பலாங்கொட | பலாங்கொட, கஹவத்தை, பெல்மடுல்ல |
| 10 | தேசிய சேமிப்பு வங்கி, அவரிவத்த, கட்டுநாயக்க (பஸ் நிலையம் முன்பாக) | கட்டுநாயக்க, ரத்தொலுகம, நீர்கொழும்பு, கொச்சிக்கடை |
| 11 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 257, நீர்கொழும்பு வீதி, வத்தளை | வத்தளை, பேலியகொட, மஹபாகே, ஜாஎல, கந்தானை |
| 12 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 5, பிரதான வீதி, திருகோணமலை | திருகோணமலை, கந்தளாய் |
| 13 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 496, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் II ம் கிளை, ஊர்காவற்துறை (கய்ட்ஸ்), திருநெல்வேலி, கோப்பாய் |
| 14 | தேசிய சேமிப்பு வங்கி, அநுராதபுர வீதி, கஹடகஸ்திகிலிய | கஹடகஸ்திகிலிய, கெபித்திக்கொல்லாவ, ஹொரவப்பொத்தான, மதவாச்சி |
| 15 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 07, பிரதான வீதி, கல்கமுவ | கல்கமுவ, மாஹோ, தம்புத்தேகம |
| 16 | தேசிய சேமிப்பு வங்கி, இல. 1/10, பழைய வைத்தியசாலை வீதி, நிக்கவெரட்டிய | நிக்கவெரட்டிய, புத்தளம், ஆணமடுவ, வாரியப்பொல |

**எவ்வித முன்னறிவித்தலுமின்றி அடகு ஏலவிற்பனையை இரத்துச் செய்வதற்கோ, கூட்டிணைப்பதற்கோ அல்லது பிற்போடுவதற்கோ வங்கிக்கு சகல உரித்துமுண்டு.**

**ஒப்பமிட்டவர்/பிரதிப் பொது முகாமையாளர்**
**(செயற்பாடுகள்)**

**தேசிய சேமிப்பு வங்கி**
**தலைமை அலுவலகம், கொழும்பு- 03.**
**தொலைபேசி : 2573008-11, நீடிப்பு இல. 441, 244, பெக்ஸ் : 2574018**

# திஹாரிய "FINE" நிறுவன ஊழியர்களின் ஒன்றுகூடலும் கௌரவிப்பு நிகழ்வும்




இலங்கையில் தொழிற்சாலை உபகரணங்களை இறக்குமதி செய்து விநியோகிக்கும் முன்னணி நிறுவனமான திஹாரிய 'Fine' நிறுவனத்தினால் புதுவருடத்தை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ள 'நிறுவனத்தின் உபகரணத்தொகுதிகள் (Catalogue) உள்ளடங்கிய கைநூல்' வெளியீட்டு விழாவும் நிறுவனத்தில் சேவையாற்றும் ஊழியர்களை கௌரவிக்கு முகமாக புதுவருட ஒன்று கூடலும் வருடாந்த ஊழியர் கௌரவிப்பும் நேற்று முன்தினம் (02) திஹாரிய ஸனாயா வரவேற்பு மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் அல்ஹாஜ் எம்.ஏ.எம். இக்ராம் மற்றும் நிறுவன பணிப்பாளர் ஜனாபா ஸப்ரா இக்ராம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நிறுவனத்தில் சேவையாற்றும் ஊழியர்கள் உட்பட அவர்களின் குடும்பத்தினரும் கலந்து கொண்டனர். இதன்போது ஊழியர்களும் அவர்களது குடும்பத்தினரும் முகாமைத்துவ பணிப்பாளரினால் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

# மாற்றுப் பயிர் உற்பத்தியில் காஷ்மீர் விவசாயிகள்

அப்பிள் செய்கையில் பெருமளவு ஆர்வம் காட்டி வந்த காஷ்மீர் விவசாயிகள் தற்போது மாற்று பணப் பயிர்களில் கவனம் செலுத்தி வருவதாகவும் இது அதிக வருமானத்தை பெற்றுத் தருவதாகவும் காஷ்மீருக்கான விவசாய பணிப்பாளர் கொத்ரி இக்பால் தெரிவித்துள்ளார்.

நெல் மற்றும் சோள சாகுபடி செய்ய முடியாததால் கைவிடப்பட்டிருந்த காணிகளில் தாமரைக் கிழங்கு மற்றும் கிவி பழச் சாகுபடியில் இரண்டு விவசாயிகள் ஈடுபட்டு வெற்றியடைந்திருப்பதாக இவர் குறிப்பிட்டுள்ளார். அப்பிள் மற்றும் நெல் விளைச்சலுக்கு பெருமளவு பசளை மற்றும் கிருமி நாசினிகள் அவசியம் என்றும் மாற்று வேளாண்மைக்கு பெருமளவில் இவை பயன்படுத்தப்படுவதில்லை என்றும் இவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு கிலோ தாமரை கிழங்கு 150 ரூபாவுக்கு விற்பனையானதாகவும் அரிசி மற்றும் சோளத்துக்கு இந்த விலை கிடைக்காது என்றும் 74 வயதான அப்துல் வானி குறிப்பிடுகிறார். காஷ்மீரின் புகழ் பெற்ற டால் ஏரியின் ஒரு பகுதியிலேயே தாமரைக் கிழங்கு இவ்வளவு காலமாக உற்பத்தி செய்யப்பட்டு வந்தது.

வழமையான விவசாய உற்பத்திகளுக்கு மாற்றாக புதிய பயிர்களும் உத்திகளும் விவசாய திணைக்களத்தால் அறிமுகம் செய்யப்பட்டு வருவது விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்திருக்கிறது.

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம்

(கல்வி அமைச்சு – திறன் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவு)

## வழங்குநர்களை பதிவு செய்தல்

2023 ஆம் ஆண்டுக்கு எமது நிறுவனத்தில் கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு வழங்குநர்களை பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.


| வழங்கும் உருப்படி இலக்கம் | உருப்படியின் பெயர் |
|---|---|
| 01 | அனைத்து வாகன உதிரிப் பாகங்களை வழங்கல், (பெட்டரி, வாகன மின்சாரம், உராய்வுநீக்குமெண்ணெய் மற்றும் ஏனைய உதிரிப்பாகங்கள்) இயந்திர உதிரிப்பாகங்கள் வழங்கல். |
| 02 | இயந்திரம், பயிற்சி உபகரணம் மற்றும் பயிற்சிப் பொருட்கள் வழங்கல். |
| 03 | மின் உபகரண பொருட்கள் வழங்கல். |
| 04 | தொலைபேசி மற்றும் இன்டர்கொம் கட்டமைப்பு. |
| 05 | பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கல் மற்றும் பராமரிப்பு. |
| 06 | கணினி மற்றும் ஏனைய அது சார்ந்த உபகரணங்களை வழங்கல். |
| 07 | அனைத்து அலுவலக மற்றும் பொது எழுது பொருட்களை வழங்கல். |
| 08 | புதிய டயர்கள், டியுப்கள் மற்றும் பட்டி வழங்கல். |
| 09 | டயர் மீள் நிரப்பல். |
| 10 | அச்சு செயற்பாடுகள். |
| 11 | சீருடை, விளையாட்டு உடை மற்றும் திரைச்சீலை, பாதணிகள் வழங்கல், விளையாட்டுப் பொருட்களை வழங்கல். |
| 12 | பெயர் பலகை வரைதல் மற்றும் பிளாஸ்டிக் பெயர் தயாரித்தல். |
| 13 | கட்டிடப் பொருட்களை வழங்கல். (இரும்பு மற்றும் ஏனைய பொருட்கள்) |
| 14 | கட்டிட சீரமைப்பு, புனரமைப்பு செயற்பாடு மற்றும் உள்ளக சீரமைப்பு, அலுமினிய வேலை. |
| 15 | நூலக புத்தகம் வழங்கல். |
| 16 | தொழில்துறை வாயுக்கள் (ஒட்சிசன், அசிடிலீன், ஆர்கன், காபனீரொட்சைட்டு) வழங்கல். |
| 17 | வாகன வண்ணப்பூச்சு மற்றும் மற்றைய வண்ணப்பூச்சு வகைகளை வழங்கல். |
| 18 | குளிர்சாதனப் பெட்டி மற்றும் வளிச்சீராக்கி உதிரிப்பாகங்கள் மற்றும் உபகரணங்களை வழங்கல். |
| 19 | பற்றாசு குச்சி மற்றும் பிளக்ஸ் வகைகள் வழங்கல். |
| 20 | அலுவலக மரச் சாமான் உபகரணங்கள், வகுப்பறை உபகரணங்கள் வழங்கல் |
| 21 | அலுவலக உபகரணங்கள் திருத்த வேலை. |
| 22 | கிருமிநாசினி திரவங்கள், கையுறை வழங்கல். |
| 23 | சுத்தம் செய்தல் மற்றும் துப்புரவேற்பாட்டு செயற்பாடுகள். |
| 24 | தீயணைப்பு உபகரணங்கள் மற்றும் பராமரிப்பு செயற்பாடு. |

பதிவு செய்வதற்கு இந்த அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொண்ட குறித்த படிவங்கள் மூலம் மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டும் என்பதோடு குறித்த படிவத்தை ரூபா 1000.00 தொகையை செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். பணம் செலுத்திய பின் கிடைக்கின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். ஒரு விண்ணப்பப் படிவத்தை பயன்படுத்த முடிவது ஒரு உருப்படிக்கு மாத்திரமாகும்.
விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி 2023 ஜனவரி 26 அன்று என்பதோடு பி.ப. 2.00க்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்புவதற்கு அல்லது எமது நிறுவனத்தில் கணக்குப் பிரிவில் விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வழங்குநர்களை பதிவு செய்தல் - 2023'' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

**பணிப்பாளர்/ அதிபர்**
**இ.ஜே.தொ.ப.நி.**
**இல. 582, காலி வீதி**
**கல்கிசை**

**தொலைபேசி:- 0112605625/ 0112605535**

# சென்னையில் "உமர் ரலி புராணம்" நூல் வெளியீடு



ஈழம் தந்த தீந்தமிழ்ப் புலவரும், முத்தமிழ் அறிஞரும், சூஃபி ஞானியுமாகிய அல் ஆரிஃபு பில்லாஹ் இமாம் ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் கலீல் அவ்ன் அல் ஹாஷிமிய் மௌலானா (ஜே. எஸ்.கே,ஏ,ஏ,எச். மௌலானா) எழுதிய "உமர் ரலி புராணம்" நூலின் வெளியீட்டு விழா நாளை (05) வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு சென்னை, எழும்பூர், இலக்கம் 2ஏ, பொன்னியம்மன் கோயில் வீதியில் உள்ள ரமதா ஹோட்டலில் இடம்பெறும்.

ஏகத்துவ மெய்ஞ்ஞானத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில், பெரும்கவிக்கோ,கலைமாமணி, முனைவர் வ.மு. சேதுராமன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவிற்கு, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் முனீருல்

மில்லத் பேராசிரியர் காதர் முஹியத்தீன், சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் கே.எஸ். மஸ்தான், தமிழ்நாடு படத்திட்ட கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, முனைவர் அஃப்ளளுல் உலமா ஷெய்கு அப்துல்லாஹ் ஜமாலி உள்ளிட்ட பலர் கலந்து கொள்ள உள்ளனர்.

*(எம்.எஸ்.எம்.ஸாகிர்)*

## ஏலவிலை கூறலுக்கான அறிவித்தல்

01. திஸ்ஸமஹாராம பிரதேச சபை பஸ் நிலையத்தின் முன்னாலுள்ள பலநோக்குக் கட்டிடத்தின் தரைமாடியிலமைந்துள்ள 48 கடை அறைகள் மற்றும் பன்னெகமுவ புதிய பொருளாதார மத்திய நிலையத்தின் 28 கடை அறைகளை குத்தகைக்கு விடுவதற்காக என்னால், 2023 ஜனவரி 04 முதல் 2023 ஜனவரி 26 அன்று மு.ப.10.00 வரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். இக்கடை அறைகளை 2023 ஜனவரி 18 மற்றும் 19 ஆகிய இரு தினங்களிலும் மு.ப.10.00 முதல் பி.ப.3.00 வரை பரீட்சித்துப் பார்க்கலாம்.
02. ரூபா 2,000.00 இற்கான படிவக் கட்டணத்தை செலுத்தி (மீளளிக்கப்படாத) 2023 ஜனவரி 04 முதல் 2023 ஜனவரி 26 அன்று பி.ப.3.00 வரை (வார நாட்களில் மு.ப.10.00 முதல் பி.ப.3.00 வரை) திஸ்ஸமஹாராம பிரதேச சபை அலுவலகத்தில் இதற்கான கேள்விப்படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.
03. கடை அறை ஒன்றிற்காக கேள்வி விண்ணப்பப் படிவத்தொகுதி ஒன்று வீதம் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன், மேலதிக விபரங்களை பிரதேச சபை அலுவலகத்தில் அல்லது 047-2237275 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
04. உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்படிவங்கள் ரூபா 25,000.00 இற்கான பிணையமொன்றுடன், 2023 ஜனவரி 27 அன்று மு.ப.10.00 இற்கு முன்னர் பதிவுத்தபாலில் அல்லது சபை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்த்தல் மூலம் சமர்ப்பிக்கலாம் என்பதுடன் அன்றைய தினம் மு.ப.10.30 இற்கு கேள்விகள் திறத்தல் திஸ்ஸமஹாராம பிரதேச சபை அலுவலகத்தில் இடம்பெறும்.

திஸ்ஸமஹாராம பஸ் நிலையத்தின் முன்னாலுள்ள பலநோக்குக் கட்டிடத்தின் தரைமாடியிலமைந்துள்ள 48 கடை அறைகள் மற்றும் பன்னெகமுவ புதிய பொருளாதார மத்திய நிலையத்தின் 28 கடை அறைகளைக் குத்தகைக்கு விடுதல்

| கட்டிடம் | கடை அறை இலக்கம் | அலகு ஒன்றின் விஸ்தீரணம் ச.அடி | அலகு ஒன்றின் கிட்டிய பரப்பளவு ச.அடி | ஆகக்குறைந்த முற்பணம் (Key money) |
|---|---|---|---|---|
| | 01, 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10, 11, 12, 13, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 36, 46, 47 | 10-15 | 150 | 993,000.00 |
| | 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 37, 38, 39, 40, 41, 42, 43, 44, 45 | 10-15 | 150 | 870,000.00 |
| | 48 | 41-64 | 2624 | 6,000,000.00 |
| | 01, 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28 | 19'. 3" x9' . 6" | 183 | 250,000.00 |

**தலைவர்**
**டப்ளியு.ஜீ.உபுல்**
**திஸ்ஸமஹாராம பிரதேச சபை**

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்

நெடுஞ்சாலைகள் அமைச்சு

வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

**இலங்கையின் அதிவேக நெடுஞ்சாலை வருமானத்திலிருந்து நிதியிடப்பட்டது**

**தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்**

**அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவிற்காக 200,000 Thermal Paper Rolls வழங்குவதற்கான அழைத்தல்**

1. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் 200,000 எண்ணிக்கையான two boarders printed thermal paper rolls ஐ வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாக அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக் கொண்டு (தொலைபேசி: 038-2289122. தொலைநகல்: 038-2289560) அலுவலக நேரங்களில் இலவசமாக விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
3. 2023 சனவரி 04 ஆம் திகதியிலிருந்து 2023 சனவரி 18 ஆம் திகதியன்று வரையும் (வர்த்தக விடுமுறை தினங்கள் மற்றும் வார இறுதிகள் நீங்கலாக) மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 2,500 ரூபா + ஏற்புடையதான வரிகளையும் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களை பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, **EOM&M** பிரிவின் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யலாம்.
4. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2023 சனவரி 19 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, **EOM&M** பிரிவின் பணிப்பாளருக்கு ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"RDA/EOM&M/PRC/2023/TOLL/01"** என தயவு செய்து குறிந்துரைக்கவும்.
5. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, **EOM&M** பிரிவின் பணிப்பாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்குப்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**EOM&M பிரிவின் பெறுகைக் குழு,**
**பணிப்பாளர் (EOM&M பிரிவு) மே/பா.,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம.**

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்**

## விலைமனு அழைப்பு

**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல்**

**ஒப்பந்த இல.: DIE/PRO/03/2022/35**

1. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் சார்பில் திணைக்களத்தின் கொள்முதல் குழுத் தலைவரினால் தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகங்களுக்கு பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.
2.

| | |
|---|---|
| 1. | பிரதான அலுவலகம், "சுஹுருபாய", ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை. |
| 2. | திருகோணமலை துறைமுகத்தின் உத்தியோகத்தர் ஓய்வறை. |
| 3. | கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் உத்தியோகத்தர் ஓய்வறை. |
| 4. | ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் உத்தியோகத்தர் ஓய்வறை. |
| 5. | மத்தலை சர்வதேச விமான நிலையத்தின் உத்தியோகத்தர் ஓய்வறை. |
| 6. | கண்டி பிராந்திய அலுவலகம். |
| 7. | வவுனியா பிராந்திய அலுவலகம். |
| 8. | குருநாகல் பிராந்திய அலுவலகம். |
| 9. | மாத்தறை பிராந்திய அலுவலகம். |
| 10. | மிரிஹான வெளிநாட்டவர் தடுப்பு முகாம். |
| 11. | யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் உத்தியோகத்தர் ஓய்வறை. |

3. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் நடைமுறையின் கீழ் இந்த விலைமனுக் கோரல் நடாத்தப்படும்.
4. இதில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் இது தொடர்பான மேலதிக விபரங்களை, பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, "சுஹுருபாய", 5 ஆம் மாடி, "B" பகுதியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன், விலைமனு ஆவணங்களை அதே முகவரியில் வைத்து வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை பரீட்சிக்கலாம்.

**தொடர்புகளுக்கு: தொலைபேசி இல.: 011 – 5329530 / 011 – 5329535 தொலைநகல்: 011 - 2879091**

5. மீளளிக்கப்படாத ரூபா ஐயாயிரத்து ஐந்நூறு (ரூ. 5,500/-) கட்டணத்தைச் செலுத்தி, எழுத்துமூல விண்ணப்பமொன்றை பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, "சுஹுருபாய", 5 ஆம் மாடி, "B" பகுதியில் அமைந்துள்ள குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடம் சமர்ப்பிப்பதன் மூலம், 2023.01.04 ஆம் திகதி தொடக்கம் 2023.01.24 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை, அச்சிடப்பட்ட முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை, மூலப் பிரதி (Original), இணைப் பிரதி (Duplicate) என இரு (02) பிரதிகளில் தயாரித்து 2023.01.24 ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, தலைவர், திணைக்களக் கொள்முதல் குழு, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், சுஹுருபாய, 5 ஆம் மாடி, "B" பகுதி, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் வந்து ஒப்படைத்தல் வேண்டும். விலைமனுக் கோரல் முடிவடைந்த உடனே மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் வருகைத்தருவதற்கு விருப்பம் தெரிவித்த விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதுடன், அவை திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
7. விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியிலிருந்து 105 நாட்களுக்கு அல்லது ஏதேனுமொரு நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்கு விலைமனுக்கள் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.
8. எல்லா விலைமனுக்களும் விலைகூறல் ஆவணத்தில் பந்தி 3.4 இல் காட்டப்பட்டுள்ளவாறு விலைமனு காப்பீடொன்றுடன், குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் பெயரில் அனுப்பப்படல் வேண்டும் என்பதுடன், விலைமனுக் காப்பீடானது ரூபா நான்கு இலட்சம் (ரூ. 400,000/-) பெறுமதியைக் கொண்டதும், 2023.05.10 ஆம் திகதி வரை செல்லுபடியான இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்குகின்ற வர்த்தக வங்கியொன்றால் விநியோகிக்கப்பட்டதுமாக இருத்தல் வேண்டும்.
9. விலைகூறல் முன் சந்திப்பொன்று 2023.01.17 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, "சுஹுருபாய", 5 ஆம் மாடியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகத்தில் நடைபெறும்.

**தலைவர்**
**திணைக்களக் கொள்முதல் குழு**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,**
**"சுஹுருபாய", ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை.**

# இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடர்: இந்திய அணியில் பூம்ராவுக்கு அழைப்பு



இலங்கைக்கு எதிரான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடருக்கான இந்திய அணியில் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பூம்ரா சேர்க்கப்பட்டுள்ளார்.

முதுகுப் பகுதியில் ஏற்பட்ட உபாதை காரணமாக பூம்ரா கடந்த ஆண்டு செப்டெம்பர் தொடக்கம் போட்டிகளில் பங்கேற்கவில்லை. அது தொடக்கம் அவர் பெங்களூரில் இருக்கும் தேசிய கிரிக்கெட் அகடமியில் காயத்தில் இருந்து மீண்டுவரும் நடவடிக்கையில் ஈடுபட்டார்.

இலங்கை ஒருநாள் தொடருக்கான இந்திய குழாம் கடந்த டிசம்பர் 27 ஆம் திகதி அறிவிக்கப்பட்டபோதும் அதில் பூம்ரா இடம்பெறவில்லை. அப்போது அவர் உடல் தகுதியுடன் இருந்தபோதும் அணியில் சேர்க்கப்படவில்லை.

இந்நிலையில் ஒரு வாரத்திற்கு பின்னர் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை வெளியிட்டிருக்கும் அறிவிப்பில், “வேகப்பந்து வீச்சாளர் மறுவாழ்வில் ஈடுபட்ட நிலையில் தேசிய கிரிக்கெட் அகடமியால் அவர் உடல் தகுதி பெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் இந்திய ஒருநாள் குழாத்துடன் விரைவில் இணைவார்” என்று குறிப்பிடப்பட்டுள்ளார்.

இலங்கையுடனான டி20 தொடரில் ஹார்திக் பாண்டியா தலைமையிலான இளம் இந்திய அணி ஆடுகின்றபோதும் ஒருநாள் தொடருக்கு ரோஹித் ஷார்மா அணித்தலைமை பதவிக்கு திரும்புவதோடு விராட் கொஹ்லியும் ஓய்வுக்குப் பின் அணிக்கு திரும்பவுள்ளார்.

இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கு இடையிலான மூன்று ஒருநாள் போட்டிகளும் வரும் ஜனவரி 10, 12 மற்றும் 15 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

**இந்திய குழாம்:** ராஹித் ஷர்மா (தலைவர்), சுப்மன் கில், விராட் கொஹ்லி, சூரியகுமார் யாதவ், ஷ்ரயாஸ் ஐயர், கே.எல். ராகும் (வி.கா.), இஷான் கிஷான் (வி.கா.), ஹார்திக் பாண்டியா (உப தலைவர்), வொசிங்டன் சுந்தர், யுஸ்வேந்திரா சஹல், குல்தீப் யாதவ், அக்சார் படேல், ஜஸ்பிரிட் பூம்ரா, மொஹமட் ஷமி, மொஹமட் சிராஜ், உமர் மாலிக், அர்ஷ்தீப் சிங்.

# ஐ.சி.சி விருதில் இலங்கை வீரர்களுக்கு இடமில்லை









கடந்த ஆண்டு பல்வேறு பிரிவுகளில் சிறப்பாக செயல்பட்ட வீரர்களை தேர்வு செய்வதற்கான போட்டியாளர்களின் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் வெளியிட்டுள்ளது.



ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர், சிறந்த கிரிக்கெட் வீராங்கனை, சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் வீரர், சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரர், சிறந்த டி20 கிரிக்கெட் வீரர், வளர்ந்து வரும் வீரர் மற்றும் வீராங்கனை என மொத்தம் 13 விருதுகள் வழங்கப்பட உள்ளன.

இதில் 2022ஆம் ஆண்டின் சிறந்த வீரருக்காக வழங்கப்படுகின்ற சேர் கார்பில் சோர்பஸ் விருதுக்கு 4 வீரர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அசாம், சிம்பாப்வே அணியின் சகலதுறை வீரர் சிக்கந்தர் ராசா, நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளர் டிம் சவுத்தி மற்றும் இங்கிலாந்தின் பென் ஸ்டோக்ஸ் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

எனினும் 2022 ஐ.சி.சி விருதுகள் பட்டியலில் எந்தவொரு பிரிவிலும் இலங்கை வீரர்கள் எவரும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

2022 வெற்றியாளர்களைத் தெரிவு செய்ய உலகின் முன்னணி கிரிக்கெட் ஊடக பிரதிநிதிகளை உள்ளடக்கிய சிறப்பு ஐசிசி வாக்களிப்பு அகடமியுடன் கிரிக்கெட் ரசிகர்களுக்கும் தங்கள் வாக்குகளை அளிக்கலாம். இதற்கான வாக்களிப்பு அடுத்த வாரம் ஆரம்பமாக உள்ளது.




இலங்கை நீர் விளையாட்டு ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கனிஷ்ட பிரிவு நீச்சல் சம்பியன்சிப் போட்டியில் தேசிய சாதனையுடன் 05 தங்கப்பதக்கங்களை வென்ற கொழும்பு சாஹிர கல்லூரி மாணவர் எம்.எப். முஹமதுடன் அந்தக் கல்லூரியின் அதிபர் ரிஸ்வி மரிக்கார், நீச்சல் பொறுப்பாசிரியர் டபிள்யூ.ஏ.எஸ்.கே. வீரசூரிய மற்றும் நீச்சல் பயிற்சியாளர் எம்.எம்.எம். பவாஸ் ஆகியோரை படத்தில் காணலாம்.

(படம்: ருஸைக் பாரூக்)

# பேத்தழை இளந்தளிர் சம்பியன்

*மாளிகைக்காடு குறூப் நிருபர்*



தியாவட்டவான் அர்ரஷாத் பிரீமியர் லீக் மென்பந்து கிரிக்கெட் போட்டியில் தியாவட்டவான் அர்ரஷாத் அணியை வீழ்த்தி பேத்தழை இளந்தளிர் அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது.

அரபா வித்தியாலய மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் 17 அணிகள் பங்கற்றன. இதன் இறுதிப் போட்டியில் இளந்தளிர்" அணி 88 ஓட்டங்களை நிர்ணித்து அதனை காத்து வெற்றியீட்டியது.

இந்தத் தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக ஜீ. அலெக்ஸ் தெரிவு செய்யப்பட்டதுடன், சிறந்த பந்துவீச்சாளராக க. ராகுல் தெரிவானார்.



தேசிய ரீதியில் பதக்கம் வென்ற ஹெம்மாதகம அல் அஸ்ஹர் மகா வித்தியாலய மாணவன் சயாப் சியாமுக்கு பாடசாலை சமூகம் இணைந்து நடத்திய பாராட்டு விழாவின்போது பிடிக்கப்பட்ட படத்தினை காணலாம்.

## சர்வதேச செய்திகள்

# திருடிய சவப்பெட்டியினை எகிப்திடம் திருப்பியளிப்பு



அமெரிக்க அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த எகிப்தில் இருந்து திருடப்பட்ட பண்டைய சவப்பெட்டி ஒன்று மீண்டும் எகிப்துக்கு திருப்பி அளிக்கப்பட்டுள்ளது.

9.5 அடி நீண்ட “பச்சை சவப்பெட்டி” என்று அழைக்கப்படும் அந்த சவப்பெட்டி கி.மு. 664 தொடக்கம் கி.மு. 332 வரை நீடித்த பிற்பட்ட வம்சத்தைச் சேர்ந்ததாகும். அது அன்கன்மாத் என்று அழைக்கப்படும் மத குருவர் ஒருவருடையதாகும். இந்த சவப்பெட்டி கலைப் பொருட்களை கடத்தும் வலையமைப்பு ஒன்றால் வடக்கு எகிப்தில் உள்ள அபூசிரிலில் இருந்து திருடப்பட்டது.

கலைப்பொருட்களை சேகரிப்பவர் ஒருவரால் இந்த சவப்பெட்டி ஹௌஸ்டன் அருங்கட்சியகத்திற்கு வழங்கப்பட்ட நிலையில் 2013 தொடக்கம் அது அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த திங்களன்று கெய்ரோவில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் அமெரிக்க இராஜதந்திரிகளால் இந்த சவப்பெட்டி எகிப்திடம் கையளிக்கப்பட்டது.

# கொவிட் அலைக்கு எதிரான பாக். தயார்நிலையில் குறை

கொரோனா பரவும் அச்சுறுத்தலை தடுப்பதில் பாகிஸ்தானில் குறைவான தயார்நிலையே இருப்பதாக அந்நாட்டின் நோய்த் தொற்று குறித்து கண்காணிக்கும் தேசிய கட்டளை மற்றும் செயற்பாட்டு பிரிவு குறிப்பிட்டுள்ளது.

பாக். விமானநிலையங்களில் கொவிட் சோதனை போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகள் இல்லாமல் இருப்பதாக டோன் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஞாயிறன்று 15 புதிய தொற்றுச் சம்பவங்கள் பதிவானதாக பாகிஸ்தான் சுகாதார தேசிய நிறுவனத்தை மேற்கோள்காட்டி அந்தப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. இதில் நோய்த்தொற்று வகிதம் 0.4 என்பதோடு 14 நோயாளர்கள் அபாயகரமான நிலையில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் வைரஸ் பரவும் வேகம் கடந்த மாதங்களில் அதிகரித்து வருவதாக மருத்துவர் ஜாவிட் அக்ரம், டோனுக்குத் தெரிவித்துள்ளார். புதிய வைரஸ் பிறழ்வுக்கு எதிராக தடுப்பூசி செயல்டுவதற்கான ஆதாரம் கிடைக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 63 ரஷ்ய படையினர் பலி



ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள வட்டாரத்தில் புத்தாண்டின்போது உக்ரைன் நடத்திய தாக்குதலில் தனது 63 வீரர்கள் கொல்லப்பட்டதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

துருப்பினர் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த இடத்தைக் குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு கூறியது.

அமெரிக்காவின் ஹிமர்ஸ் ரொக்கட் தாக்குதலில் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்பட்டது.

பத்து மாதமாக நீடிக்கும் போருக்கு இடையே, ஒரே சம்பவத்தில் ரஷ்யா ஒப்புக்கொண்டுள்ள அதிகமான உயிரிழப்பு இதுவாகும்.

கிழக்கு உக்ரைனில் ரஷ்யா ஆக்கிரமித்துள்ள மாக்கிவ்கா நகரில் தாக்குதல் நடத்தப்பட்டதாக உக்ரைன் கூறியது. எதிரிப்படையின் பத்து இராணுவச் சாதனங்கள் வரை அழிக்கப்பட்டதாகவும் சேதப்படுத்தப்பட்டதாகவும் அது கூறியது.

தாக்குதலில் ரஷ்யப் படையினர் சுமார் 400 பேர் கொல்லப்பட்டதாக உக்ரைன் குறிப்பிட்டபோது ரஷ்யா அதனை மறுத்தது.

# அல் அக்சா வளாகத்திற்குள் இஸ்ரேலிய அமைச்சர் நுழைந்ததால் பெரும் பதற்றம்



இஸ்ரேலின் தீவிர வலதுசாரியான தேசிய பாதுகாப்பு அமைச்சர் இடாமர் பென் கிவிர் ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு ஜெரூசலத்தில் அல் அக்சா பள்ளிவாசல் வளாகத்திற்குள் நுழைந்ததை அடுத்து பெரும் பதற்ற சூழல் ஏற்பட்டுள்ளது. இந்த செயல் பலஸ்தீனர்கள் இடையே பெரும் ஆத்திரத்தை தூண்டக் கூடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

பென் கிவிர் கடுமையான பொலிஸ் பாதுகாப்புடன் நேற்று (04) அல் அக்ஸா வளாகத்திற்குள் நுழைந்துள்ளார். இந்த வளாகம் இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன பிரச்சினையில் முக்கிய புள்ளியாக உள்ளது.

பிரதமர் பென்ஜமின் நெதன்யாகுவின் அரசு பதவி ஏற்று ஐந்து நாட்களே ஆன நிலையிலேயே இந்த பதற்ற சூழல் ஏற்பட்டுள்ளது

குன்றின் உச்சியில் இருக்கும் இந்த தலம், யூதர்களின் புனித இடம் என்பதோடு முஸ்லிம்களின் மூன்றாவது புனிதத் தலமாக உள்ளது. இந்த வளாகத்திற்குள் யூதர்கள் மற்றும் முஸ்லிம் அல்லாதோருக்கு செல்ல அனுமதி இருந்தபோதும் வழிபாடு நடத்த தடை உள்ளது.

இந்நிலையில் இந்த புனிதத் தலத்தில் முஸ்லிம்களின் உரிமையை பறிக்கும் முயற்சியாகவே யூதர்களின் வருகை உள்ளது என்று பலஸ்தீனர்கள் கருதுகின்றனர்.

இந்நிலையில் “எமது அரசு ஹமாஸின் எச்சரிக்கைக்கு அடிபணியாது” என்று பென் கிவிர் குறிப்பிட்டுள்ளார். அவரது செயல் “சிவப்பு எல்லையை” மீறுகிறது என்று ஹமாஸ் எச்சரிக்கை விடுத்ததை அடுத்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

“அல் அக்ஸா மீதான எந்த ஒரு அத்துமீறலும் நிலைமையைத் தீவிரப்படுத்தும் என்பதோடு ஆக்கரமிப்பு அரசு இதற்குப் பொறுப்பேற்க வேண்டும்” என்று ஹமாஸ் பேச்சாளர் அப்தல் லதீப் கனுவா கடந்த திங்கட்கிழமை எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த புனிதத் தலத்திற்கு யூதர்கள் செல்வதற்கான உரிமையை பென் கிவிர் நீண்ட காலமாகக் கோரி வருகிறார். “இந்தத் தலம் அனைவருக்கும் திறக்கப்பட்டுள்ளது. என்னை எச்சரித்துத் தடுக்க முடியும் என்று ஹமாஸ் நினைத்தால் காலம் மாறிவிட்டது என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்” என்று பென் கிவிர் ட்விட்டரில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பிரதமர் பென்ஜமின் நெதன்யாகுவின் அரபு மொழி பேச்சாளர் ஒபிர் ஜென்டல்மன் வெளியிட்ட வீடியோவில், பென் கெவிர் புனித தலத்தில் இருந்து வெளியேறிய பின் முழுமையாக அமைதி நிலவுவதாக குறிப்பிட்டுள்ளார்.

எனினும் பலஸ்தீனர்களுடனான நேரடியான மோதல் ஒன்றை தவிர்க்கும் வகையில் நேற்றுக் காலை நேரத்திலேயே பென் கிவிர் அல் அக்ஸா வளாகத்திற்குள் நுழைந்தார்.

எனினும் கடும்போக்கு அமைச்சர் பென் கெவிர் அல் அக்ஸா பள்ளிவாசலுக்குள் நுழைந்ததை கடுமையாகக் கண்டிப்பதாகவும் இது முன்னெப்போதும் காணாத ஆத்திரத்தையும் அபாயகரமான மோதலையும் தூண்டும் என்றும் பலஸ்தீன வெளியுறவு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பென் கிவிர், அல் அக்ஸா வளாகத்திற்குள் நுழைய திட்டமிட்டிருப்பது பெரும் வன்முறையை தூண்டும் என்றும் பல உயிர்களை காவுகொள்ள வழிவகுக்கும் என்றும் இஸ்ரேலிய எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான யயிர் லபிட் கடந்த திங்கட்கிழமை (02) எச்சரித்திருந்தார்.

2000 ஆம் ஆண்டு இந்த புனித தலத்திற்குள் முன்னாள் பிரதமர் ஏரிய ஷரோன் நுழைந்தது இரண்டாவது பலஸ்தீன இன்திபாதா அல்லது எழுச்சிப் போராட்டத்திற்கு காரணமானது.

நான்கரை ஆண்டுகள் நீடித்த அந்தப் போராட்டத்தில் மூவாயிரத்துக்கும் அகதிமான பலஸ்தீனர்களும் ஆயிரத்துக்கும் அதிகமான இஸ்ரேலியர்களும் கொல்லப்பட்டனர்.

பலஸ்தீனர்கள் தொடர்பில் தீவிர வலதுசாரி சிந்தனையைக் கொண்டிருக்கும் பென் கிவிர் அவர்களை இடம்பெயரும்படி அழைப்பு விடுக்கின்றார். அல் அக்ஸா பள்ளிவாசல் வளாகத்திற்கு அவர் இதற்கு முன்னர் பல தடவை யூதக் குடியேறிகளுடன் இணைந்து நுழைந்துள்ளார். அது கடந்த காலங்களில் பலஸ்தீனர்களுடனான மோதலுக்குக் காரணமாக இருந்தது.

இதில் 2021 மே மாதம் அல் அக்ஸா வளாகத்திற்குள் இஸ்ரேலியப் படையினர் நுழைந்த சம்பவமே அந்த மாதத்தில் இஸ்ரேல் மற்றும் காசா மோதலுக்குக் காரணமானது.

பென் கிவிர் தற்போது இஸ்ரேலிய பொலிஸுக்கு பொறுப்பான அமைச்சராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜனவரி மாதம் 4ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.